இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 268
ஆவணி 5ஆம் நாள்
திங்கட்கிழமை
21 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


## அமெரிக்க தூதுவர் வியப்பு

யாழ்ப்பாணம் நல்லூர் திருவிழாவையும், அங்கு திரண்டுள்ள மக்களின் பக்தியையும் கண்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் அசந்து போயுள்ளார். "யாழ். நல்லூர் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் நம்பிக்கை, கலாசாரம் மற்றும் பக்தி என்பவை மிகவும் சிறப்பான ஒன்று" என தனது உத்தியோகபூர்வ கீச்சகத்தில் (டுவிட்டர்) அவர் பதிவிட்டுள்ளார். யாழ்ப்பா 24

## அடியவர்கள் இடரகல நல்லூரான் தேரில் பவனி



இலட்சோபலட்சம் அடியவர்களின் அரோகரா ஒலி வான் பிளக்க நல்லூர் சண்முகப் பெருமான் நேற்று தேரில் வலம் வந்தார். (வ-37)

(மேலும் படங்கள் பக். 3)

## அரசியல் கைதிகள் மூவர் உணவுஒறுப்புபோராட்டம்

கொழும்பு, ஒக.21
அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் மூவர் நேற்று முதல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். வழக்குகளின் கால எல்லையை நீடிப்பதன் 25

## டெனீஸ் தற்காலிக நீக்கம் ரெலோ நேற்று தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக. 21
வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை ரெலோ அமைப்பிலிருந்து தற்காலிகமாக 6 மாதங்கள், இடைநிறுத்துவதற்கு 25

## கடும் இழுபறிக்குப் பிறகு விந்தனே ரெலோவின் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக. 21
ரெலோ சார்பில் வடக்கு மாகாண அமைச்சரவைக்கு க.விந்தனின் பெயரை அந்தக் கட்சி ஏற்கனவே பரிந்துரைத்திருந்தது. இந்த நிலையில் கட்சியின் நேற்றைய உயர்மட்டக் கூட்டத்தில் அவரைத் தெரிவு செய்ததற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது. எனினும் கடும் இழுபறிக்குப் பின்னர் விந்தனே தமது கட்சியின் 23

# கூட்டமைப்பு - மைத்திரி இன்று கொழும்பில் பேச்சு

### அரசமைப்பு தாமதம் பற்றி ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 21
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பேசவுள்ளது. இதற்காக நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுப் பலநாள்களாகிவிட்டபோதும், அரச தலைவரைச் சந்திக்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி கூட்டமைப் பின் நிலைப்பாட்டை அதன் தலைவர் இரா. சம்பந்தன் இறுக் கமாக இடித்துரைப்பார் என்று தெரிகிறது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு முக்கிய கட்சிகளினதும் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோர் அமர்ந்திருக்கும் போதே அரச தலைவருடன் இந்த விடயம் குறித்துப் பேசித்தீர்க்கமான ஒரு முடிவுக்கு வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்திட்டமிட்டுள்ளது. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்தும் ஆராய்வதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் அழைத்து இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டபோதும் அரசமைப்பு உருவாக்கப் பணியை விரைந்து முடிப்பதற்கு இடையூறாக உள்ள சகல முட்டுக்கட்டைகளையும் நீக்குவது 23

## யாழ்.பல்கலை மாணவன் காய்ச்சலால் உயிரிழப்பு

யாழ், ஒக. 21
காய்ச்சலால் பீடிக்கப்பட்ட யாழ்.பல்கலைக் கழக மாணவன் சிகிச்சை பயன 25

## கட்சி சந்தேகப்பட்டால் பதவி விலகவும் தயார்

### மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக.21
நான் அமைச்சுப் பதவியை என்னுடைய தனிப்பட்ட நோக்கத்துக்காகவே பெற்றுக் கொள்ளவிரும்பினேன் எனக் கட்சி என் மீது சந்தேகப்பட் 25

## தியாகங்கள், துறப்புகளுக்குப்பின்னர் வடக்கு அமைச்சரவை நாளை முதல் தடவையாக கூடுகிறது

### சத்தியலிங்கம் அமைச்சரா இல்லையா என்பதில் குளறுபடி

யாழ்ப்பாணம், ஒக. 21
பதவித் தியாகங்கள், பதவி துறப்புகள் என்று பெரும் களேபரங்களுக்குப் பின்னர் வடக்கு மாகாண அமைச்சர் அவைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ளது. பதவியில் நீடிக்க முடியுமா இல்லையா என்று எதிர்கா லம் அந்தரத் தில் தொங்குகின்ற போதும் மீன்பிடி மற்றும் போக்குவரத் 25

## சுற்றுலாவிகளாக வந்து களவாக தொழில் செய்த 27 இந்தியர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 21
சுற்றுலா நுழைவிசைவில் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 27 இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர் என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்தது.
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவும் கடந்த சில 24

## உயர் தர இரசாயனவியல் பாட கேள்விகள் ஏற்கனவே 'அவுட்'?

### கம்பகா பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஒக. 21
நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்துக்கான வினாத்தாள் முன்னரே வெளியானதா என்பது தொடர்பில் கம்பகா மாவட்டத் 25

## கல் வீடுகளுக்கு விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 21
பொருத்து வீட்டுக்கு கொடுத்த விண்ணப்பங்களை மீளப்பெற்று, கல்வீட்டுக்கு மக்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு 25

## மு.காவுடன் இணைவது ஒருபோதுமே நடக்காது

### ஹசனலி திட்டவட்டம்; முஸ்லிம் கூட்டமைப்பே ஒரே இலக்கு என்கிறார்

அம்பாறை, ஒக. 21
முஸ்லிம் காங்கிரசுடன் மீண்டும் என்னை இணைப்பதற்கான எந்த முயற்சிக்கும் நான் துளியும் இடமளியேன். முஸ்லிம் கூட்டமைப்பு உருவாக்கவிடயத்தில் மும்முரமாகவுள்ளேன். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமும் தூய முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளருமான எம். ரி.ஹஸனலி 25

## நீதி அமைச்சர் இன்று பதவியைத் துறப்பார்

### அவரது இடத்துக்கு ஜயம்பதி விக்ரமரட்ன

கொழும்பு, ஒக. 21
நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச இன்று பதவி விலகுவார் என்றும், புதிய நீதி அமைச்சராக ஜயம்பதி விக்ரமரட்ன நியமிக்கப்படுவார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நேற்றுப் பரபரப்பான பேச்சடிபட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் நடை 25

## தீயில் எரிந்து ஓட்டோ நாசம்



அம்பாறை,ஓக.21
வீட்டொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி திடீரெனத் தீப்பற்றி எரிந்தது.
அதில் முச்சக்கர வண்டி முற்றாகச் சேதமடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் அட்டாளைச்சேனை 8ஆம் பிரிவின் ஹாஜியார் வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றது. தீ ஏற்பட்ட வேளையில் இரு சிறுவர்கள் மாத்திரமே வீட்டில் இருந்துள்ளனர். வீதியால் சென்றவர்கள் முச்சக்கர வண்டி தீப்பற்றியதைக் கண்டனர். உடனே சத்தமிட்டு அயலவர்களையும் அழைத்து தீயை அணைக்க முற்பட்டனர். எனினும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை அயலவர்கள் வருவதற்குள் முச்சக்கர வண்டி தீயில் கருகியது. வீட்டின் மின்மானியிலும் தீ பரவியது.
மின்சார சபையின் ஊழியர்கள், சம்பவ இடத்துக்கு உடன் விரைந்து மின்சாரத்தைத் துண்டித்து, பாதுகாப்பு வழங்கினர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வாக்குறுதி நிறைவேற்றிய பின்னரே அடுத்த தேர்தல்

கொழும்பு,ஓக.21
கடந்த தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய பின்னரே அடுத்த தேர்தலைப் பற்றி நாம் யோசிப்பேடாம்.
இவ்வாறு காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது.
அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது, கூட்டரசு ஆட்சிக்கு வரக் காரணமாக இருந்தவர்கள் வாக்காளர்கள். இந்த அரச தலைமைகள் மீது மக்கள் நம்பிக்கை வைத்தனர். தமது தேவைகளை நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்பினர். அதன் அடிப்படையில் வாக்களித்தனர். கூட்டரசு வெற்றி பெற்றது. அதன் பின்னர் மக்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. பிரதேச வேறுபாடுகள் இல்லாமல் நாட்டில் சகல பிரதேசங்களிலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
பன்னாடுகளின் அபிமானத்தையும் கூட்டரசு பெற்றுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்கு அப்பால் மக்களது நலன்களைக் கவனத்தில் கொள்கிறோம். வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றிய பின்னர் அடுத்த தேர்தல் ஒன்றை யோசிப்போம். மீண்டும் மக்கள் விரும்பும் தலைமைகள் தெரிவு செய்யப்படுவார்கள். என்றார். (ஐ)

## நல்லூர் சென்றவர்கள் விபத்தில் சிக்கிக் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.21
நல்லூர் தேர் திருவிழா வுக்குச் சென்று கொண்டிருந்த தந்தையும், மகளும் விபத்தில் சிக்கினர். காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது. மோட்டார் சைக்கிள் விபத்தில் அவர்கள் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி சப்பச்சிமாவடியைச் சேர்ந்த இருவரே காயமடைந்தனர். (ஐ)



# எங்கள் வலி எவருக்கும் புரியவில்லை

## கேப்பாபிலவு மக்கள் ஆதங்கம்

முல்லைத்தீவு, ஓக. 21
"அரசு கால அவகாசம் கோரி எங்களை வீதிகளில் காத்திருக்க வைத்தது போதும். இனியும் பொய்யான வாக்குறுதிகளை நம்பி நாம் ஏமாறுவதற்குத் தயாரில்லை.
எங்கள் பூர்வீகக் காணிகளை எமக்குத் தாருங்கள்" இவ்வாறு கேப்பாபிலவு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.
கேப்பாபிலவு மக்களின் தொடர் நில மீட்பு போராட்டம், நேற்றுடன் 174 ஆவது நாள்களைக் கடந்துள்ளது.
கேப்பாபிலவு இராணுவத் தலைமையகத்துக்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள உறவுகள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு அவர்கள் வலியுறுத்தினர்."ஒவ்வொரு கட்சிக்காரர்களும், அரசியல்வாதிகளும் இங்கு வந்து செல்கின்றார்கள். தமக்குக் கால அவகாசம் கேட்கிறார்களே தவிர, எமக்குச் சரியான தீர்க்கமான பதிலைப் பெற்றுத் தரவில்லை. அரசு மற்றும் அரசியல்வாதிகள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் வீதியில் இப்படியே இருந்து மடிய வேண்டும் என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. அரசு முடிவு எடுத்திருந்தால் காலத்தை இழுத்தடிக்காமல் எங்களுக்குத் தீர்வைத் தந்திருக்கலாம். போராட்டக்களத்தில் வயோதிபர்கள், சிறுவர்கள், நோயாளர்கள் என்று பலதரப்பட்டோர் இருக்கின்றோம். அவர்களைப் பற்றியாவது சிந்தியுங்கள். போராட்டக் காலங்களில் நாம் பல அவலங்களைச் சந்திக்கின்றோம். நிம்மதி இல்லாமல் இருக்கின்றோம். ஒரு அரசியல்வாதியாவது ஒரு நாள் இரவும், பகலும் எங்களுடன் இருந்து பாருங்கள் எங்கள் வலி உங்களுக்குப் புரியும்" என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.
அதேவேளை அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் வழங்குவதாகக் கூறிய 148 மில்லியன் ரூபா நிதி கிடைத்ததும், முல்லைத்தீவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன கடந்த 15ஆம் திகதி தெரிவித்திருந்தார். முல்லைத்தீவிலுள்ள இராணுவத்தின் தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளை வேறு இடத்தில் அமைப்பதற்கு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் 148 மில்லியன் ரூபா வழங்குவதாகக் கூறியிருந் தார். நிதி கிடைத்த பின்னர் முல்லைத்தீவில் இராணுவத்தின் முக்கிய முகாம்கள் வேறிடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். அதனடிப்படையில் முல்லைத்தீவில் உள்ள 111 ஏக்கர் காணி விரைவில் விடுவிக் கப்படும் எனவும் அவர் கூறியிருந்தார்.
அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் வெளிநாடுகளின் தூதுவர்களுக்குக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தார். காணி விடுவிப்புத் தொடர்பில் அரச தலைவருடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருந்தார். (ஐ-10)

## மூன்று வாகனங்கள் விபத்து: 12 பேர் காயம்

கொழும்பு.ஓக.21
இரு பாரவூர்திகள் மற்றும் வான் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் 12 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து கேகாலை கரடுபனப் பிரதேசத்தில் நேற்று நடந்தது. விபத்தில் காயமடைந்தவர்கள் கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்தின் காரணமாகக் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சந்தேகநபர் இருவர் கைது

திருமலை, ஓக. 21
மீன்பிடிப்படகின் இஞ்சின்களைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். திருகோண மலை மட்டக்களப்பு பிரதான வீதி வெருகல் பாலத்துக்கு அருகில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் வீதியில் வாகனங்களைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். அதன் போது அந்த வீதியால் பயணித்த கப்ரக வாகனத்தை வழிமறித்தனர். வாகனத்தில் மீன்பிடிப்படகின் இஞ்சின்கள் இருந்தன. வாகனத்தில் இருந்த நால்வரிடம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். அதன்போது இருவர் அங்கிருந்து தப்பியோடினர். விசாரணையில் மீன்பிடிப்படகின் இஞ்சின்களைத் திருடி விற்பனைக்குக் கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்தது. வாகனத்தின் சாரதியையும், உதவியாளரையும் பொலிஸார் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ஐ-10, 45)

## ஏறாவூர் நகர அபிவிருத்தி திட்டங்களுக்கு அடிக்கல்



மட்டக்களப்பு, ஓக. 21
ஏறாவூர் நகரில் மேற்கொள்ளப்படவுள்ள பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.
கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அகமட் தலைமையில் அடிக்கல் நடும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.
நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபா உட்பட்ட குழுவினர் அடிக்கல்லை நட்டு வைத்தனர். அதில் ஏறாவூர் ஆதார மருத்துவமனைக்கான மூன்று மாடிக் கட்டடத் தொகுதி மற்றும் மருத்துவர்களின் தங்குமிடக் கட்டடத் தொகுதி, ஏறாவூர் வாவிக்கரை சுற்றுலா பொழுது போக்கு விற்பனை மற்றும் தகவல் மையம் என்பவற்றுக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.
ஏறாவூரின் வாவிக்கரை பூங்காவை அண்மித்த பகுதியில் சுற்றுலா பொழுது போக்கு விற்பனை மற்றும் தகவல் மையம் சுமார் 100 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. அதேவேளை ஏறாவூர் ஆதார மருத்துவமனைக்கான மூன்று மாடிக் கட்டடத் தொகுதி மற்றும் மருத்துவர்களின் தங்குமிட கட்டடத் தொகுதி என்பன 158 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.


பணி வேண்டுகை
செய்திப் பத்திரிகை
உதவி ஆசிரியர்கள் (பயிற்சி)
ஆகக் குறைந்த கல்வித் தகைமை:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் தமிழ்ப் பட்டதாரி.
அல்லது
எழுத்துத் துறையில் சிறந்த ஆளுமை உள்ளவராக இருத்தல்.
(எந்தத் துறைசார் பட்டதாரியாகவும் இருக்கலாம்)
நேர்முகத் தேர்வு
23.08.2017 புதன்கிழமை
நடைபெறும்.
நேர்முகத் தேர்வுக்கான
நேரத்தை
021 492 7481
என்ற தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு கொண்டு
பெற்றுக் கொள்ளுங்கள்.






















மேலதிக
படங்கள்
காணொலிகள்
DIGITAL
newuthayan.com
இல்



# இன ஒற்றுமை நாட்டில் இல்லை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.21
நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும், இனங்களுக்கு இடையில் இன்னமும் ஒற்றுமை ஏற்படவில்லை. கூட்டரசை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்து விடும் என்று சில அரசியல் தலைமைகள் எண்ணியிருந்தன. ஆனாலும் அவர்கள் எதிர்பார்த்த ஒற்றுமை நாட்டில் ஏற்டவில்லை. இவ்வாறு நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
போருக்குப் பின்னர் அபிவிருத்தி என்ற விடயத்தில் இனங்கள் இடையே புரிந்துணர்வு இல்லை. அபிவிருத்திகளைப் பகிர்ந்து கொள்வதில் இனங்களுக்கிடையில் இன்னமும் சந்தேகம் நிலவுகின்றது. அரசியல் தலைமைகள் கூட்டரசை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்து விடமாட்டாது. அது அடி மட்ட சமூக மக்களின் புரிந்துணர்விலி ருந்து வர வேண்டும். அரச ஊழியர் நியமனங்களில், பதவி நிலைகளில், நிறைவேற்று அதிகாரங்களில் சமத்துவம் பேணப்பட வேண்டும். இப்படிப் பல்வேறு குறைபாடு களுக்கு மத்தியில் தான் ஒரு நெருக்கடியான ஆட்சியை எங்களுடைய கிழக்கு மாகாண முதலமைச்சர் நடத்துகிறார். அவர் சகல கட்சிகளும் சேர்ந்த ஒரு தேசிய அரசை கிழக்கு மாகாணத்திலே நடத்திக் கொண்டு வருகின்றார். தமிழ் மக்களுக்கு உரிய பங்கு அபிவிருத்திக்குப் போக வேண்டும் என்பதற்காக எனது அமைச்சினூடாக 200 மில்லியன் ரூபாவை மட்டக்களப்பு நகரில் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக செலவு செய்திருக்கின்றோம். மேலும் வேண்டுகோள்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அவற்றையும் பரிசீலனை செய்து நிறைவேற்றித் தரத் தயாராக இருக்கின்றோம். கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல்லாயிரம் மில்லியன் ரூபா செலவில் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகிறது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிட்டிய காலத்தில் அரசியலிலே ஏராளமான சவால்களை எதிர் கொண்டது. முன்னாள் ஆட்சியாளர்களின் எடுபிடியாக இருந்த ஏறாவூரைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் பொதுத் தேர்தலுக்கு முன் தான் பதவிநீக்கம் செய்வதாக நாடகமாடினார்.

கட்சித் தலைவர் என்கின்ற வகையில் நான் கட்சிக்குள் சலசலப்புக்குள் ஏற்படாமல் இருக்கின்ற விடயத்திலே வெளிப்படையாகச் சில மனஸ்தாபங்களைக் கை யாள வேண்டியுள்ளது.

முதலமைச்சர் இந்த மாகாணத்தில் திறமையாக நிர்வாகத்தைக் கொண்டு செல்கின்றார். இன்னும் விட்டுக் கொடுப்புக்களைச் செய்து எதிரிகளை முறியடிக்கலாம் என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்த தேர்தல், அதற்கடுத்த ஆட்சி எல்லாவற்றிலும் கிழக்குப் பூமி செளபாக்யம் நிறைந்ததாக, இன ஒற்றுமை மிளிரக் கூடியதாக மலர வேண்டும். (ஐ-10, 46)

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி புவனேஸ்வரன் (சின்னவன்)



உடுபிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி புவனேஸ்வரன் (சின்னவன்) நேற்று (20.08. 2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் ஜமுனாவின் அன்புக் கணவரும் சுவர்ணா (கனடா), மயூரன் (ஜேர்மன்), றிசோந்தினி, தக்ஷினி, கிருசாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், டுலிப்குமாரின் மாமனும் வைசாக், டீதிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
0778 8571927

# சடலம் மீட்பு

வவுனியா, ஓக. 21
ஐந்து பிள்ளைகளின் தாயொருவர் கிணற்றிலிருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டார். வவுனியா நெளுக்குளம் சாம்பல்தோட்டம் பகுதியைச்சேர்ந்த தியாகராசா நகுலேஸ்வரி (வயது 46) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தாயாரைக் காணவில்லை என அவரின் பிள்ளைகள் தேடினர். அவர்கள் கிணற்றை எட்டிப் பார்த்த போது தாயார் உயிரிழந்த நிலையில் கிணற்றில் இருந்துள்ளார். அயலவர்களின் உதவியுடன் சடலத்தை மீட்டனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. தாயார் சற்று மனநலம் பாதிப்படைந்தவர் என்று அவரது மகள் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ-10)

# நிகழ்வைப் புறக்கணித்தார் ஹிஸ்புல்லாஹ்

மட்டக்களப்பு,ஓக.21
மட்டக்களப்பு ஏறாவூர் நகரசபைக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொள்ளவில்லை. "தனது முழுமையான நிதி ஒதுக்கீட்டிலும், பங்களிப்புடனும் நகர சபையின் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. அரசியல் இலாபங்களுக்காக தன்னைப் புறக்கணித்து விட்டுத் திறக்கவுள்ளனர். தலைமை அமைச்சர் கலந்து கொள்ளும் அந்த நிகழ்வில் தான் கலந்து கொள்ள மாட்டேன்" என்று அவர் ஏற்கனவே அறிவித்திருந்தார். அதன் பிரகாரம் அவர் நேற்றைய நிகழ்வில் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மகிந்த வீழ்ச்சிக்கு கடனே காரணம்

## மட்டக்களப்பில் தெரிவித்தார் ரணில்

மட்டக்களப்பு, ஓக. 21
கடந்த காலத்தில் நாட்டுக்கு ஏற்பட்ட கடன் சுமையை ஈடுகொடுக்க முடியாது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச திண்டாடினார். தேர்தலில் மக்கள் துரிதமாகச் செயற்பட்டனர். அப்படிப்பட்ட ஒருவரிடம் ஆட்சியைத் தொடர்ந்தும் கொடுக்க முடியாது என்பதால் மகிந்தவைத் தோற்கடித்தனர்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். மட்டக்களப்பு ஏறாவூரில் அமைக்கப்பட்ட நகர சபையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
பல நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய அரசு ஆட்சியைப் பொறுப்பேற்றது. நாட்டின் வருமானத்தைப் படிப்படியாக அதிகரித்துள்ளது. முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு சிங்கப்பூரிலுள்ள அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளோம். இந்தத் திட்டம் முடிவடைந்ததும், இந்தியா மற்றும் ஜப்பான் இங்கு கூடுதலான கவனத்தைச் செலுத்தும்.

இன்னும் பத்து வருடங்களில் இதன் மூலம் முதலீடுகள் அதிகரிக்கும். வானூர்தி சேவையை அபிவிருத்தி செய்வதற்காக வானூர்தி நிலையங்களை அபிவிருத்தி செய்கிறோம்.

அதனடிப்படையில் மட்டக்களப்பு வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம். கிழக்கு மாகாணத்தில் விலங்கு வேளாண்மை உள்ளிட்ட கைத்தொழில்களை வளர்ச்சி பெறச் செய்ய உதவிகள் வழங்கவுள்ளோம்.

அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது. அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுடன் இணைந்த இந்த அரசு பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களைச் செய்துள்ளது. அபிவிருத்திச் செயற்பாடுகள் செய்கின்ற போது தொழில்வாய்ப்புக்கள் அதிகரிக்கும். அதன் மூலம் அனைத்துப் பிரதேசங்களும் வளர்ச்சி பெறும். அதனைச் செய்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை அனைவரும் வழங்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கையெடுத்து வருகிறோம். அடுத்த பத்து ஆண்டுகளில் தென்பகுதி போன்று சுற்றுலாத்துறையில் கிழக்கு மாகாணமும் அபிவிருத்தியடையும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர்கள் என்னைச் சந்தித்து பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பாக பேசினார்கள். இது தொடர்பாகக் கல்வி அமைச்சருடன் பேசி கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 700 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துள்ளோம். தொழில் இல்லாத பட்டதாரிகள் பெரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கி றார்கள். இவர்கள் பல ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறார்கள். அந்த அடிப்படையில் அபிவிருத்தி உதவியாளர் என்ற அடிப்படையில் 20 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கு எனது அமைச்சிலிருந்து விண்ணப்பம் கோரியுள்ளேன். அவர்கள் பிரதேசத்தின் வருமானம், கைத்தொழில், பெண்களின் நடவடிக்கைகள் உட்பட பல வேலைகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்களுக்கு முதலில் பயிற்சிகள் வழங்கப்படும். அதனையடுத்து பொறுப்புக்கள் வழங்கப்படும். தேசிய வருமானம் வட்டியைக் கொடுப்பதற்குப் போதாமல் உள்ளது. அதனால் இவர்களை இணைத்துக்கொள்ள சற்று காலதாமதம் எடுத்தது.- என்றார். (ஐ-10, 47,46)

# 'நபிகள் நாயகம்' கவிதை நூல் வெளியீடு

மூதூர், ஓக. 21
கிண்ணியா கலாபூசணம் கவிஞர் பீ.ரீ.அஸீஸ் எழுதிய நபிகள் நாயகம் கவிதைகளின் தொகுப்பு நூல் நேற்று வெளியிடப்பட்டது. கிண்ணியா நூலக மண்டபத்தில் நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. நூலின் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், முன்னாள் நகர சபை தலைவர் ஹில்மி மஹ்ரூப், கிண்ணியா உலமா சபை மற்றும் சூரா சபைத்தலைவர் ஏ.எம்.ஹிதாயத்துல்லா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். முன்னோடிகள் கலை இலக்கிய வட்டம் ஏற்பாட்டில் நூல் வெளியிடப்பட்டது. (ஐ-10, 40)



# வாழும் காலத்தில் பிறருக்கு உதவும் பண்பை வளர்ப்போம்

## பொலிஸ்மா அதிபர் அறிவுரை

மட்டக்களப்பு, ஓக. 21
நாம் வாழும் காலத்தில் பிறருக்கு உதவும் நல்ல பண்புகளை வளர்க்க வேண்டும். இதுவே எங்களுடைய வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைத் தரும். இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார். ஸ்ரீ சத்திய சாயிபாபா அமைப்பால் மட்டக்களப்பு கிராங்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ சத்திய சாயி கருணாலயம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நாம் வாழும் காலத்தில் பிறருக்குப் பயனுள்ளவர்களாக வாழ வேண்டும். சிலர் தாம் வாழும் காலத்தில் பேசப்படுபவர்களாகவும், அவர்கள் இறந்த பின்னரும் மற்றவர்களின் மனத்துக்குள் இடம் பிடித்தவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் பிறருக்குச் செய்த உதவிகளே அவர்களைப் பெரிய மனிதர்களாக அடையாளப் படுத்துகிறது. மனிதர்கள் இந்த உலகில் பிறக்கின்றனர் வாழ்கின்றனர். பின்னர் இறக்கின்றனர் இதுதான் உண்மை. நாம் வாழும் காலத்தில் பிறருக்குப் பயன் படாத வகையில் வாழக்கூடாது. இந்த உலகத்தில் வாழ்ந்த உத்தமர்களில் ஒருவராகத்தான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்கள் போற்றப்படுகின்றார். அதனால் தான் மக்கள் அவரை உள்ளங்களில் தினமும் தியானித்துக் கொண்டிருக்கின்றனர். நாம் அனைவரும் எமது நாட்டுக்கும் மக்களுக்கும், சேவை செய்கின்ற பாக்கியசாலிகளாகத்திகழ வேண்டும். எனவே ஸ்ரீ சத்திய சாயிபாபா அமைப்பின்ரால் இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும் இலவச மருத்துவ சேவையைப் பெற்றுப் பயனடைய வேண்டும். இந்த நிலையத்தை கௌரவமான முறையில் பாதுகாத்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-10, 46)

# வலி.வடக்கு கிராமங்களில் குடிதண்ணீர்த் தாங்கிகள்

யாழ்ப்பாணம், ஓக.21
வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மூன்று இடங்களில் பிளாஸ்ரிக் தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்படவுள்ளன. சாவகச்சேரி பிரதேசசபையினரால் இந்த தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளன.

இடர்முகாமைத்துவ அமைச்சால் வழங்கப்பட்ட இந்தக் குடிதண்ணீர்த் தாங்கிகள் வரணி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை வளாகத்திலும், துனுக்காய் முருகையன் ஆலய முன்றிலிலும், வரணி வடக்கு 6ஆம் கட்டை கீழ் அம்மன் வீதியின் நடுப்பகுதியிலும் இவை வைக்கப்பட்டுள்ளன.

கடும் வரட்சி காரணமாக குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், இவ்வாறு பொதுமக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக இந்தத்தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளன. (ய-122)

# கமநல காப்புறுதி சபையால் சாவகச்சேரியில் 11பேர் நியமனம்

சாவகச்சேரி, ஓக.21
சாவகச்சேரி கமநல சேவைப்பிரிவினுள் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் மோட்டார் வாகன மூன்றாம் நபர் காப்புறுதி ஆலோசகர்களாக 11 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

குறித்த கமநல சேவைகள் பிரிவினுள் இயங்கும் கமக்கார அமைப்புகளில் இருந்து இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனச் சான்றிதழ்கள் அண்மையில் யாழ்ப்பாணம் பொதுநூலககேட்போர்கூடத்தில்இடம்பெற்றநிகழ்வொன்றில்வைத்துவழங்கப்பட்டது.

இந்த நியமனம் பெற்றவர்கள் விவரம் வருமாறு:
வி.விவேகானந்தம், இ.பரமேஸ்வரன், பொ.தர்மலிங்கம், இ.வேலுப்பிள்ளை, இ.கிருஸ்ணமூர்த்தி, சி.அருணாசலம், க.ஸ்ரீபஞ்சலிங்கம், த.சின்னத்தம்பி, க.செல்லத்துரை, சி.கந்தசாமி மற்றும் க.சண்முகசுந்தரம் ஆகியோராவர். அதேசமயம் கைதடி கமநலசேவை நிலையப் பிரிவிலும் இவ்வாறு13பேர்நியமனம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-122)



41வருடங்கள்சேவையாற்றியதால்

# பாராட்டி, மதிப்புறுத்தப்பட்டார் ஒஸ்மானியா கல்லூரி அதிபர்

யாழ்ப்பாணம், ஓக.21
41வருடகாலஆசிரிய, அதிபர்சேவையைநிறைவுசெய்யும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி அதிபர் ஜனாப். எம். எஸ். எம். அஸ்ரப்பின் சேவைகளைப் பாராட்டும் பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்முஸ்லிம்சிவில்சமூகத்தின்ஏற்பாட்டில்இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட வடக்குமாகாணசபையின்உறுப்பினரும், முன்னைநாள் கல்வி அமைச்சருமாகிய தம்பிராசா குருகுலராசா தனது உரையில் "அதிபர் அஸ்ரப் மாணவர்களின் மனோநிலைகளைஅறிந்துவழிகாட்டக்கூடியஒருவர். வடக்குமாகாணம் கல்வியில் 9 வது நிலையில் இருக்கின்றது என்று விமர்சிக்கின்றார்கள். ஆனால்ஆகக்கூடுதலான வறுமையும், வரட்சியும், சமூகப்பின்னடைவுகளும்எங்களுடையமாகாணத்திலேதான் இருக்கின்றது என்பதைபலரும்ஏற்றுக்கொள்வதில்லை. மிகவும் பின்தங்கிய மாணவர்களோடுதான் அதிபர் அஸ்ரப் பணியாற்றியிருக்கின்றார். இதனை சாதாரண ஒரு விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. அதிபர் அஸ்ரப் ஒரு மாற்றத்தை தொடக்கி இருக்கின்றார்கள்." என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய வடக்குமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின்; "முன்னைய அதிபர்களின் சேவைகள் இந்தப்பாடசாலை சமூகத்தினால் இங்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கது. இதே போன்று எதிர்காலத்திலும்நாம்பொதுநலனுக்காகசெயற்படவேண்டும்" என்றார். இந்த நிகழ்வில் கல்வித்திணைக்கள அதிகாரிகள், அயல்பாடசாலைஅதிபர்கள், ஆசிரியர்கள், சமூகப்பிரதிநிதிகள்எனப்பலரும்கலந்துகொண்டுவிழாநாயகனுக்கு வாழ்த்துரைகளைவழங்கியதுடன்பொன்னாடைபோர்த்தி மதிப்பளித்தனர். (21)

# காயப்பட்டவர் இறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு சந்தியிலிருந்து பருத்தித்துறை சாலை ஊடாகப் பயணித்தபோது அவருக்குப் பின்புறமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது. திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த க.கிருவாகரன் (வயது 54) என்பவரே காயமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர்இறப்புவிசாரணை அதிகாரிந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (4-8,ரி1)



யாழ்ப்பாணம் ஜே/102 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தசிலருக்குயாழ்ப்பாணம்கந்தர்மடம்நொதேர்ன் வாரியஸ் விளையாட்டுக் கழகத்தால் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. விளையாட்டுக்கழகத்தலைவர் தி.ரதீபன், கழக உறுப்பினர்களான கண்ணன், துவாரகன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் க.விமல்ராஜ் ஆகியோர் மரக்கன்றுகளை வழங்கி வைத்தனர். (4)

ஊடகவியல் அறிமுகம்
(அச்சு / இலத்திரனியல்)
சான்றிதழ் பயிற்சி நெறி
ஊடகத் துறையில் ஆர்வம் உடையோருக்கு வாய்ப்பு

- 10 நாள் பயிற்சிகள்.
- ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
- இருபாலாருக்குமானது
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
- கட்டணம் இல்லை.
- பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2017
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

விண்ணப்பப் படிவம்

## சாவகச்சேரியில் நாளை பெரும்போக வயல்கள் பதிவு

தென்மராட்சி, ஓக.21
சாவகச்சேரி நகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காலபோகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் வயல்கள் நாளை முற்பகல் 9 மணி தொடக்கம் பதிவு செய்யப்பட வுள்ளன.

பதிவுகள் அந்தந்த வயல்களைப் பார்வையிட்டு அளந்த பின்னர் மேற்கொள்ளப்படும். எனவே, வயல்களின் உரிமையாளர்கள் அல்லது குத்தகையாளர்கள் உறுதி மற்றும் குத்தகைப்பத்திரம் போன்ற ஆவணங்களுடன் தத்தமது வயல்களை அண்டிய பகுதியில் நிற்குமாறு சாவகச்சேரி நகர கமக்கார அமைப்பின் தலைவர் உ. பரமநாதன் அறிவித்துள்ளார் (ய-9)

# திண்மக்கழிவுகள் தரம்பிரிக்கும் இடத்தை மாற்றுவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்ப்பாணம் நகரில் முனீஸ்வரன் சாலையில்இருக்கும்திண்மக்கழிவுகளைச் சேகரித்து, தரம்பிரிக்கும் இடம் விரைவில் வேறு இடத்துக்கு மாற்றப்படவுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த திண்மக் கழிவுகள் சேகரித்துத் தரம்பிரிக்கும் நிலையத்தில் சிலர் இரவுவேளைகளில் சென்று கழிவுகளைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். அதனைவிட விசமிகளால் கழிவுகளுக்கு தீவைக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே, இதன் காரணத்தினால் திண்மக் கழிவுகளை வேறு இடத்துக்கு எடுத்துச் சென்று தரம்பிரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாணம் நகரில் அகற்றப்படும் சகல திண்மக் கழிவுகளும் சேகரிக்கப்பட்டு, இந்தப் பகுதியில் கொட்டப்பட்டு அவை தரம்பிரிக்கப்படுகின்றன.

தரம்பிரிக்கப்படும்கழிவுகள்யாவும்பின்னர் அங்கிருந்து அகற்றப்பட்டும் வருகின்றன.

இதேசமயம்இந்தப்பகுதியில்கொட்டப்படும் கழிவுகள்யாவும்உரியமுறையில்பாதுகாக்கப்படாததால்அவைநாலாபக்கமும் சிதறிக் காணப்படுகின்றன. மழை பெய்ததை அடுத்து அதில் இருந்து துர்நாற்றமும் வீசுகின்றது - என்றார். (ய-17)

# புலோலியில் தராசு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், ஓக.21
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி உப அலுவலகத்தில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும்பணி எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணிமுதல் பி.ப 3 மணிவரை நடைபெறவுள்ளதாக சபைச் செயலாளர் சி.சிறி பாஸ்கரன் தெரிவித்தார்.

பிரதேச எல்லைக்குள் உள்ள ப.நோ.கூ. சங்கங்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் குறித்த தமது கருவிகளைப் பரிசோதித்து முத்திரை இட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ய-173)

## நல்லூரில் இன்று

### இசையால் அர்ச்சனை

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஏற்பாட்டில் இன்று சிறப்பு இசை அர்ச்சனை நடைபெறவுள்ளது. தீர்த்தத் திருவிழாவான இன்று காலை 8.45 மணிமுதல் மாலை 3 மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இசையரங்கு, இசைக் கச்சேரி என்பன நடைபெறும். (ரி)

\+ + + + + + + + + + + + + + + + + +

### தெய்வீக.இசையரங்கு

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் திருவிழாக் காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஏற்பாட்டில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் நல்லூர் கந்தனின் தீர்த்தத் திருவிழாவான இன்று வவுனியா நித்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியினரும், வவுனியா அகிலாண்டேஸ்வரர் அருளக நுண் கலைக் கல்லூரியினரும் இணைந்து வழங்கும் "நிருத்திய சமர்ப்பணம்" இடம்பெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 தொடக்கம் 8 மணி வரை நிகழ்வு இடம் பெறும். இதில் நட்டுவாங்கம் சூரியயாழினி வீரசிங்கமும், பாட்டு ப.சிவமைந்தனும், வயலின் அ.ஜெயராமனும், மிருதங்கம் ஞா. வசந்தும் இசைக்கவுள்ளனர். (21)

\+ + + + + + + + + + + + + + + + + +

### அருளுரை நிகழ்வுகள்

நல்லூர் கந்தன் திருவிழாக்காலங்களில் யாழ்ப்பாணம் கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் அருளுரை நிகழ்வுகளில் இன்று இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சிறப்பு அருளுரையும் , சொல் வேந்தர் பொன்.சுகந்தனின் கந்தபுராணம் தொடர் அருளுரையும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது.

சிவஸ்ரீ. சோமஸ்கந்த பிரசன்னக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

\+ + + + + + + + + + + + + + + + + +

### சங்கீத கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் திருவிழாக்காலத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் "சங்கீத கதாப்பிரசங்கம்" கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது. இதனை கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வருகின்றார்.

தினமும் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை நடைபெறும் இந்த நிகழ்வின் 16ஆம் நாளான இன்று திங்கட்கிழமை கம்பராமாயணத்தின் "அக்கினிப் பிரவேசம் " பகுதி இடம்பெறவுள்ளது. (21,)

அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர்
பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் நிகழ்த்தும்
"கொண்டாட்ட அரங்கு"
ஆடல், பாடல், காண்பியம், கதை சொல்லல் என
அனைத்தும் இணைந்த ஓர் அரங்காக
கலாநிதி சிதம்பரநாதனின் நெறியாள்கையில்
மீண்டும்
" உயிர்ப்பைத் தேடி "
சக்தியைப் பகிரும் ஆற்றுகை நிகழ்ச்சி
காலம் :- 22.08.2017 செவ்வாய்க்கிழமை
24.08.2017 வியாழக்கிழமை
நேரம் :- பிற்பகல் 4.00 மணி
இடம் :- பண்பாட்டு மலர்ச்சிக் கூடம்,
பழம் வீதி, (பிள்ளையார் கோயில் அருகில்)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
அனுமதி :- 100/=, 200/= நுழைவு வாயிலில்
எதிர்காலத் தேடலுக்கான ஒரு களம்
077 440 3955

## குளவிக் கொட்டுக்கு இலக்கான நபருக்கு வலிப்பும் வந்தது

தென்மராட்சி, ஓக.21
கருங்குளவிக் கொட்டுக்கு இலக்கானவருக்கு வலிப்பு ஏற்பட்டதால் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலை அல்லாரை வடக்கில் இடம்பெற்றது. இப்பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவகுமார் (வயது-44) என்பவரே இவ்வாறு உபாதைக்கு உள்ளானார். இவர் சம்பவதினம் தனது காணியில் வீழ்ந்து கிடந்த பனையோலைகளில் மட்டைகளை வெட்டியுள்ளார். அவ்வேளையில்அதிலிருந்துகருங்குளவிகள்அவரைக்கொட்டியுள்ளன. சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனைசிகிச்சையின்போதுஅவருக்குவலிப்புஏற்பட்டது. இதனால்அவர் மேலதிகசிகிச்சைக்காகயாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ய-9)

## தம்பசிட்டி சித்திவிநாயகர் ஆலய கொடியேற்றம்

பருத்தித்துறை தம்பசிட்டி, மாயக்கை அருள்மிகு சிறி சித்திவிநாயகர் கோயில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 27ஆம்திகதி காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாவில் எதிர்வரும் 4ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள் 6ஆம் திகதி கொடியிறக்கத்துடன் காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்தம் இடம்பெற்று திருவிழா நிறைவுறும்.

கோயில் முதன்மை வேதாகம பூசணம் சிவ சிறி சிதம்பர மகேந்திர குருக்கள் திருவிழா வின் முதன்மைக் குரு வாக இருந்து திரு விழாக்களை நடத்தி வைப்பார். (ய-173)

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் புஸ்பலிங்கம்



பிறப்பு 19.04.1944 இறப்பு 18.08.2017

யாழ். துன்னாலை. கோவிற்கடவையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கு. அத்துளு அம்மன் கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் புஸ்பலிங்கம் 18.08.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - லக்ஸ்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளிப்பிள்ளையின் (கமலா), அன்புக் கணவரும் காண்டீபன் (லண்டன்), பிரதீபன் (லண்டன்), கவிதா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி (லண்டன்), சுபாஜினி (லண்டன்), காண்டீபன், சுதந்திரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனும் சந்திரவிம்பம், சந்திரவதனம், சந்திரதேவி, புஸ்பவதி, புவனலிங்கம் (கனடா), மதனலிங்கம் (புனிதன் இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரபாதம், கணபதிப்பிள்ளை, சதானந்தன் மற்றும் ஆறுமுகம், அருந்தவராஜா (லண்டன்), வைஜெயந்தி, புஸ்பலதா, பத்தினிப்பிள்ளை (வின்பம்), பார்வதிப்பிள்ளை (சந்திரா), பூரணலீலா (பூரா) ஆகியோரின் அன்புமைத்துனரும்கிருஸ்ணபிள்ளை (கனடா), காலஞ்சென்ற பரமலிங்கம், கிட்டிணப்பிள்ளை (பிரான்ஸ்), தங்கபாக்கியம் (தங்கம்), லதாதேவி (லதா) ஆகியோரின் அன்புச் சகலனும் நிலக்ஷனா (லண்டன்), நின்ஷாகினி (லண்டன்), கோபிராம் (சிங்கப்பூர்), வாகீசன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலுண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

காண்டீபன் (மகன் - பிரித்தானியா) - தொ.பே : 44 203 4414960
செ.பே : 44 740 169 4645
பிரதீபன் (மகன் - பிரித்தானியா) - செ.பே : 44 779 419 4710
கவிதா (மகள் - சிங்கப்பூர்) - செ.பே : 65 9096 6730
கிருஸ்ணபிள்ளை (கனடா) - செ.பே : 16 474 992 886
பிரபு (இலங்கை) - செ.பே : 94 777 241958



மக்களின் காணிகளில் தொடர்ந்தும் இராணுவம்;

# நல்லாட்சி அரசின் வாக்குறுதிகள் காற்றில்பறக்கின்றன

## சிவமோகன் எம்.பி. எடுத்துக்காட்டு

முல்லைத்தீவு, ஒக.21

போர் நிறைவடைந்து 8 வருடங்களைக் கடந்த பின்னரும் இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்திக்கொண்டு தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுத்துக்கொண்டிருப்பது. தற்போதைய நல்லாட்சியிலும் இராணுவக்குறைப்புக்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படாமல்தமிழ்மக்கள்இன்னமும் போராடிக்கொண்டிருப்பதைத் தெளிவு படுத்துகிறது என வன்னிநாடாளுமன்றஉறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரது ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும், தெரிவிக்கப்பட்டதாவது:

கேப்பாப்புலவுகிராமத்தைமுதலை உணவு விழுங்கியதுபோல அரச படைகளின்ஆக்கிரமிப்புச்செயற்பாடுகள் அமைந்துள்ளன. மக்கள் தொடர்ச்சியாகத் தமதுகாணிகளை விடுவிக்கக்கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். புதுக்குடியிருப்புப்பிரதேசத்தில் மொத்தமாக 16 ஏக்கர் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியில் 5 ஏக்கர் காணி தற்போது விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை வட்டுவாகலில் 615ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள கோத்தபாய கடல்படைமுகாம்இன்னும்மேலதிகமாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றதே தவிர தமிழ் மக்களுக்குரிய காணிகளை விடுவிப்பதாகத்தெரியவில்லை. ஆட்சிக்குவந்த நல்லாட்சி அரசு தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் அரச படைகள் ஆக்கிரமித்துவைத்துள்ளகாணிகளைவிடுவிப்பதாகக் கூறியிருந்தது. ஆனால் வழமை போலவே அரசின் வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. பொய்யான வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு அரசு வழங்குவதுஎன்பதுபுதிதானவிடயமுமல்ல. இந்தக் காணிவிடுவிப்பு விடயத்திலும்இதுவேநடந்துள்ளது. இவ்விடயம் அரச படைகளின் தொடர்ச்சியானபோக்கிரித்தனத்தையேஉறுதிசெய்கின்றது. போரினால் தமது வாழ்வையே இழந்த மக்கள் தமக்குரிய சொந்தக் காணிகளில் தமது அன்றாடநடவடிக்கைகளைசெயற்படுத்துவதற்குஅரசுஉரியநடவடிக்கைகளை மிகவிரைவில் மேற்கொள்ளவேண்டும். காணிகளை முழுமையாக விடுவிக்கவேண்டியது அரசின் கடமையாகும். மக்களுக்குரிய காணிகளை சுவீகரிக்க அரச படைகளுக்கான அதிகாரம் கிடையாது. 13ஆம்திருத்தசட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். இதனை வலியுறுத்திய போராட்டங்களில் பங்குகொள்ளாதவர்கள் அரசுடன் இணைந்துகொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதை நிறுத்தவேண்டும். போர்க் காலப்பகுதியில் தமிழ் மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டபோது அரசபடைகள்தாம்விரும்பியவாறு காணிகளைத் தெரிவுசெய்து தேசிய பாதுகாப்பு எனக்கூறி தமது இருப்பினை இன்னும் வலுவாகப் பலப்படுத்தும் நோக்கில் மக்களது எந்தவித அனுமதியுமின்றி காணிகளை ஆக்கிரமித்துதமதுசெயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். காணிகளை மீட்கும் போராட்டங்களும் தமிழ் மக்களால் தற்போதுபாரியளவில்முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. 30வருடகாலப் போர் காரணமாக அனைத்து உறவுகளையும், உடைமைகளையும் தொலைத்த மீண்டும் தங்களது அன்றாடசெயற்பாடுகளைமுன்னெடுக்கும் முகமாக தமக்குரிய சொந்த காணிகளுக்குத்திரும்பிச்செல்கையில் அரச படைகள் தமிழ் மக்களது வாழ்வாதாரங்களைக் குழப்பும் நோக்கில் காணிகளை சுவீகரித்து வைத்துள்ளன என்றுள்ளது. (21)

முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி;

# மாகாணசபையின் நடவடிக்கை என்ன?

## உறுப்பினர் தவநாதன் கேள்வி

மறுவாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு ஏற்றப்பட்டதாக் கூறப்படும் விச ஊசி தொடர்பில் ஆராய்வதாகக் கூறிய வடக்கு மாகாண சபை இதுவரை எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை, இது தொடர்பில் மாகாணசபை எடுத்த நடவடிக்கை தான்என்னஎனவடக்குமாகாணசபை உறுப்பினர்தவநாதன்கேள்வியெழுப்பினார். வடக்கு மாகாண சபையின் சிறப்புஅமர்வுகடந்தவியாழக்கிழமை கைதடியில் உள்ள வடக்கு மாகாணசபையின் பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர்சி.வி.கேசிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. அதில் தனது கருத்துக்களைப் பதிவுசெய்யும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது, முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும்போதுவிசஊசிஏற்றப்பட்டதாகவும் அவ்வாறு மறுவாழ்வு பெற்று வெளியில் வந்த முன்னாள் போராளிகள் மர்மமான முறையில் உயிரிழக்கின்றனர்எனவும்பலதரப்பினரும்கூறி வந்தனர். இந்த விடயம் வடக்கு மாகாண சபையிலும் பல தடவைகள் பேசப்பட்டது. அது தொடர்பில் மாகாண சபையும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தது. ஆனால் அதற்கு என்ன நடந்தது? மாகாண சபை அந்த விடயத்தை முழுமையாகக்கைவிட்டுவிட்டது. மாகாண சபையில் பேசப்பட்ட பின்னரும் முன்னாள் போராளிகளில் சிலர் மர்மமான முறையில் இறந்தனர். ஆனால் மாகாண சபையோ அந்த விடயத்தை கைவிட்டுவிட்டது.

வடக்கு மாகாண சபையானது நீண்டகாலப் போராட்டத்தில் பல இலட்சக்கணக்கானஉயிர்களைஇழந்தபின்னர் எமக்குக் கிடைத்த சந்தர்ப்பம். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் பொது மக்களுக்கு என்னத்தைச் செய்தோம். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் முன்னாள் போராளிகுக்கு மாகாண சபை என்ன செய்தது. மாகாண சபையில் நாம் என்ன திட்டங்களைக் கொண்டுவரப்போகின்றோம்எனவருடாவருடம் பாதீட்டில் குறிப்பிடுகின்றீர்கள். பின்னர்எதற்குஇப்படிசிறப்புஅமர்வுகள். இதன்மூலம்மக்கள்பணம்வீணடிக்கப்படுகின்றது என்றார். (21-8)

### தொழில்நுட்பசேவை ஆட் சேர்ப்புக்கு விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் மற்றும் பயிற்சி தரத்தினரை ஆட் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர், செயலாளர், பொதுச்சேவைகள் ஆணைக்குழு, வடக்கு மாகாணம், நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் சீ.ஏ.மோகன்ராஜ் அறிவித்துள்ளார்.

இதேவேளை, திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றுவோரில் தொழில்நுட்ப அலுவலர் மற்றும் பயிற்சி தரத்தில் இணைந்துகொள்ள விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அனுப்பி வைக்குமாறு அவற்றின் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)



# 25 ஆம் திருவிழா

### தீர்த்தமாடி வா முருகா

நல்லூர் பதி வாழ் வேல் முருகா
இன்று நீ தீர்த்தமாடி வரும்
அழகை காண வந்தோம்
கந்தன் உனை நாம் இந்த
அழகுக் கோலத்தில் உனைக்
காண நாம் என்ன புண்ணியம்
செய்தோம் வடிவேலா!
தீர்த்தம் ஆடி ஆடி மக்கள்
எம்மைக் காத்தருள்வாய்
எங்கள் தமிழ்கந்தா
உன் குழந்தைமுகம்
காணும் வரை எம். நெஞ்சம்
உனை மறக்காது
புண்ணியனே
வேதங்கள் பல இருந்தாலும்
எம் வேலவனின் புகழ் பாடி
தீராதையா!

■ சுபாஜுனன் தெல்லிப்பழை.

### குறைதீர்க்க வா முருகா!

வேலவா வடி வேலவா
எம் குறை தீர்க்கவா
எம்மைக் காத்திட வா
யாமிருக்க பயமேன்
சென்னவா உன்
பதியை நாம் போற்றிடவா
குறைகள் பல நீக்கிடும்
வேலவா! நின் பதம் காண
ஓடி வந்தோம் வேலவா
மயிலேறி குறை தீர்க்க
ஓடி வா உன் மனத்திலே
எம்மைக் காத்து அருளவா
அப்பனுக்குப் பாடம்
சொன்ன வேலவா!
உன் பூ முகத்தை நாம்
பாடி மகிழவா
குழந்தை உந்தன் புன்னகை
எம்மை மனமுருகி வணங்கி
ஓடிவா பாடி வா வேலவா!'

■ பி.குருசரன், தெல்லிப்பழை.

### கோடி கண் வேண்டும் முருகா

வந்தோமையா மருகா
பாடி வந்தோமையா
உன் புகழ் நாம் பாட என்ன
தவம் நாம் செய்தோம்
கண்ணிரண்டில் ஐயா
உனை வைத்து காலம்
நேரம் பார்க்காமல்
உனைத் தொழது
செவ்வேலா நீ வந்து
எம் துயர் நீக்குவாய்
என்று நாம் எண்ணி
பல கஸ்ரங்கள் வந்தாலும்
உன் பாதம் தொட்டு வணங்கி
நாம் மகிழ்ந்திருவோம்!
குமார வேல் முருகா
கவலைகள் கல உண்டு
உனைத் தொழுதால்
நீங்கும் எம் கவலைகள்
பல கோடி பக்தர்கள்
உனைக்காண
பாரினில் உண்டு எங்கள்
உமையின் செல்வா!

■ பி.விபிசனா, நல்லூர்



# நிதி ஒதுக்கீடு செய்த சாலையை விடுத்து வேறு சாலை சீரமைப்பு

## *வீதி அபிவிருத்தித் திணைக்களத்துடன் முறுகினார் மாகாணசபை உறுப்பினர்*

யாழ்ப்பாணம், ஓக.21
நெடுந்தீவுப் பிரதேசத்தின் போக்குவரத்தைச் சீர் செய்யும் நோக்கில் முக்கிய சாலைத் திருத்தத்துக்காக 2.5 மில்லியன் ரூபா சொந்தஒதுக்கீட்டில்இருந்து விடுவிக்கப்பட்டபோதும் எனது அனுமதியின்றி வீதி அபிவிருத்தித் திணைக்களம் பிறிதொரு சாலையினைசீர்செய்துள்ளதுஎன வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்குற்றம்சாட்டினார்.
நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில்அண்மையில்இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது;
எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு, அதுவும் முக்கியமான சாலை ஒன்றின்சீரமைப்புக்கெனஒதுக்கீடுசெய்யப்பட்ட 2.5மில்லியன் ரூபா நிதி வேறு ஒரு சாலைக்குபயன்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு சாலையை மாற்றியமைதொடர்பில்எனக்கு எந்தவிதமான தகவல்களும்வழங்கப்படவில்லை.
இந்த நிலையில் எதனை நம்பி தொடர்ந்தும் நிதி ஒதுக்க முடியும். என வீதி அபிவிருத்தி திணைக்களத்தினரிடம்கோரினார்.
இதற்குப்பதிலளித்தவீதிஅபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர். குறித்த 2.5 மில்லியன் ரூபா நிதி குறிப்பிட்ட சாலைக்குப்போதாது அதனாலேயே மாற்றிச் சீரமைக்கப்பட்டது. குறித்த நிதியில் 315 மீற்றர் நீள சாலை சீர் செய்யப்பட்டது என்றார்.
"எனது ஒதுக்கீட்டின் இந்த ஆண்டுக்கான நிதியில் குறித்த தொகையை ஒதுக்கும்போதே குறிப்பிட்டேன் இப்பணத்திற்கான பணியை மேற்கொள்ளுங்கள்.
மிகுதிப் பணத்தை அடுத்த ஆண்டு நிதியிலும் ஒதுக்குவேன் என்றார்.
தற்போது திணைக்களம் செய்த வேலையினால் நம்பிக்கை கெட்டுள்ளது" என மாகாணசபை உறுப்பினர் விந்தன் கருத்துரைத்தார்.
"குறித்த பணி ஆரம்பிக்கும் போது நிதி ஒதுக்கியவரை அழைத்திருக்கவேண்டும். அல்லது அனுமதியைக் கோரியிருக்க வேண்டும். குறைந்தபட்சம்பணிமுடிவிலேனும் அறிவித்திருக்கலாம் உறுப்பினர் தானாக அறியும் வரைக்கும் பேசாமல் இருந்துவிட்டுக் காரணம் கூறமுடியாது.
எனவேஇதுதொடர்பில்வீதி அபிவிருத்தித்திணைக்களம் எழுத்தில் பதில் தர வேண்டும்என ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரானநாடாளுமன்றஉறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார். (21-101)

# பண மோசடிக் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார் கிராம அலுவலர்

யாழ்ப்பாணம், ஓக. 21
கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பணியாற்றும் பெண் கிராம அலுவலர் ஒருவர் போலிக் கடிதத் தலைப்பின் மூலம் வங்கிகளில் மோசடியாகப் பணம் பெற்றார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அவர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
மேற்படி செயல்தொடர்பில் அவர் மன்னிப்புக் கோரினார் என்றும், குற்றத்தை ஏற்றுக்கொண்டதுடன்தனது பணியை மீள வழங்குமாறு கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பணியாற்றிய இவர் அலுவலக கடிதத் தலைப்பைப் போலியாகப் பயன்படுத்தியுள்ளார். இரு வங்கிகளில் ஒரே காலத்தில் கடன்களைப் பெற்றார் என குற்றம்சாட்டப்பட்டு தற்காலிக பணிநீக்கமும் செய்யப்பட்டிருந்தார்.
இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்ட கிராம அலுவலரிடம் மாவட்டச் செயலகம் அது தொடர்பில் விளக்கம் கோரியதோடு தற்காலிக பணித்தடையையும் விதித்திருந்தது.
இந்தநிலையில் அவர் மேற்படி மோசடியை தான் தனித்தே மேற்கொண்டதாகவும், இறப்பர் முத்திரை போலியாகத் தயாரிக்கவில்லை என்றும், வேறு கடித்த்தில் பொறித்திருந்த இறப்பர் முத்திரையினையே ஸ்கான் செய்து பிரதியிட்டதாகவும் எழுத்தில் அறிவித்துள்ளார். அத்துடன் அதனை மன்னித்துமீண்டும்பணியை வழங்குமாறும் கோரியுள்ளார். மோசடியை மேற்கொண்ட ஊழியர் அதனை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் மேலதிக விசாரணை இன்றி உடன் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, மாவட்டச்செயலகம் அமைச்சுக்கு குறித்த விவரங்களை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-8-101)

# வறட்சியின் அகோரத்தால்;

# 69 குடும்பங்களுக்கு தோண்டிய கிணறு வனவளத் திணைக்களத்தால் மூடப்பட்டது

## குடிதண்ணீருக்கு அவர்கள் அந்தரிக்கின்றனர் என வட.மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக.21
வறட்சியினைக் கருத்தில் கொண்டு வவுனியா சின்னடம்பன் இராசாபுரத்தில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுடைய குடிதண்ணீர்த் தேவைக்காகத் தோண்டப்பட்ட கிணறு வனவளத்திணைக்களத்தினால் மூடப்பட்டுள்ளது. வனவளத் திணைக்களத்தினருடைய இரக்கமற்ற இந்தச் செயலால் மீள்குடியமர்ந்த 69 குடும்பங்கள் குடி தண்ணீருக்கு அந்தரிக்கின்றனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, நெடுங்கேணி சின்னடம்பன் இராசாபுரத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் லைக்கா நிறுவனத்தால் 69 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த மக்களின் குடிதண்ணீர்த் தேவைகளுக்காக இரண்டு கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. எனினும் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக அந்தக் கிணறுகளின் நீர்வற்றியுள்ளது. எனவே இந்த விடயம் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. மக்களின் கோரிக்கையை ஆராய்ந்த பிரதேச செயலாளர் மேலும் இரு கிணறுகளை அமைப்பதற்கு 3 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்து வழங்கினார். அந்த நிதியில் குடியிருப்பின் ஆரம்ப வளைவு அமைந்துள்ள பகுதியின் சாலை அருகில் முதலாவது கிணறு அமைக்கும் பணி இடம்பெற்றது. அந்த இடத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த வனவளத் திணைக்களத்தினர் அந்தப்பகுதி தமது ஆளுகைக்கு உட்பட்டது. அதனால் அங்கே கிணறு அமைக்க முடியாது எனத் தடை போட்டதோடு அனுமதியின்றி கிணறு தோண்டியதாக கூறி பைக்கோ இயந்தரச் சாரதியைக் கைது செய்ய முற்பட்டனர். குறித்த சம்பவம் தொடர்பாக கிராம அலுவலகரால் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற கிராம அலுவலகர் பிரதேச செயலாளரின் அனுமதியுடனேயே கிணறு தோண்டப்படுவதாகத் தெரிவித்துள்ளார். அதனை ஏற்க மறுத்த வனவளத் திணைக்களத்தினர் குறித்த பிரதேசம் தமது ஆளுகைப் பகுதியென்பதனால் அத்துமீறி கிணறு அமைத்தமைக்காகக் கிணற்றைத் தோண்டிய இயந்திர சாரதியை கைது செய்வதிலேயே குறியாய் இருந்துள்ளார். இதன்போது குறித்த நிலம் தொடர்பில் சர்ச்சை உள்ளதாகக் கருதினால் பணியை நிறுத்தி விட்டுக் கலந்துரையாடலின் பின்னர் பணியைத் தொடரலாம் என கிராம அலுவலகர் வனவளத் திணைக்கள அதிகாரியிடம் கோரி உள்ளார். இவை அனைத்துக்கும் செவி சாய்க்காத வனவள அதிகாரி உடன் கிணறு மூடப்பட வேண்டும் அல்லது சாரதி கைது செய்யப்படவேண்டும் என மனிதாபிமானமே அற்றவகையில் கிணற்றை மூடுவதில் குறியாகவிருந்தார். இதனால் கிராம அலுவலகரும் வெளியேறும் நிலமை ஏற்பட்டது. அப்பகுதி மக்கள் கண்ணீர் சிந்தினர். கிணறு மூடப்பட்டது. இவ்வாறு தவிச்ச வாய்க்கு நீரைப் பெறுவதற்கே தடைபோடும் இந்தத் திணைக்களம் அரசியல்வாதிகள் நூற்றுக்கணக்கில் மரம் ஏற்றிச் செல்லும்போது எங்குதான் சென்றனரோ தெரியவில்லை என்றார்.
"மேற்படி கிணறு அமைக்க முயன்ற பிரதேசத்துடன் இணைந்த நிலப்பரப்பு முன்னர் மக்களுக்கு வழங்கிய இடம்.
அதற்கு அருகில் ஓர் குளம் மற்றும் வயல்பிரதேசம் உள்ளன எனச் சுட்டிக்காட்டியதன் அடிப்படையிலேயே அப்பகுதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன" என பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.
"பிரதேசத்தில் கிணறு அமைப்பது தொடர்பில் எமக்கு எந்தவிதமான அறிவித்தலும் வழங்கப்படவில்லை. அத்தோடு அந்த நிலம் ஏற்கனவே தனியாருக்கு வழங்கப்பட்ட பிரதேசமாயின் அந்தத் தனிநபர் ஆவணத்துடன் சமூகமளித்து அவரது நிலத்தை பெற்றுக்கொள்வதில் தடைஇருக்காது.
அல்லது அந்தப் பிரதேசம் எமது ஆளுகைப் பிரதேசமாயினும் பிரதேச செயலாளர் முன் அனுமதி பெற்றிருப்பின் எந்தத் தடங்கலும் ஏற்பட்டிருக்கமாட்டாது" என வனவளத்திணைக்களத்தின் நெடுங்கேணிக்கான அலுவலர் கௌதமை தெரிவித்தார். (21-101)

# வாடகை செலுத்தாத கடைகளால் 12 லட்சத்து 85ஆயிரம் நிலுவை

## *யாழ். மாநகரசபை நடவடிக்கை*

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்ப்பாணம் மாநகரசபையின் கீழ் உள்ள 5 கடைகளுக்கான வாடகைப்பணமான 12லட்சத்து 85ஆயிரம் ரூபா நிதி நீண்டகாலமாக சபைக்குச் செலுத்தப்படவில்லை என மாநகரசபை தகவல் உத்தியோகத்தர் தெரிவித்தார்.
இதுதொடர்பில் கோரப்பட்ட தகவல் அறியும் சட்டத்தின் கீழான விண்ணப்பத்துக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.
மேலும் குறிப்பிடப்பட்டதாவது:
யாழ்ப்பாணம் மாநகரசபையின் கீழ் உள்ள 5 கடைகளுக்கான பெருந்தொகை வாடகைப்பணம் நீண்டகாலமாக செலுத்தப்படவில்லை.
இவ்வாறு நிலுவை செலுத்தாத 5 கடைகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான இறுதி அறிவித்தலும் வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் குறிப்பி டப்பட்டுள்ளது..
யாழ்ப்பாணம் மாநகரசபையின் கீழ் 617 கடைகள் கட்டடங்கள் உண்டு. இவ்வாறு காணப்படும் கடைகளின் மூலம் சபைக்கு மாதம் ஒன்றுக்கு 29லட்சத்து 61ஆயிரத்து 320ரூபா நிதி வருமானம் வருகிறது.
இந்த அடிப்படையில் வருடாந்தம் 35.5 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்படுகின்றது. அதேநேரம் குருநகர் சந்தைக் கடைகளில் 49கடைகள் கேள்விகோரலில் எவருமே அக்கடைகளை எடுக்கவில்லை. இதன்காரணத்தினால் அங்கு எந்தவிதமான நிலுவையும் கிடையாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-101)

# முஸ்லிம்களின் காணிப் பிரச்சினையை கண்டுகொள்ளாத வடக்கு மாகாணசபை

## மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 21
மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் முஸ்லிம் மக்களின் காணிகள் 'மாவில்ல' என்ற பெயரில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இதுதொடர்பில் மக்களுக்காக முஸ்லிம் தலைவர்களோ அல்லது வடக்கு மாகாணசபையோ ஒருதடவை கூடப் பேசவில்லை என வடக்கு மாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மின் தெரிவித்தார்.
வடக்கு மாகாணசபையின் சிறப்பு அமர்வு கடந்த வியாழக்கிழமை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.
இந்த அமர்வில் கருத்துகளைப் பகிரும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
முஸ்லிம் மக்களின் காணிகள் பாதுகாக்கப்பட்ட வனமாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதனை மீளவும் முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியாமைக்காக அமைச்சர் றிசாட் பதவி விலகவேண்டும். அல்லது அதற்கான முழுப் பொறுப்பையும் அவர் ஏற்று கொள்ளவேண்டும்.
அதே சமயம் வடக்கு மாகாணசபையும் இந்த விடயத்தில் தலையிடாமல் இருப்பது கவலை அளிக்கின்றது.
முசலி, மடு பிரதேச செயலர் பிரிவுகளில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் ஒரு லட்சம் ஏக்கர் காணிகள் மாவில்ல என்ற பெயரில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.
இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாணசபையில் 2 பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு அது அரசதலைவரின் கவனத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.
இதற்கிடையில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கான குழு ஒன்றை நியமித்திருக்கின்றார். அந்தக் குழு இம்மாதம் 20 ஆம் திகதி தமது அறிக்கையை சமர்பிக்க உள்ளது. ஆனால் அந்தக் குழு மக்களிடம் எந்த கருத்துக்களையும் பெற்றிருக்கவில்லை.
இந்நிலையில் வடமாகாணசபையும் அந்த விடயத்தில் தலையிடாமல் உள்ளது. அதேபோல், வடமாகாணசபை அல்லது மற்றய முஸ்லிம் தலைவர்கள் அந்த விடயத்தில் தலையிடாமல் இருப்பதற்கு மற்றொரு காரணமும் உள்ளது.
அதாவது அமைச்சர் றிசாட் பதியூதீன் அந்த விடயத்தை தானே கையாள வேண்டும் என்பதற்காக மற்றய தலைவர்கள் அல்லது வடக்கு மாகாணசபை அந்த விடயத்தில் தலையீடுவதைத் தடுத்து வருகின்றார்.
உதாரணமாக அண்மையில் அமைச்சர் றவூவ் ஹக்கீம் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது மக்களைத் தூண்டிவிட்டு அவரை தலையிடவிடாமல் தடுத்திருந்தார்- என்றார். (ய-8)

# போர் வீரர்கள் மக்கள் மரியாதையை வென்றவர்கள்

## கூறுகிறார் இராணுவத் தளபதி

போர் வீரர்கள் மக்களின் மரியாதையை வென்றிருக்கின்ற ஒரு குழுவாகும். தவறு செய்தவர்களைப் போர் வீரர்கள் என்று அழைக்க முடியாது. இவ்வாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

அரச வானொலிக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலுள்ள மக்கள் தீவிரவாதத்தை நிராகரித்துள்ளனர். வடக்கு தெற்கு மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு இராணுவம் அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டில் சமூகங்களுக்கிடையில் நட்புறவை வலுப்படுத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

ஆனால், சில குழுக்கள், இரண்டு தரப்புகளுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்தவும், நல்லிணக்கத்தை குழப்பவும் முயற்சிக்கின்றன.

போர் வீரர்கள் மக்களின் மரியாதையைப் வென்றிருக்கின்ற ஒரு குழுவாகும். தவறு செய்தவர்களைப் போர் வீரர்கள் என்று அழைக்க முடியாது.

யாராவது குற்றம் செய்திருந்தால், அவர் சட்டத்துக்கு முன் கொண்டு வரப்பட வேண்டும் - என்றார். (5)



# ஒரு கிராம் சீனிக்கு ரூபா வரி

## குளிர்பானங்கள் மீது இறுகிறது அரசின் பிடி

கொழும்பு, ஓக. 21

இனிப்புச் சுவையுடைய குளிர்பான வகைகளுக்கு வரி விதிப்பதற்கு அரசு கவனம் செலுத்தி வருவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக சுகாதார நிறுவனத்தின் தர நிர்ண யங்களுக்கு அமைய 100 மில்லி லீற்றர் குளிர்பானத்துக்கு 6 கிராம் சீனியே சேர்க்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக சேர்க்கப்படும் ஒவ்வொரு கிராமுக்கும் ஒரு ரூபா என்ற அடிப்படையில் வரி விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (5)



# பூஜித் ஜயசுந்தர மீது புதுக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 21

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பிரதிப் பொலிஸ் மா அதிபராகச் செயற்பட்ட காலப்பகுதியில் தனக்கு கீழ் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகளைச் சித்திரவதை செய்தார் என்று சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி உள்பட பொலிஸ் அதிகாரிகள் 70 பேர் வரையில் ஒரு மணித்தியாலத்துக்கு அதிக நேரம் வீதியில் வைத்து மண்டியிட வைத்திருந்தார். மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் மூலம் பொலிஸ் அதிகாரிகளைச் சித்திரவதைக்கு உட்படுத்தியதோடு பொது மக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியுள்ளார்.

கீழ்மட்ட அதிகாரி ஒருவர் தவறு செய்திருந்தாலும் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிக்கு அவரைத் தண்டிப்பதற்கு அதிகாரம் இல்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் அப்போதைய பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனின் கீழ் இயங்கிய விசாரணை பிரிவின் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். பூஜித் குற்றம் செய்ததாக அப்போதைய பொலிஸ் மா அதிபருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அப்போதைய பொலிஸ்மா அதிபர் இலங்ககோன், பூஜித் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்போதைய அரச சேவை ஆணைக்குழுவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்சவின் உதவியுடன் சம்பவத்தை மூடி மறைப்பதற்கு பூஜித் ஜயசுந்தர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர், பூஜித் ஜயசுந்தர பொலிஸ் தலைமையகத்தில் சிற்றூழியரை தாக்குவது போன்ற காணொலி வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## பிணைமுறி விவகாரம்:

# சட்டமா அதிபர் திணைக்களத்தின் வேகத்துக்கு நீதியரசர் பாராட்டு

கொழும்பு, ஓக. 21

பிணைமுறி மோசடி விசாரணையில் சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்ந்தும் காட்டிவரும் கரிசனைக்கும், அர்ப்பணிப்புக்கும் ஆணைக்குழு வின் நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன தனது பாராட்டுகளைத் தெரிவித்திருக்கின்றார்.

பெர்பெச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான கசுன் பளிசேன மீதான குறுக்குக் கேள்விகளைத் தொடுப்பதற்கு தனக்கு சிறு காலஅவகாசம் வழங்கவேண்டுமென மேலதிக சொலிஸிட்டர் நாயகம் தப்புல டி.லிவேரா வேண்டுகோள் விடுத்தபோதே நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன இந்தப் பாராட்டுகளைத் தெரிவித்ததுடன் அவரது கோரிக்கையை ஏற்று அடுத்த அமர்வை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்தார். (5)

# காணித் திணைக்களத்தின் சேவை மக்கள் திருப்தியாக எண்ணவில்லை

## அரச தலைவர் மைத்திரி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 21

காணித் திணைக்களம் அதனோடு இணைந்த சேவைகள் தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் திருப்பதியான எண்ணம் இல்லை. அதனை மாற்றியமைப்பதற்கு அவர்கள் முயற்சிக்கவேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மகாவலி குடியேற்றவாசிகளுக்கு ஒரு லட்சம் காணி உறுதிகள் வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விக்டோரியா மற்றும் கொத்மலை வலய விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான நிகழ்வு கடந்த 18ஆம் திகதி மத்திய மாகாண விளையாட்டு கட்டிடத் தொகுதி வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அரச தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச சேவையில் ஏதேனும் ஒரு துறை மக்களின் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளானால் அது தொடர்பில் அத்துறைகளின் தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். தமது மனச்சாட்சிக்கு ஏற்ப நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் சேவைசெய்யும் அனைத்து அதிகாரிகளுக்காகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசு சார்பாக இருக்கும்.

அரச சேவையில் காணித் துறையின் நடவடிக்கைகள் குறித்து நீண்ட காலமாக இந்த நாட்டு மக்கள் மத்தியில் திருப்தியான ஒரு நிலை கிடையாது. இதனைக் கருத்திற்கொண்டு பிழைகளைச் சரிசெய்து இன்றைய நாளின் பணிகளைப் போன்று நாளைய தினத்தின் மக்கள் பணிகளையும்உரியமுறையில்நிறைவேற்றுவதற்கு அனைத்து அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

காணி உரிமை என்பது பாரம்பரிய உரிமையுடன்தொடர்பானபிரச்சினையாகும். அந்த உரிமையை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பது நாட்டு மக்களுக்காக நிறைவேற்றும் அடிப்படை கடமையாகும்.

அரசை முன்னெடுத்து செல்லும்போது குற்றச்சாட்டுக்கள் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுவது ஒரு சனநாயக நாட்டின் பண்புகளாகும். நாட்டில் சுதந்திரமும் ஜனநாயகமும் இல்லையாயின் அத்தகைய எதிர்ப்புகள் ஏற்படாது.

நாட்டு மக்கள் தமது உரிமைகளை கேட்கவும் அரசியல்வாதிகள் தமது அரசியல் கருத்துக்களை முன்வைக்கவும் பயந்த யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து. நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளை உரிய முறையில் அனுபவிப்பதும் அது குறித்து தெளிவுடன் நடந்து கொள்வதும் அனைவருடையவும் பொறுப்பாகும் - என்றார். (5)

# அதிகரிக்கும் யானைகளின் உயிரிழப்பு

கடந்த ஆண்டு இலங்கையில் அதிகளவு யானைகள் பல்வேறு காரணங்களினால் உயிரிழந்துள்ளதாக, வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஜி.சி.சூரியபண்டார தெரிவித்ததாவது:

பல்வேறு காரணங்களினால் ஆண்டுதோறும் இருநூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழக்கின்றன. அவற்றில் 65 சதவீதமான யானைகள் துப்பாக்கிச்சூடு காரணமாக உயிரிழக்கின்றன.

2011ஆம் ஆண்டு யானைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது 5 ஆயிரத்து 800 யானைகள் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டுக்கு 80 முதல் 110 யானைகள் வரை பிறந்துள்ள போதிலும், 280 யானைகள் உயிரிழந்துள்ளது.

2012ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருடங்களில் ஆயிரத்து 171 யானைகள் இறந்துள்ளன. அவற்றில் 104 யானைகள் மட்டும்தான் இயற்கையாக உயிரிழந்துள்ளன. ஆயிரத்து 67 யானைகள் விபத்துகள், யானை- மனித மோதல்கள் உள்ளிட்ட காரணங்களினால் கொல்லப்பட்டுள்ளது. இந்த 5 வருட காலத்தில், கடந்த ஆண்டிலே கூடுதலான யானைகளின் உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. 35 இயற்கை உயிரிழப்பு உள்ளடங்கலாக 279 யானை உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. (5)



# விஜயதாச ராஜபக்ச கருத்து சொல்வதில் தவறில்லை

## அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவுக்கு தனது தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சுதந்திரம் உள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் விஜேதாச ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர். எது எவ்வாறிருப்பினும், அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள குழு இறுதித் தீர்மானத்துக்கு வரும்.

அவர் எமது அரசின் ஒரு அமைச்சர். யார் என்ன சொன்னாலும் கட்சியின் மையச் செயற்குழு தான் இறுதித் தீர்மானத்தை எடுக்கும். தனி மனிதர்களின் கருத்துக்கள் முக்கியமல்ல - என்றார். (5)

## தூக்குத் தண்டனை கைதியைக் கொல்லச் சதி

### பொலிஸார் முந்தியதால் பிசுபிசுத்துப்போனது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தெமட்டகொடை சமிந்தவை கொலை செய்வதற்கு பாதாள உலகக் குழுவினர் தீட்டிய திட்டத்தை முறியடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடு லலித் என்பவரின் நெருங்கிய சகாவான ராகம சரித்தவின் உறவினர்கள் ஊடாகவே இந்தத் திட்டத்தை அறிந்து முறியடித்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

'ராகம சரித்தவின் வீட்டுக்குச் சிலர் பொதியொன்றை எடுத்துச் செல்வதாக பேலியகொடை பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவினருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை தகவல் கிடைத்தது. பொதியை எடுத்துச் செல்ல வந்திருந்த கணவன், மனைவியைக் கைது செய்தோம்.

அந்தப் பொதியைச் சோதனையிட்ட போது அதில் பொலிஸ் பரிசோதகருக்கான ஆடை, சீருடையில் இருக்கும் நட்சத்திரங்களுக்கு மேலதிக பொதியிலும் மேலும் சில நட்சத்திரங்கள் இருந்துள்ளன. அத்துடன் சந்தேக நபர்கள் பயணித்த வாகனத்தில் ரி56 ரக துப்பாக்கியையும் கைப்பற்றினோம்.

சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் திடுக்கிடும் தகவல் கிடைத்தது. டுபாய் நாட்டுக்கு தப்பிச் சென்றுள்ள மதுஷ் கொழும்பு பாதாள உலக குழு உறுப்பினரான தெமட்டகொடை சமிந்தவை கொலை செய்ய திட்டமிட்டுள்ளார். அதுவும் நீதி மன்றத்தில் வைத்து இந்த கொலையை செய்ய அவர் திட்டமிட்டிருந்தாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது' என்று பொலிஸார் தெரிவித்தனர். (5)

# 'பிக்போஸ்' போல அம்பிட்டிய தேரர் தென்படுகிறார்

### தமிழருக்கு எதிராகச் செயற்பட்டதை மறக்க வேண்டாம் என்கிறார் இந்திரகுமார்

மட்டக்களப்பு, ஓக. 21

"தமிழ் மக்களுக்கு எதிராகவும், தமிழ் அதிகாரிகளுக்கு எதிராகவும் அடாவடித்தனம் புரிந்த அம்பிட்டிய சுமணரத்தன தேரர் தற்போது தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவர் போலக் காட்டிக் கொள்கின்றார். அவர் கடந்த காலங்களில் செய்ததை மறக்க வேண்டாம்". இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

பட்டிப்பளை பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பலரும் அம்பிட்டிய சுமணரத்தன தேரரைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றனர். ஒரு சிலருக்கு அவர் 'பிக்போஸ்' முறையிலேயே தென்படுகின்றார். அதனால்தான் அவரைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கும், தமிழ் அதிகாரிகளுக்கும், தமிழ் அரசியல் தலைமைக்கும் எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த அவர் திடீரென ஏன் மனம்மாறியுள்ளார். இதன் பின்புலம் என்ன ? தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இந்தத் தேரர்தான் பட்டிப்பளை பிரதேச எல்லையில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கு முனைப்பாக இருந்தவர். இவர் கடந்த டிசெம்பர் மாதம், பொதுபலசேனாவின் ஞானசாரதேரரை மட்டக்களப்புக்குள் அழைத்து வருவதற்காக என்ன செய்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான குழுவினர் போக இடமில்லாமல் இப்போது அம்பிட்டிய சுமணரத்தன தேரரிடம் சரணடைந்துள்ளனர் - என்றார். (5)

## ரவி ஏற்பாடு செய்த கூட்டம் ரத்து

கொழும்பு, ஓக. 21

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க அடுத்த மாதம் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்களை கொழும்பில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் இரத்துச்செய்யப்பட்டதை வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதுவரர்களுக்கு அறிவிக்கும் சுற்றறிக்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடே ரவி கருணாநாயக்க மேற்கொண்ட இறுதி உத்தியோகபூர்வ ஆவணம் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## இலங்கையிலும் புகலிடம் கோரும் அகதிகள்

கொழும்பு, ஓக. 21

சிரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 677 அகதிகள் இலங்கையில் புகலிடம் கோரியுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளைச் சேர்ந்த 312 அகதிகள் இலங்கையில் புகலிடம் கோரி, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் இலங்கைக் காரியாலயத்தில் இந்த ஆண்டு பதிவு செய்து கொண்டுள்ளனர். இலங்கையில் இதுவரை புகலிடம் கோரி பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 677 எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் புகலிடம் கோரியுள்ளவர்களில் அதிகளவானவர்கள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாட்டுக் குடிமக்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு புகலிடம் கோரியுள்ள எவருக்கும் இலங்கையில் நிரந்தர குடியுரிமை வழங்கப்படவில்லை. அகதிகள் தொடர்பான பன்னாட்டுப் பிரகடனங்களில் இலங்கை கையொப்பமிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# அரசியல் கத்துக்குட்டிகள் எனக்கு கணக்கு படிப்பிக்கத் தேவையில்லை

### லக்ஸ்மன் யாப்பா கொதிப்பு

கொழும்பு, ஓக. 21

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்பு ஏழு வருடங்கள் வங்கியொன்றில் பணிபுரிந்திருப்பதால் அரசியலில் இப்போது பிரவேசித்திருக்கும் கத்துக்குட்டிகள் எனக்கு கணக்குச் சொல்லித்தரத் தேவையில்லை என்று பொது நிறுவனங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி மோசடி விவகாரம் சரியான முறையில் கையாளப்படாவிட்டால் அடுத்த 30 ஆண்டுகளில் இலங்கைக்கு ஒரு ட்ரில்லியன் ரூபாவரை நட்டம் ஏற்படுமென நான் தெரிவித்திருந்தேன். எனினும், ட்ரில்லியனுக்கும் மில்லியனுக்கும் வித்தியாசம் தெரியாத ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எனது கணிப்பு பிழையானது எனச் சுட்டிக்காட்டினார்.

நான் ஏற்கனவே கூறியபடி அரசியலுக்கு வருவதற்கு முன்பே வங்கியொன்றில் பொறுப்பான பதவியொன்றில் ஏழு வருடங்கள் இருந்திருக்கிறேன். அதற்கும் மேலாக இருபது வருடங்கள் அமைச்சராக இருந்திருக்கிறேன்.

எனக்கு ட்ரில்லியனுக்கும் மில்லியனுக்குமுள்ள வித்தியாசம் நன்றாகத் தெரியும். அரசியலில் இன்னும் கத்துக்குட்டிகளாகவே இருக்கும் நளின் பண்டார போன்றவர்கள் எனக்குக் கணக்குப்பாடம் எடுக்கத் தேவையில்லை.



பிணைமுறி மோசடியாளர்கள் சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் கொள்ளையிட்ட பணம் மீட்கப்படாவிட்டால் அடுத்த முப்பது ஆண்டுகளில் இலங்கைக்கு கிட்டத்தட்ட ஒரு ட்ரில்லியன் ரூபாவரை நட்டம் ஏற்படுமென மீண்டும் வலியுறுத்திக்கூறவிரும்புகின்றேன்.

பிணைமுறி மோசடி விவகாரம் பற்றி விசாரணைசெய்ய அரச தலைவர் ஆணைக்குழுவொன்றை நியமித்ததற்கு எனது பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அவர் அவ்வாறு செய்திருக்காவிட்டால் இந்தப் பெரிய மோசடி வெளியுலகத்துக்குத் தெரியவராமலே மூடி மறைக்கப்பட்டிருக்கும் - என்றார். (5)

## உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்துவதற்கு அரசு முடிவு

உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சட்டவரைவில் சில சரத்துகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தின் சிறப்புப் பெரும்பான்மை பெறப்படவேண்டும். அந்தச் சரத்துக்கள் தொடர்பில் பொதுசன வாக்கெடுப்பொன்று நடத்தப்படவேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி சட்டவரைவில் காணப்படும் ஒருசில முரண்பாடான சரத்துகளை நீக்குவதற்கும் அதன்பின்னர் அதனை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

தலைமை நீதியரசர் பிரியசாத் டெப், உயர்நீதிமன்ற நீதியரசர்களான அனில் குணரத்ன, நளின் பெரேரா ஆகியோர் அடங்கிய ஆயமே இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

2006ஆம் ஆண்டின் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் செய்யப்படவுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்ந்த உயர்நீதிமன்றம் அதில் செய்யப்படவேண்டிய ஒருசில மாற்றங்களைப் பற்றி பரிந்துரை செய்திருக்கின்றது எனவும், அந்த மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர் அது நாடாளுமன்றத்துக்கு செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். (5)

## கைது செய்ய முயற்சி

### பதறுகிறார் நாமல்

கொழும்பு, ஓக. 21

என்னைக் கைது செய்யவதற்கு அரசு முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மாத்தறை கம்புறுபிட்டி பிரதேசத் தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னைக் கைது செய்வதற்கு அரசு சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் அரசியல்வாதிகளை கைது செய்ய அரசு திட்டமிட்டு வருகின்றது என்றார். (5)

# ஜப்பான் மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி இனி அதிகரிக்கும்!

நிதியமைச்சர் மங்கள சமரவீர கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ள வரிக்குறைப்பால் ஜப்பானிய மோட்டார் சைக்கிள்களை மீண்டும் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு காணப்படுவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் மோட்டார் சைக்கிள்களின் இறக்குமதிப் பெறுமதியில் 90 சதவீதம் வரியாக அறவிடப்பட்டுவந்தது. புதிய திட்டத்தின்கீழ் அவற்றின் எஞ்சின் வலுவுக்கேற்ப தீர்வை அறவிடப்படுவதுடன், எஞ்சின் வலு 150 சி.சிக்கும் குறைவாக இருக்கவேண்டும் எனவும், இந்த வரிச்சலுகையால் தங்களுக்கு ஜப்பானிய மோட்டார்சைக்கிள்களை மீண்டும் இறக்குமதிசெய்யமுடியும் எனவும் இலங்கை மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் இந்திக்க சம்பத் மிரின்சிகே தெரிவித்திருக்கின்றார்.

சிறிய லொறிகளுக்கும் தனி கெப் வாகனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகையால் அவற்றின் விலை 3 இலட்ச ரூபா வரையிலும் குறைவடையும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (5)

# அரசுக்குள் கறுப்பு ஆடுகள் மைத்திரியிடம் அறிக்கை

கொழும்பு, ஓக. 21
கூட்டு அரசில் இருந்து கொண்டு மகிந்த அணியுடன் உறவாடும் உறுப்பினர்கள் விவரமடங்கிய அறிக்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
புலனாய்வுப் பிரிவினரால் கையளிக்கப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் கூட்டு அரசிலிருந்து வெளியேறுவதற்கு தயாராகி வருபவர்களின் பெயர் விவரமும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளது.
கூட்டு அரசமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது. அதன் பின்னரே தாவல்கள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே புலனாய்வு அறிக்கையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
மகிந்த அணியிலிருந்து ஏழு உறுப்பினர்கள் அரசுடன் இணைவார்கள் எனக் கூறப்படும் நிலையில் ஐவர் வருவது உறுதியாகியுள்ளது என்றும், அதற்குரிய சங்கமம் அடுத்தமாதமளவில் இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.
(5)

# அரசை விமர்சிக்க சிவில் சமூகத்தை களமிறக்க பசில் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 21
அரசுக்கு எதிராக கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவும், அதன் செயற்பாடுகளை விமர்சித்து மக்கள் மத்தியில் பரப்புரைகளை முன்னெடுப்பதற்காகவும் பொதுஜன பெரமுனவின் சார்பில் சிவில் அமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளது. முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச இந்த முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார்.
மகிந்தவுக்கு சார்பான பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள் உள்பட பல்துறையிலுள்ள நிபுணர்களுடனும் பசில் ராஜபக்ச பேச்சு நடத்திவருகிறார்.
எதிரணி அரசியல்வாதிகள் அரசு மீது விமர்சனங்களை முன்வைத்தால் அது அரசியல் எதிர்ப்பு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது. இதனால் நிபுணர்களைக் களமிறக்கி விமர்சனங்களை முன்வைக்க மகிந்த அணி தீர்மானித்துள்ளது எனக் கூறப்படுகின்றது. (5)

# இலத்திரனியல் அ.அட்டைக்கு குடும்ப விவரங்கள் வழங்குவது விண்ணப்பதாரியின் தெரிவு

கொழும்பு, ஓக. 21
புதிதாக விநியோகிக்கப்படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்பவர்கள் தாங்கள் விரும்பினால் மட்டுமே தமது குடும்ப விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். அந்தத் தகவல்களை வழங்க விரும்பாதவர்கள் அதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக மேலும் தெரிவித்ததாவது:
இலத்திரனியல் அடையாள அட்டைக்கான சட்டதிட்டங்கள் பற்றிய பிரேரணையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன அமைச்சரவைக்கு நாளை சமர்ப்பிக்கவுள்ளார்.
இந்த அடையாள அட்டையில் விண்ணப்பதாரியின் உயிரியல் விவரங்கள் உள்ளடக்கப்படும். அவர் விரும்பினால் அவரது குடும்ப விவரங்களையும் அதில் உள்ளடக்கலாம். அவ்வாறு வழங்க விருப்பமில்லாதவர்கள் அதற்காக சமர்ப்பிக்கும் காரணங்கள் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருக்கவேண்டும்.
விண்ணப்பங்களில் விண்ணப்பதாரிகள் தங்களது பெற்றோர், பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் விவரங்களை வழங்கவேண்டும். தேசிய ரீதியிலான தரவு மையமொன்றை உருவாக்குவதற்காகவே குடும்ப விவரங்கள் கேட்கப்படுகின்றன.
2019ஆம் ஆண்டளவில் 16 மில்லியன் குடிமக்களுக்கு இலத்திரனியல் அடையாள அட்டைகளை வழங்கிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த அட்டைகளில் அதன் உரிமையாளர்களின் கைரேகை அடையாளம், ஒளிப்படம் மற்றும் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை உள்ளடக்கப்படும்.
இந்த அட்டை வழங்கப்பட்ட தினத்திலிருந்து 40 வருடங்களுக்குச் செல்லுபடியாகும். அதன்பின் ஒவ்வொரு பத்து வருடங்களுக்கும் அது புதுப்பிக்கப்படவேண்டும்.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் முதலாவது அடையாள அட்டை வழங்கும் செயற்பாடு ஆரம்பமாகும் - என்றார்.
(5)

'ட்ரயல் அட் பார்' விடயத்தில்

# படையினரை முன்னிறுத்தி மகிந்தவைக் காக்க முயற்சி

## சு.க. அதிருப்தியாளர்களின் திட்டம் இது

மகிந்த ஆட்சியின்போது இடம்பெற்றபெரிய ஊழல்,மோசடிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத் துவதற்காக மேல்நீதிமன்றத்தில் 'ட்ரயல் அட் பார்' முறையில் விசாரணை நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.
'இப்படியொரு கட்டமைப்பை உருவாக்கினால் படையினருக்கு எதிரான விசாரணை களையும் இதே பாணியில் துரிதப்படுத்துமாறு பன்னாட்டுச் சமூகத்திடமிருந்து அழுத்தங்கள் விடுக்கப்படக் கூடும். இது உட்பட மேலும் சில காரணிகளைக் கருத்திற்கொண்டே எதிர்ப்பை வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்' என்று சுதந்திரக் கட்சியின் அதிருப்தி அணியைச் சேர்ந்த பிரதியமைச்சர் தெரிவித்தார்.
இது பற்றிக் கலந்துரையாடுவதற்காக சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கூடவுள்ளனர். அதன்பின்னர் இந்த முடிவு அரச தலைவருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.
கடந்த ஆட்சியின்போது இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் மேல்நீதிமன்றத்தில் 'ட்ரயல் அட் பார்' முறையில் விசாரணை நடத்துவதற்கு அமைச்சரவையில் இணக்கம் காணப்பட்டுள்ளதென்று அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். சுதந்திரக் கட்சியில் உள்ள சில உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். தேசிய அரசிலிருந்து வெளியேறுவதற்குத் தயாராகிவருகின்றனர் எனக் கூறப்படும் அதிருப்திக்குழுவினரே இந்த நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்று அறியமுடிகின்றது. (5)

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம்
04 . 02 . 1939

மறைவு
11 . 09 . 2007
அரியகுட்டி நாகராஜா
திதி: அமாவாசை (21.08.2017)
நிஜமாக நீங்கள் மறைந்து பத்து ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லாமனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைந்து – தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம் – அப்பா
காலங்கள் ஓடிக்கடந்தாலும் – உங்களை எப்போதும்
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்
உங்கள் நினைவுகளுடன் என்றும்...
" கஜபதி "
சிவகுரு ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.
021 221 7200

2ஆம் ஆண்டு நினைவலைகள்
பெஞ்சமின்
குணநாயகம்
தோற்றம் - யாழ்ப்பாணம்
03.03.1946
மறைவு - பிரான்ஸ்
21.08.2015
நீங்கா நினைவுடன் : குடும்பத்தினர்.
154, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.


கண்ணீர் அஞ்சலி
எமது நீண்டகால
நிர்வாக உறுப்பினரும்
ஆதரவாளருமான
பொன்னம்பலம்
இராசரத்தினம்
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த

அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் -

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
அன்னலட்சுமி
சங்கரப்பிள்ளை
இறந்தும் இறவாமல் எம்
இதயங்களில்
தெய்வச் சுடரொளியாய்
வீற்றிருக்கும்
எங்கள் அன்னையே!
உங்கள் அன்பு வழிநின்று
நல்லறம் பேணி
இவ்வுலகில் வாழ
உங்கள் ஆசீர்வாதம்
வேண்டி நிற்கின்றோம்!
குடும்பத்தினர்.
கொட்டக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.
தோற்றம் 18.04.1943
மறைவு 25.08.2014
திதி: அமாவாசை

20ஆவது திருத்தம்

## தமிழ் பேசும் தரப்புகள் உரிய முடிவை எடுக்குமாம்

மட்டக்களப்பு, ஓக. 21
20ஆம் திருத்தச் சட்டவரைவு தேவையற்றது. அந்தச் சட்டவரைவு தொடர்பில் தமிழ்பேசும் தரப்புக்கள் அனைத்தும் தீர்க்கமான முடிவை எடுக்கும். இவ்வாறு கிராமிய அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி தெரிவித்தார்.
ஏறாவூரில் தொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணசபை உரிய காலத்தில் கலைக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இல்லாவிட்டால் நாங்கள் எப்படியாவது கலைப்போம்.
மாகாணசபைகளது கால எல்லையை நீடிப்பது அல்லது அதிகாரங்களை கொழும்பு அரசிடம் கொடுப்பது என்கின்ற விடயத்தை முன்னிறுத்தித்தான் 20ஆம் திருத்தச் சட்டவரைவு வருமாக இருந்தால் அப்படியான சட்டவரைவே தேவையில்லை.
வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்குரிய நிகழ்ச்சி நிரல்களை கொழும்பு அரசிடம் ஏன் நாம் ஒப்படைக்க வேண்டும்?
தமிழ்த் தரப்பு தங்களது அதிகாரத்தை கொழும்பு அரசிடம் வழங்கிவிட்டு, எங்களது அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது என்று கூப்பாடு போடுவார்களோ என்பதைப் பார்ப்பதற்கு பலர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.
எங்கள் எல்லோரையும் விட சம்பந்தன் ஐயா ஒரு மூத்த அரசியல்வாதி. அவர் மிகவும் தீர்க்கமான முடிவை எடுக்கக்கூடியவர். 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பிலும் அவர் தீர்க்கமான முடிவை எடுப்பார் என்று நம்புகின்றோம் - என்றார். (5-46)

அமைதி முயற்சியில்

## 1 1/2 வருடம் காக்கப்பட்ட இரகசியம்

### இப்போது வெளியிட்டார் சொல்ஹெய்ம்

கொழும்பு, ஓக. 21
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அமைதி முயற்சிகளை முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க மிகவும் இரகசியமாகவே வைத்திருந்தார் என்று நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர், நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்.
அமைதி முயற்சிகளில் ஈடுபடுமாறு எமக்கு விடுத்த அழைப்பை அப்போதைய அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க மிகவும் இரகசியமாகவே வைத்திருந்தார்.
அதுபற்றி அப்போது கொழும்பில் இரண்டு பேருக்கு மாத்திரமே தெரிந்திருந்தது. ஒருவர் சந்திரிகா குமாரதுங்க. மற்றவர், முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்.
கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள் இந்த இரகசியம் பேணப்பட்டது. அதற்குப் பின்னரே பகிரங்கப்படுத்தப்பட்டது.
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான எனது முதலாவது சந்திப்புத் தொடர்பாக, அப்போதைய தலைமை அமைச்சர் கூட அறிந்திருக்கவில்லை என்றார். (5)

# பிள்ளைகளை இராணுவத்துக்கு காட்டிக் கொடுத்த "முண்டங்கள்" இப்போது எங்களுடன் திரிகின்றன

## கடந்தகால தமிழ் ஒட்டுக்குழுக்களை கடுமையாகச் சாடுகிறார் தமிழ் அரசுக் கட்சியின் செயலர்

மட்டக்களப்பு, ஓக. 21
எமது பிள்ளைகளை வெறுமனே இராணுவம் மாத்திரம் பிடித்துக்கொண்டு செல்லவில்லை. இராணுவத்தினருடன் இணைந்து வரும் முண்டங்கள் தான் எமது பிள்ளைகளை காட்டிக்கொடுத்தவர்கள். எமது பிள்ளைகளைக் காட்டிக் கொடுத்த முண்டங்கள் தற்பொழுது எங்களுடன் திரிகின்றன.
முன்னாள் தமிழ் துணைராணுவக் குழுவாகச் செயற்பட்டு தற்போது சனநாயக அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குழுக்களை மறைமுகமாச் சாடிக் கருத்துத் தெரிவித்தார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம்.
மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல்போன 62 பேரின் 27 ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.
இங்கு உரையாற்றிய கி.துரைராஜசிங்கம் மேலும் தெரிவித்ததாவது:
எமது பிரதேசங்களில் இடம்பெற்ற அழிவுகளைப் பார்க்கின்றபோது தற்போது உயிரோடு இருப்பவர்கள் பல கண்டங்களைக் கடந்தவர்களாகக் காணப்படுகின்றோம். நான் கூட மூன்று முறை கண்டங்களை கடந்துள்ளேன். இராணுவத்தினரிடமிருந்து இரண்டு முறையும் இயக்க நண்பரிடமிருந்து ஒரு முறையும் தப்பியுள்ளேன். இவ்வாறு தப்பாமல் இருந்திருந்தால் என்னுடைய பெற்றோர்




அல்லது உறவினர்கள் எனது ஒளிப்படத்தை ஏந்தி நின்றிருப்பர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயரில் என்னுடைய பெயரும் சேர்க்கப்பட்டிருக்கும். அந்தக் காலத்தில் எமது மக்கள் இராணுவத்தினரைப் பார்த்து பயப்படவில்லை. அவர்களுடன் இணைந்து செயற்பட்ட எமது சகோதரர்களைப் பார்த்துத்தான் பயப்பட்டார்கள். எமது பிள்ளைகளை வெறுமனே இராணுவம் பிடித்துக்கொண்டு செல்லவில்லை. இராணுவத்தினருடன் இணைந்து வரும் முண்டங்கள்தான் எமது பிள்ளைகளை எல்லாம் காட்டிக்கொடுத்தவர்கள். எமது பிள்ளைகளைக் காட்டிக்கொடுத்த முண்டங்கள் தற்பொழுது எங்களுடன் திரிகின்றன.
இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எனக் கூறுகின்ற விடயங்களிலே கூடுதலாகச் சம்மந்தப்பட்டிருப்பவர்கள் எங்களுடைய ரத்தத்தின் ரத்தங்களே.
இராணுவத்தினருக்கு எல்லோரும் தமிழர்களே. அவர்கள் தமிழர்களை முற்றாக சுட்டு அழிப்பதற்கு வரவில்லை. அவர்களது அகராதியில் பயங்கரவாதிகள் என எழுதப்பட்டவர்களை அழிப்பதற்கு இங்கு வந்தார்கள். அந்தப் பயங்கரவாதிகள் யார் என்பதைக் காட்டிக்கொடுத்தவர்கள் எங்களுடைய சகோதரர்கள் தான்.
கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவரகளின் நினைவு தினம் வருகிறது. அங்கும் இந்த முண்டங்கள் தான் காட்டிக்கொடுத்தன. 1995ஆம் ஆண்டு சித்தாண்டி ஆலயத்தில் மயில்கட்டுத் திருவிழா நடந்துகொண்டிருந்த வேளை அங்கு புலிகள் வந்ததாக கூறி இராணுவத்தினரை அழைத்துவந்தவர்கள் யார் என அனைவருக்கும் தெரியும். ஆலயத்தினுள் சப்பாத்துக் காலுடன் வந்ததுமில்லாமல் கோபுரத்தின் மீதும் ஏறினார்கள்.
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடைபெற வேண்டுமானல் இலங்கையில் நடைபெற வேண்டும். இலங்கை நீதிபதிகளைக் கொண்டு நடைபெற வேண்டும். இதிலே பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடு இருக்க கூடாது என்று அரசு கூறிவந்தது. கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் நடைபெற வேண்டும். அந்த விசாரணைகள் இலங்கை நீதிபதிகளைக் கொண்டுதான் நடைபெறும். பன்னாட்டு நீதியாளர்கள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று அயலுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திலக் மாரப்பன கூறியுள்ளார். ஒரு படி முன்னேற்றமாகும்.
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பன்னாட்டுச் சமூகம் தலையிட வேண்டாம் என்று அரசு கூறியது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முயற்சியால் பன்னாட்டுச் சமூகம் தலையிட்டது. நீதிவிசாரணை வேண்டாம், பன்னாட்டு விசாரணையாளர்கள் இருக்க கூடாது என்றது அரசு. ஆனால் நாங்கள் அதையும் கொண்டு வந்துள்ளோம்.
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒன்றுமே செய்வில்லை என்று பலர் பரப்புரை செய்து வருகிறார்கள். மிகவும் நிதானமாக பக்குவமாக இந்தக் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த நிலையில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் - என்றார். (5-46)

# சொல்ஹெய்ம் செவ்விக்கு பதிலளிக்க பீரிஸ் மறுப்பு



கொழும்பு, ஓக. 21
இலங்கையில் நோர்வேயின் அமைதி முயற்சிகள் தொடர்பாக, நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வழங்கிய செவ்வி தொடர்பாக, முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிட மறுத்துள்ளார்.
நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்திய ஊடகத்தின் மூத்த அயலுறவுத் துறை ஆசிரியர் பத்மா ராவ் சுந்தர்ஜிக்கு நீண்ட செவ்வியை வழங்கியுள்ளார்.
நோர்வேயின் அமைதி முயற்சிகள் எவ்வாறு தொடங்கப்பட்டன, விடுதலைப் புலிகளுடனான முதல் சந்திப்பு, புலிகளின் தலைவர் பிரபாகரனின் குணவியல் புகள், அமைதி முயற்சிகள் தோல்வி கண்டமைக்கான காரணங்கள் மற்றும் போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைவதற்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முயற்சி மற்றும் சரணடையச் சென்றவர்கள் கொல்லப்பட்டமை, பாலச்சந்திரனின் படுகொலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.
எரிக் சொல்ஹெய்மின் இந்தச் செவ்வி குறித்து, முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசிடம் கொழும்பு ஆங்கில ஊடகம் கேள்வி எழுப்பியிருந்தது.
அவர் இதுகுறித்து கருத்து எதையும் தெரிவிக்கத் தயாரில்லை என்று மறுத்துள்ளார். (5)

மன்னார் கடல்படுக்கை

## அகழ்வுக்கான ஆர்வத்தை இந்தியா, சிங்கப்பூர் வெளிப்படுத்தியுள்ளது

மன்னார் கடல்படுக்கையில், எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வில் இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாக, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம், சாலிய விக்கிரமசூரிய தெரிவித்தார்.
மன்னார் கடல் படுக்கையில் உள்ள 13 துண்டங்களில்,8துண்டங்களில்அகழ்வை மேற்கொள்வதற்கு, 8 வெளிநாட்டு நிறுவனங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. இது வெற்றியளித்தால் இலங்கைக்கு நன்மையாக இருக்கும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.ஏற்கனவேகெய்ன் இந்தியா நிறுவனம் மன்னார் கடல் படுக்கையில்,2ஆவதுதுண்டத்தில்எண்ணெய் அகழ்வு முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. எரிபொருள் விலைச் சரிவை அடுத்து, இந்தத் துண்டத்தில் எரிவாயு அகழ்வு முயற்சியில் இருந்து விலகுவதாக, 2015ஆம் ஆண்டு அந்த நிறுவனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# திருடனுடன் 'டீல்' பேசிக் கொண்டு நீதி அமைச்சராக இருக்க முடியாது

## விஜயதாச ராஜபக்ச மீது ரஞ்சன் ராமநாயக்க கடும் தாக்கு

கொழும்பு, ஓக. 21

திருடனுடன் டீல் பேசுபவர் நீதி அமைச்சராக இருக்க முடியாது. யார் என்று பார்க்காமல் திருடனைப் பிடித்து அடைப்பவரே நீதி அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் பிரதி அமைச்சருமான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சியில் ஊழலில் ஈடுபட்ட திருடர்களை பிடிக்கும் விடயத்தில் விஜயதாச காட்டும் தாமதத்தை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுள் 99 வீதமானவர்கள் எதிர்க்கின்றனர். அவரால் இந்தப் பணியைச்செய்ய முடியாவிட்டால் வேறு ஒருவரிடம் கொடுத்து விட்டு ஒதுங்குவதே பொருத்தமானது. அவர் அவருக்குப் பொருத்தமான வேறு ஓர் அமைச்சைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவர் கௌவரமாக இந்த அமைச்சில் இருந்து விலகுவார் என்று நாம் நம்புகிறோம். திருடனுடன் டீல் பேசுபவர் நீதி அமைச்சராக இருக்க முடியாது. யார் என்று பார்க்காமல் திருடனைப் பிடித்து அடைப்பவரே நீதி அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும்.

அஜித் பீ பெரேராவிடம், சரத் பொன்சேகாவிடம் அல்லது என்னிடம் இந்த அமைச்சை ஒப்படைக்குமாறு நான் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்கிறேன். என்னைப் பிரதி



அமைச்சராகவேனும் நியமிக்கட்டும். எனது கட்சிக்குள் இருக்கின்ற திருடர்களைக் கூட பிடித்து சிறையில் அடைப்பேன்.

இது தொடர்பில் நல்லதொரு முடிவை எடுக்கும் பொறுப்பை நாம் தலைமை அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளோம். நல்ல முடிவு ஒன்று விரைவில் கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். திருடர்கள் அனைவரும் கைது செய்ய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது என்றார். (5-3)

# ஓரிரு மாதங்களுக்குள் மகிந்த ஆட்சிபீடமேறுவார்

## அவரது அணியினரின் எதிர்பார்ப்பு இது

கொழும்பு, ஓக. 21

இந்த அரசுக்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதால் இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகிவிடுவார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சி.பீ. ரத்னாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசின் பெரிய ஊழல்கள் இன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளன. முதலாவது திருடன் சிக்கி இன்று அவர் அமைச்சுப் பதவியிலிருந்து விலகியுள்ளார். நாம் அவரை விலக்குவதற்கு முன் அவராகவே விலகிக்கொண்டார். அவர் விலகி இருக்காவிட்டால் அவரை நாங்கள் நிச்சயம் விலக்கி இருப்போம். அது அரசின் பலவீனத்தைக் காட்டிவிடும் எனப் பயந்து அரசைக் காப்பாற்றுவதற்காக அவர் விலகியுள்ளார்.

இருந்தாலும், இந்த அரசை மக்களிடம் இருந்து காப்பாற்ற முடியாது. அரசை நாம் கவிழ்ப்பது உறுதி.

இந்த அரசுக்கு எதிராக நாடு முழுவதிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதால் இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகிவிடுவார். புதிய ஆட்சியுடன் நாம் விரைவில் இந்த நாட்டு மக்களைச் சந்திப்போம்.

ரவிக்கு எதிரான வாக்கெடுப்புக்கு அரசு பயந்ததுபோல் ஏனைய தேர்தல்களுக்கும் பயப்புடுகிறது. மக்களை எதிர்கொள்ள இவர்களுக்கு அச்சம். இவர்களின் முகமூடி கிழிந்துவிட்டதை அரசு உணர்ந்துள்ளதால்தான் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இல்லையேல் நாம் மக்களை வீதிக்கு இறக்கி நாடு முழுவதிலும் பெரிய போராட்டங்களை நடத்துவோம். மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் அதிகாரம் இந்த அரசுக்கு இல்லை. இந்த அரசுக்கு நாம் நல்ல பாடம் புகட்டுவோம் - என்றார். (5-3)

# மதிப்பு இருந்தால் பதவி விலகுங்கள்

## விஜயதாசவுக்கு பொன்சேகா சவால்

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு சமூக மதிப்பு இருந்தால் அவர் பதவியிலிருந்து விலக வேண்டும். இவ்வாறு அமை்சர் பீல்ட் மார்சல் சரத்பொ ன்சேகா சவால் விடுத்துள் ாார்.

இது தொடா் ல் அவர் மேலும் தெரிீ ித்ததாவது:

விஜயத ..ச ராஜபக்சவின் செயர் பாடுகள் தொடர்பில் ஐக்கி'ப தேசியக் கட்சி நாடாளுப ன்ற உறுப்பினர்கள், செயற்குழு என்பன கண்ட ாங்களை வெளியிட்டுள்ளன. அவரது செயற்பாட்டினை அனைவரும் நிராகரித்துள்ளனர். வன்மையாகக் கண்டித்துள்ளனர். அவர் எந்த இடத்தில் உள்ளார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவருக்கு கௌரவம் இருந்தால் பதவியிலிருந்து விலக வேண்டும்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் எதனையும் கூற வில்லை. செயற்குழுக் கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டங்களில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விடயங்களை எடுத்துரைத்தார். அதன் பின்னர் விஜயதாச ராஜபக்சவினை அழைத்துச் சென்று சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் விடயங்களை பொறுமையாக எடுத்துரைத்தார். அவர் சிறந்த தீர்மானத்தை எடுப்பார் என்று நம்புகின்றேன் என்றார். (5)

# மகிந்தவிடமிருந்து வெளியேறியவர் மீண்டும் அவரிடமே செல்லக்கூடாது

## விஜயதாசவுக்கு டிலானின் அறிவுரை

கொழும்பு, ஓக. 21

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை ஐக்கிய தேசியக் கட்சி தனது கட்சியிலிருந்து விலக்கினால் அவர் மகிந்தவுடன் இணையாமல் மைத்திரியுடன் வந்து இணையவேண்டும். இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் அமைச்சர் டிலான் பெரேரா.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமைக்கு நீதி அமைச்சர் விஜயதாச எதிப்புத் தெரிவித்துள்ளதால் அவருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். விஜயதாசவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள மகிந்த அணியினர் அவரை அந்த அணி



யில் வந்து இணையுமாறு அழைப்பும் விடுத்துள்ளனர். அந்த அணியில் எந்த ராஜபக்ச வேண்டுமானாலும் இணையலாம். ஆனால், விஜயதாச ராஜபக்சவால் இணையமுடியாது. இணைந்தால் அவரது அரசியல் வாழ்க்கை அவ்வளவுதான். மகிந்த அணியினர் இனவாதிகள்; மதவாதிகள். அவர்களுடன் போய் இவர் இணைந்தால் என்ன நடக்கும் என்று நினைத்துப் பாருங்கள். மகிந்தவுடன் இருந்துதான் விஜயதாச ஐக்கிய தேசியக் கட்சியிடம் சென்றார். அந்த அணி எப்படிப்பட்டது என்பதை விஜயதாச நன்கு அறிவார். அவ்வாறு அறிந்துகொண்டும் அவர்களிடம் போவது முட்டாள்தனம்.

கடந்த காலங்களில் விஜயதாசவை அதிகம் விமர்சனம் செய்தவர்கள் அவர்கள். ஊழலுக்கு எதிராக துணிச்சலுடன் குரல் கொடுக்கும் விஜயதாச அப்படிப்பட்டவர்களிடம் செல்லக்கூடாது.

ஐக்கிய தேசியக் கட்சி விஜயதாச ராஜபக்சவை கட்சியில் இருந்து விலக்கினால் மகிந்தவுடன் போய் இணையாமல் மைத்திரியுடன் வந்து இணையுமாறு நான் அவருக்கு அழைப்பு விடுக்கின்றேன் -என்றார். (5)

# தபால் திணைக்கள ஊழியர்கள் போராட்டத்தில் குதிக்கத் திட்டம்

கொழும்பு, ஓக. 21

எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சிறப்பு அமைச்சரவை குழு வழங்கிய யோசனைகளை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று, கூட்டுத் தபால் தொழில்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் சில வாரங்களுக்கு முன்னர் தொடர் பணிப்புறக்கணிப்பில் குதித்திருந்தோம். அரசு தலையிட்டு எம்முடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாகக் கைவிட்டிருந்தோம்.

எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சரவையினால் சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் சில யோசனைகளை இப்போது முன்வைத்துள்ளனர். அதனை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கா விட்டால், எதிர்வரும் சில தினங்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் மீண்டும் ஈடுபடுவோம் என்றார். (5)

# நீதி அமைச்சர் விஜயதாச தலைமை அமைச்சராவதில் ஐ.தே.கட்சியினருக்கு பொறாமை

## நம்பிக்கையில்லாப் பிரேரணை அதானால்தான் என்கிறார் பிரதி அமைச்சர் முத்துஹெட்டிகம

கொர்ழும்பு, ஓக. 21

விஜயதாச ராஜபக்சவின் திறமைக்கு அவர் என்றாவது ஒரு நாள் தலைமை அமைச்சர் ஆசனத்தில் அமருவார். இதனாலேயே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது. இவ்வாறு கூட்டு அரசின் பிரதி அமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம தெரிவித்தார்.

காலியில் நடந்த நிகழ்வில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

நிசாந்த முத்துஹெட்டிகம மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ஆட்சியில் இருந்த திருடர்க்ளை பிடிப்பதற்காக ஐக்கிய தேசிய கட்சி தடுமாறுகிறது. அந்தத்திருடர்களை பிடிப்பதற்கு முன் அவர்கள் மத்தியில் திருடன் மாட்டியுள்ளதால் இப்போது செய்வதறியாது தடுமாறுகின்றனர். எதையாவது செய்து தங்களின் நிர்வாணத்தை மறைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

அந்த முயற்சியில் ஒன்று தான் விஜயதாசபக்சவுக்கு எதிராக அவர்கள் கொண்டு வரவுள்ள நம்பிக்கை இல்லா பிரேரணை. அந்தப் பிரேரணையை அவர்கள் கொண்டு வந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அதைத் தோற்கடிப்



போம்.

விஜயதாச ஒரு சிறந்த அறிவாளி. திறமையானவர். அவரது திறமைக்கு அவர் என்றாவது ஒரு நாள் தலைமை அமைச்சர் ஆசனத்தில் அமருவார். அப்படிப்பட்ட ஒருவரை தனிப்பட்ட சிலரின் தேவைக்காக பலி கொடுக்க முடியாது. தங்கள் கட்சியால் மேற்கொள்ளப்படும் ஊழலை மூடி மறைப்பதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் துள்ளுகின்றனர். விஜயதாசவின் பெறுமதி தெரியாமல் அவருக்கு எதிராக செயற்படுகின்றனர்.

விஜயதாசவால் ஐக்கிய தேசிய கட்சியில் இருக்க முடியாவிட்டால் எமது அவர் எமது பக்கம் வரலாம். எதிர்காலத்திற்கு இந்த நாட்டுக்குத் தேவைப்படும் ஒரு சொத்தை நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம். சுதந்திரக் கட்சியில் உள்ள அனைவரும் விஜயதாசவுக்கு ஆதரவாக கை உயர்த்துவோம் என்றார். (5)



# பார்சிலோனாத் தாக்குதலில் பிரிந்தோருக்கு அஞ்சலிகள்

மட்ரிட், ஓக. 21

ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 14 உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு ஸ்பெய்னில் மட்டுல்லாமல் உலகெங்கும் பரவலாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

பார்சிலோனாவில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகள் நெஞ்சை கலக்கமடையச் செய்யும் விதத்தில் இருந்தன. பொது இடங்களில் மக்கள் ஒன்றுதிரண்டு பூக்கள் வைத்தும், மெழுகுவர்த்திகள் ஏற்றியும் தத்தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். 'பயங்கரவாதத் தாக்குதல்களால் பார்சிலோனா ஒதுபோதும் பயப்படாது', 'தீவிரவாதத்துக்கு எதிராக தேனிக்களாக ஒன்றிணைவோம்', 'விடைபெறுங்கள் தோழர்களே', 'ஆழ்ந்த அனுதாபங்கள்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தும் மக்கள் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். இந்தத் தாக்குதலைக் கண்டித்து சில இடங்களில் பேரணிகளும் நடத்தப்பட்டன.

ஸ்பெய்னில் மட்டுமல்லாமல், கனடா, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளிலும் அஞ்சலி நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ம)

# கொங்கோவில் நிலச்சரிவு 200 பேர் துயரச் சாவு


கொங்கோ நாட்டின் இதூரி மாகாணத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலச் சரிவில் சிக்கி 200 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டத் தகவல் வந்துள்ளது. மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவின் இதூரி மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக மீனவக் கிராமமான தோரா கிராமத்தில் கடந்த புதன்கிழமை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. 50 வீடுகள் முற்றிலுமாக இடிந்துள்ளன. சுமார் 200 பேர் உயிரிழந்தனர் என்று தெரி விக்கப்படுகிறது. பலரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)






# பீகாரில் வெள்ளப்பெருக்கு 125 லட்சம் மக்கள் பாதிப்பு



> வெள்ள இடரில் சிக்கி 202 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி, ஓக. 21

பீகாரில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கால் இதுவரை ஒரு கோடியே 25 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 202 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பீகார் மாநிலத்தின் வட பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

கிசன்கஞ்ச், சமஸ்திபூர், தர்பங்கா உள்பட 18 மாவட்டங்கள் மழை, வெள்ளத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன. சுமார் ஒரு கோடியே 25 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் பரிதவித்துக் கொண்டிருந்த 6 லட்சத்து 25 லட்சம் மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்துக்கும் 300 மீட்புப் படையினர் சுமார் 300 படகுகளில் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ள இடரில் சிக்கி 202 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலர் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெள்ள இடரில் சிக்கித் தத்தளிப்பவர்களுக்கு உலங்குவானூர்திகளின் மூலம் உணவு, உலர் உடைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. (ம)

# ஐ.எஸ்ஸை முழுமையாக வென்றது ஈராக்



> ஆயுததாரிகள் முழுவதுமாகக் கொல்லப்பட வேண்டும். அல்லது அவர்கள் சரணடைய வேண்டும். இது கொண்டாடப்பட வேண்டிய வெற்றியே.

பக்தாத், ஓக. 21

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வசம் இருந்த கடைசி நகரான தல் அபர் நகரம் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது. இதனால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து முழுமையாக மீண்டுள்ளது ஈராக்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்).

அந்த அமைப்பின் கோட்டையாக ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரும், முதன்மை வர்த்தக நகருமான மோசூல் விளங்கியது. இது கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மீட்கப்பட்டது. மோசூல் மீட்கப்பட்ட பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த ஒரேயொரு ஈராக்கிய நகரமெனில் அது தல் அபர் மட்டுமே. சுமார் மூன்று வாரங்கள் நடத்தப்பட்ட கடும் தாக்குதலின் பின்னர் இந்த நகர் மீட்கப்பட்டுள்ளது.

ஈராக் தலைமை அமைச்சர் ஹைதர் அல் அபாடி இந்த வெற்றியை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். "ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை நாம் முழுமையாகத் தோற்கடித்துவிட்டோம். தரைவழி மற்றும் வான்வழியாக நடத்தப்பட்ட கடினமானதும், துல்லியமானதுமான தாக்குதல்களால் இந்த வெற்றி சாத்தியமானது. ஆயுததாரிகள் முழுவதுமாகக் கொல்லப்பட வேண்டும். அல்லது அவர்கள் சரணடைய வேண்டும். இது கொண்டாடப்பட வேண்டிய வெற்றியே" என்று அவர் குறிப்பிட்டார். தல்அபர்கடந்த 2014ஆம் ஆண்டு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் விழுந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# வெடித்துச் சிதறத் தயாராகிறது 'சுப்பர்' எரிமலை கால்டெரா

வொஷிங்டன், ஓக. 21
உலகில் உள்ள மிக ஆபத்தான எரிமலைகளில் ஒன்றாக அறியப்படும் ஜெலோஸ்ரோன் கால்டெரா, வெடிக்கத் தயாராகியுள்ளது என்று நாசா அறிவித்துள்ளது. வெடிக்கும்போது எரிமலை வெளியிடும் வெப்பத்தைக் குறைக்க பல முயற்சிகளிலும் நாசா இறங்கியுள்ளது.
உலகில் 20 சுப்பர் எரிமலைகள் உள்ளன. அவற்றில் ஒன்று ஜெலோஸ்ரோன் கால்டெரா. இது அமெரிக்காவில் வியோமிங் பகுதியில் ஹைடன் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.
இந்த சுப்பர் எரிமலை 6 லட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறை வெடிக்கும். அப்போது வெளியாகும் சாம்பல் மற்றும் குழம்பு பூமிக்கும், சுற்றுச் சூழலுக்கும் கடும் பாதிப்பையும், மனிதர்களின் உடல் நலனுக்கு கேடுகளையும் விளைவிக்கும் என்று சொல்லப்படுகிறது.
தற்போது இந்த எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளது. தற்போது அதில் இருந்து 60 முதல் 70 சதவீதம் வரை வெப்பம் வெளியாகி கொண்டிருக்கிறது. கடுமையான அழுத்தமும் ஏற்பட்டுள்ளது. இந்த எரிமலை வெடித்தால் நினைத்துப் பார்க்க முடிளாத அளவுக்கு வெப்பம் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதனால் எரிமலை வெடிக்கும்போது அதன் வெப்பத்தை இயலுமானவரை குறைக்க எரிமலையைச் சுற்றி 10 கிலோ மீற்றர் ஆழத்துக்கு துளையிட்டு அதனுள் தண்ணீரை பீய்ச்சி அடிக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்தத் திட்டத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 50ஆயிரம் கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. (ம)





ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் அண்மையில் ஏற்பட்ட நிலச் சரிவில் சிக்கி சுமார் 400 பேர் உயிரிழந்தனர். சுமார் 200 பேர் வரையிலானோர் தேடப்பட்டு வருகின்றனர். இதனால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்ற நிலை உள்ளது. மீட்புப் பணிகளுக்காகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் விதமாகவும் பன்னாட்டு உலவியைக் கேட்டிருந்தது சியாரா. இந்த ஒளிப்படம் ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஊடகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இது நிலச்சரிவின் கோரத்தைக் காட்டும் விதமாக அமைந்தது. (ம)

# ஒக்ஸ்போர்ட் பல்கலையில் யூசொப் மலாலா

லண்டன், ஓக. 21
அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலாவுக்கு, பிரிட்டனில் உள்ள உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கல்வி பயில இடம் கிடைத்துள்ளது.
பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா பெண்கள் கல்விக்காக போராடி வருகிறார். கடந்த 2012ஆம் ஆண்டு தலிபான் ஆயுததாரிகள் அவரைச் சுட்டுக்கொல்ல முயன்றனர். இதில் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய அவர் தற்போது லண்டனில் வசித்து வருகிறார். கடந்த 2014ஆம் ஆண்டு இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது. கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்ட மலாலாவுக்கு, பிரிட்டனில் உள்ள உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. இதற்காக அவர் கடுமையாக உழைத்து வந்தார். அவருடைய விடா முயற்சியின் பயனாக ஒக்ஸ்போர்ட் பல்கலை மலாலாவுக்கு இடம்கொடுத்துள்ளது. (ம)



# பயிர்களைக் காக்க 'ரோபோ' ஓநாய்கள்

வனவிலங்குகளிடம் இருந்து பயிர்களைக் காப்பாற்ற 'ரோபோ' ஓநாய்கள் ஜப்பானில் வடிவமைக்கப் பட்டுள்ளன. ஜப்பானியர்களுக்கு ரோபோ தொழில்நுட்பம் மீது ஆர்வம் அதிகம். சமீபத்தில் காவல் காக்கும் பொம்மை ஒன்றை ஓநாய் வடிவத்தில் உருவாக்கியிருக்கிறார்கள். சிவப்புக் கண்களும் நீண்ட பற்களுமாகக் காட்சிதரும் இந்த ஓநாய்கத்தினால், பறவைகள் மட்டுமின்றி, மனிதர்களே அலறி ஓடிவிடுவார்கள்.



"நான் சின்ன வயதில் வயல்களில் காவல்காக்கும் பொம்மைகளைப் பார்த்திருக்கிறேன். பறவைகள், காட்டு விலங்குகளை விரட்டி, பயிர்களைக் காப்பாற்றுவதற்காக வைத்திருப்பார்கள். சிலர் அவற்றில் விளக்கு, மணிகள்கூட இணைத்திருப்பார்கள். இவையெல்லாம் ஓரளவு பறவைகளையும் விலங்குகளையும் விரட்டுவதற்கு உதவின.
ஆனால் இன்று பல துறை களிலும் தொழில்நுட்பங்களின் உதவியால் முன்னேற்றம் வந்துவிட்டது. எனவே காவல்காக்கும் பொம்மையை மட்டும் ஏன் இன்னும் அப்படியே பயன்படுத்திக்கொண்டிருக்க வேண்டும் என்று யோசித்தேன். அதன் விளைவாக 'ரோபோ' ஓநாய்களை உருவாக்கிவிட்டோம். பறவைகள், மான்களிலிருந்து கரடிகள் வரை அனைத்தும் ரோபோ ஓநாயைக் கண்டு ஓட்டமெடுக்கின்றன' என்கிறார் அதை உருவாக்கிய நிறுனத்தின் உரிமையாளர் ஹொக்கைடோ. (ம)




# 'பாக். அன்னை திரேசா' ரூத் பாவ் விடைபெற்றார்

இஸ்லாமபாத், ஓக. 21
பாகிஸ்தானின் அன்னை திரேசா என அழைக்கப்படும் மருத்துவர் ரூத் பாவ், வயோதிபம் காரணமாக கடந்த 11ஆம் திகதி உயிரிழந்திருந்த நிலையில், அவரின் உடல் நேற்றுமுன்தினம் முழு அரச மரியாதையும் அடக்கம் செய்யப்பட்டது.
யாருமே தொடுவதற்கு கூட அருவெறுப்பு அடையும் நிலையில் உள்ள தொழு நோயாளிகளை தொட்டு அவர்களுக்கு அன்புடனும், ஆதரவுடனும் சிகிச்சை அளித்தவர் அன்னை திரேசா. இவரைப் போலவே, சேவை மனப்பான்மை கொண்ட ஒரு மருத்துவரே ரூத் பாவ். ஜர்மனியில் பிறந்த இவர் 1960ஆம் ஆண்டில் முதல் முதலாக பாகிஸ்தானுக்கு சென்றார். அங்கு சென்ற அவர் தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார். பாகிஸ்தானின் அன்னை திரேசா என்று அழைக்கப்படும் அழவுக்கு ரூத் பாவ் அருமையான சேவைகளை ஆற்றினார்.
87 வயதான ரூத் பாவ், கடந்த 11ஆம் திகதி மறைந்தார். அவரின் உடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவரின் உடல் அஞ்சலி செலுத்தப்பட்டது. ரூத்தின் இறுதிப் பயணத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து பங்கெடுத்தனர் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# பிஜி தீவில் நிலநடுக்கம்

வெலிங்டன், ஓக. 21
பசிபிக் கடலில் நியூசிலாந்துக்கு அருகே பிஜி தீவுகள் உள்ளது. அங்கு நேற்று கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலஅதிர்வு ரிச்டர் அளவுகோலில் 6.4 அலகுகளாகப் பதிவானது.
பூமிக்கு அடியில் சுமார் 550 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நில அதிர்வு ஏற்பட்டது என்று நியூசிலாந்து புவியியல் ஆய்வுமையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரம், உயிரிழப்பு, காயம் போன்ற எந்தவித தகவலும் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அப்போ, மைத்திரி யார்?

முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவின் ஆட்சிக்கு எதிராக 2015ஆம் ஆண்டுக்கு முன்னதாக உரத்துக் குரல் கொடுத்தவர்களில் ஒருவர் தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாசராஜபக்ச. ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் முக்கியமான ஒருவர் என்கூடச் சொல்லலாம். அதன்பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு அமைச்சராகவும் மாறியவர்.

அவருக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுக்கப்போகிறது என்கிற நிலமை ஏற்பட்டுள்ளது. அது குறித்து ஆராய்ந்து செயற்பட கட்சியின் சார்பில் குழுவும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து அமைச்சர் ஓர் உரையாற்றியிருக்கிறார். அனுராதபுரத்தில் பிக்குகளின் முன்பாக அவர் இந்த உரையை ஆற்றினார்.

அவரது பேச்சில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவையும் கடுமையாக விமர்சித்தார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் புகழ்ந்து பேசினார். அவருடன் இணைந்து மைத்திரி யுகத்தைக் கட்டியெழுப்ப வருமாறு அவர் இலங்கை மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

அவரது பேச்சின் இடையே கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுண்டு. அதாவது ஐக்கிய தேசியக் கட்சி அரசைச் சாடியும் மைத்திரியைப் புகழந்தும் பேசும்போது அவர் பின்வரும் முக்கியமான விடயங்களை ஐ.தே.க. அரசுக்கு எதிராகச் சொல்கிறார்.

சிங்கள இனத்துக்கு எதிராக நடக்கும் அநியாயத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தால் இனவாதம் என்று பெயர் சூட்டப்படுகிறது.

பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்ட படையினரை உலக நீதிமன்றில் நிறுத்த எடுக்கப்படும் நடவடிக்கையை எதிர்த்தால் துரோகி என்கிறார்கள்.

மேற்குலக நாடுகளின் சப்பாத்துக்களைத் துடைத்துவிடும் எங்கள் அரசியல்வாதிகளைக் குறைசொன்னால் துரோகியாக்கப்படுவார்.

எதிர்கால சிங்கள இனத்தைக் காப்பாற்றுவதற்காகக் கதைக்க முற்பட்டால் என்னைத் துரோகியாக்குகிறார்கள்.

என்றெல்லாம் சொல்லியிருக்கிறார் அமைச்சர் விஜயதாசராஜபக்ச. அவரது கருத்துக்களில் இனவாதம் தெறிக்கின்றது என்பது ஒருபக்கம் இருக்கட்டும். அவர் சொன்னதெல்லாம் தான் செய்தவகளையும் அவற்றுக்காகத் தன் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களையும்தான். அதாவது தான் ஓர் சிங்கள இனத்தின் அபிமானி எனவும் அதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியினர் தன்னை ஓரங்கட்டி தண்டிக்கப் பார்க்கிறார்கள் என்றும்தான் அவர் கூற விளைகிறார்.

அதேநேரத்தில் அவர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் ஆதரிக்கிறார், அவரது யுகத்தைக்கட்டியெழுப்ப வருமாறு அவர் அறைகூவலும் விடுக்கிறார்.

அப்படியென்றால், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நீதி அமைச்சரின் செயல்கள் எல்லாவற்றையும் ஆதரிப்பார், ஏற்றுக்கொள்வார், அவரும் அதே கொள்கைகளையே கொண்டிருப்பார் என்றுதானே அர்த்தமாகிறது.

இங்கேதான் வேடிக்கை இருக்கிறது. சிங்கள இனவாதியாகத் தன்னை அடையாளம் காட்டத் தூண்டும் வகையில் பேசும் ஒருவர் தனது தலைவர் மைத்திரி என்கிறார். அப்படியானால் மைத்திரியும் ஓர் சிங்கள இனவாதி என்பதாகத்தானே அர்த்தம்.

ஆனால், சிங்கள பௌத்த இனவாதத்தின் பக்கம் சாராத நல்லாட்சி அரசு ஒன்றை அமைப்பார் எனவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மீட்சியையும் தீர்வையும் தருவார் எனவும் நம்பியே தமிழ் மக்களும் மைத்திரியை ஆதரித்தார்கள். விஜயதாச ராஜபக்ச சொல்பவற்றுக்கு எல்லாம் நேர் எதிரான கருத்துக்களுக்காகவே மைத்திரியை ஆதரித்தார்கள்.

அப்படியென்றால் உண்மையிலேயே மைத்திரி யார்? அவர் சிங்கள இனவாதத்தின் காவலரா? எதிர்ப்பாளரா? விஜயதாசவின் உரை பெரும் களேபரத்தையே ஏற்படுத்தவல்லது.

# மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் சிக்கித் திணறும் கூட்டு அரசு

(நேற்றைய தொடர்ச்சி)

கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸின் அந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அந்த நிதி நிறுவனங்கள் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் காரணமாக பன்னாட்டு முதலீட்டார்கள் மத்தியில் ஒரு பதற்றம் ஏற்பட்டது. இதனால், மத்திய வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த சுமார் 200 கோடி ரூபா முதலீட்டை அவர்கள் மீளப் பெற்றுக்கொண்டனர்.
இவற்றுக்கெல்லாம் மேலாக இந்த மோசடியால் மத்திய வங்கிக்கு ஏலம் இடம்பெற்ற தினத்தன்று 160 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இது 30 வருடங்களில் மீளச் செலுத்தும் பிணைமுறியாக இருப்பதால் 30 வருடங்களுக்குமான நட்டம் 14ஆயிரத்து 500 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் பேபேர்ச்சுவல் நிறுவனம் மார்ச்சில் முடிவடைந்த நிதியாண்டில் 512கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது.
இது தொடர்பில் விசாரணை செய்வதற்காக தலைமை அமைச்சர், மூவர் கொண்ட குழுவை நியமித்தார். அந்தக் குழு 2015 மே மாதம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.
அதன் தொடர்ச்சியாக இந்த வருடம் மே மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான நாடாளுமன்ற கோப் குழு இந்த மோசடி குறித்த விசாரணை நடத்தி பல உண்மைகளை வெளியே கொண்டுவந்துள்ளது.

**மோசடிக்காக ஆளுநர் கையாண்ட தந்திரம்**

பிணைமுறி வழங்கல் தொடர்பாக எந்தவொரு தீர்மானம் எடுப்பதாக இருந்தாலும், அதற்கான அதிகாரம் நிதிச் சபையிடமே உண்டு.
ஆளுநரோ அந்த அதிகாரத்தைத் தன்னிச்சையாகக் கையில் எடுத்துச் செயற்பட்டிருந்தார். பிணைமுறியை வழங்கும் விடயத்தில் இரண்டு முறைமைகளை மத்திய வங்கி கையாண்டு வருகின்றது. ஒன்று ஏலம் [Auction ], மற்றையது நேரடியாகப் பெற்றுக்கொள்ளுதல் [Direct Placement].
இவற்றுள் ஏலத்தின் ஊடாக 260 கோடி ரூபாவையும், மீதித் தொகையை நேரடியாகவும் பெற்றுக்கொள்ளுதல் என்று ஆரம்பத்தில் முடிவு எடுக்கப்பட்டது. நேரடியாகப் பேசுதல் என்பது அந்த 16 நிறுவனங்களுடனும் மத்திய வங்கி பேரம் பேசுதல் ஆகும். அந்தப்பேரம் பேசலில் எந்த நிறுவனத்தின் விண்ணப்பம் மத்திய வங்கிக்கு இலாபம் தரக்கூடியதாக இருக்கின்றதோ, அந்த நிறுவனத்திடம் இருந்து வங்கி கடனைப் பெற்றுக்கொள்ளும்.
இந்த முறைமையின் ஊடாக தனது மருமகனின் நிறுவனம் இலாபத்தைப் பெறாது என்பதை அறிந்த அர்ஜுன மகேந்திரன் நூறு வீதம் ஏல முறைமைக்குச் சென்று அதன் ஊடாகவே அதாவது, சட்டரீதியாகவே ஊழலைப்புரிவதற்கு முடிவெடுத்தார்.
அதற்கு ஏற்பவே ஏல முடிவு நேரத்தை ஐந்து நிமிடங்களால் அதிகரித்து நூறு கோடி ரூபாவுக்கான பிணைமுறியை ஆயிரம் கோடியாக உயர்த்தி அதில் 90 வீதமான பிணைமுறியை பேபேர்ச்சுவல் நிறுவனமே பெற்றுக்கொள்

**600 கோடி ரூபா தவிர்ப்பு**

அதுமாத்திரமன்றி, மத்திய வங்கிக்கு கடன் கொடுக்கும் அந்த 16 நிறுவனங்களுள் ஊழியர் சேமலாப நிதியமும் ஒன்று. அந்த நிதியத்திடம் 600 கோடி ரூபா நிதி உண்டு. ஆனால், தந்திரமான விதத்தில் அந்த நிறுவனம் இந்

> இந்த மோசடியால் மத்திய வங்கிக்கு ஏலம் இடம்பெற்ற தினத்தன்று 160 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இது 30 வருடங்களில் மீளச்செலுத்தும் பிணைமுறியாக இருப்பதால் 30 வருடங்களுக்குமான நட்டம் 14 ஆயிரத்து500 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




வதற்கான ஏற்பாட்டைச் செய்தார் மகேந்திரன்.
இவ்வாறு அதிக பங்குகளுக்கான கேள்வி இந்த நிறுவனத்திடம் இருந்து வந்ததால் வட்டி வீதமும் அதிகரித்தது. ஆரம்பத்தில் நூறு கோடி ரூபாவுக்கான பிணைமுறி விநியோகிக்கப்பட்டபோது அதில் நூறு ரூபா கொண்ட ஒவ்வொரு பிணைமுறியும் 104 ரூபாவுக்கு விற்கப்பட்டதால் மத்திய வங்கி இலாபத்தை ஈட்டியது.
ஆனால், இறுதி நேரத்தில் பெரும் தொகையான முறிகளை பேபேர்ச்சுவல் நிறுவனம் கொள்வனவு செய்ய நேர்ந்ததால், 10 ரூபா நட்டத்தில் 90 ரூபாவுக்கே விற்கும் நிலை மத்திய வங்கிக்கு ஏற்பட்டது.

தக் கொடுக்கல் வாங்கலுக்குள் உள்வாங்கப்படவில்லை. அப்படி ஊழியர் சேமலாப நிதியம் உள்வாங்கப்பட்டிருந்தால், மத்திய வங்கிக்கு இலாபம் ஏற்படும் வகையில் அந்த 600 கோடி ரூபாவும், மத்திய வங்கிக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடனாகக் கிடைத்திருக்கும். மீதி 400 கோடி ரூபாவை ஏலத்தில் எடுத்திருந்தால் ஆரம்பத்தில் 100 கோடிக்கான ஒவ்வொரு நூறு ரூபா பிணைமுறியும் 4 ரூபா இலாபத்தில் விநியோகிக்கப்பட்டது போல் இந்த 400 கோடி ரூபாவுக்குமான பிணைமுறிகளும் விநியோகிக்கப்பட்டிருக்கும். இது விடயத்தில் அர்ஜுன மகேந்திரன் தந்திரமாகச்

செயற்பட்டமைதெளிவாகிறது. இதன்விளைவாகபேபேர்ச்சுவல் நிறுவனம் 512 கோடி ரூபாவை அநியாய இலாபமாகஈட்டியுள்ளது.

**ஆளுனரை காப்பாற்றுவதற்கு முயற்சிகிறார் தலைமை அமைச்சர்**

ஆட்சிமாற்றத்தைத்தொடர்ந்து அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராக தலைமை அமைச்சரால் நியமிக்கப்பட்டார். தான்தோன்றித்தனமாக தலைமை அமைச்சர் மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.



அவ்வாறு நியமிக்கப்பட்டகையோடு அவர் பிணைமுறி வழங்கலின் ஊடாக ஊழல், மோசடியில் இறங்கினார். இந்த விவகாரம் பெரிதாக வெடித்த பிறகும்கூட ரணில் அவரைப் பதவி விலக்க விரும்பவில்லை. மொத்தத்தில், ஐக்கிய தேசிய கட்சி மகேந்திரனைப் பாதுகாப்பதற்கே முயற்சிகளை மேற்கொண்டது.

கோப் குழுக் கூட்டத்தில் பிணைமுறி ஊழல்குறித்துவிவாதிக்கப்பட்டவேளை அதில் கலந்துகொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் அர்ஜுன மகேந்திரன் தொலைபேசியில் உரையாடிய சம்பவமும் இடம்பெற்றது. அங்கு என்ன நடக்கின்றது என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாக மகேந்திரன் தகவல்களை பெற்று வந்தார்.

ஒருவாறு அறிக்கை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு இன்று அது நாட்டு மக்களின் பேசு பொருளாக மாறிவிட்டது. தினமும் தொடர்ச்சியாக இந்த விடயம் ஊடகங்களில் விவாதத்துக்கு விடப்படுகின்றது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; மத்திய வங்கி இழந்தநிதியை மீளப்பெறநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கோசங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினர் கோப் குழுவின் அறிக்கையை ஒருபுறம் ஆதரித்துக்கொண்டு மறுபுறம் அதில் பிழை காணுகின்றனர். 2008 இல் இருந்து மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஐ.தே.கட்சியினர் கூறுகின்றனர்.

இடம்பெற்ற சகல ஊழல்களும் விசாரிக்கப்பட வேண்டும்; சகல குற்றவாளிகளும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால், இப்போதைய தங்களது ஆட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தி இருக்கும் இந்த மோசடிக்கு எதிராகத் தண்டனை வழங்குவதன்மூலம் தான் அடுத்தவர் செய்த குற்றத்துக்குத் தண்டனை வழங்கும் அருகதையை ஐக்கிய தேசிய கட்சி பெறும் என்பதை அந்தக்கட்சி உணர வேண்டும்.

மகிந்த அவரது ஆட்சிக் காலத்தில் எவ்வாறு அவரது ஊழல்வாதிகளைப் பாதுகாத்தாரோ அதுபோன்றதொரு பாணியையே இன்று ஐக்கிய தேசிய கட்சியும் கையாள்கிறது. இது அந்தக் கட்சியின் அரசியல் இருப்புக்கே ஆபத்தாக அமையும்.

**மகிந்த ஆட்சியில் மத்திய வங்கி ஊழல்**

மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல்களை எடுத்துப் பார்த்தோமென்றால் பல்லாயிரக் கணக்கான ரூபாக்களை இந்தநாடு அநியாயமாக இழந்துள்ளதையும் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே மூடி மறைக்கப்பட்டுள்ளதையும் தெரிந்துகொள்ளலாம்.

**மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல்களை எடுத்துப் பார்த்தோமென்றால் பல்லாயிரக் கணக்கான ரூபாக்களை இந்த நாடு அநியாயமாக இழந்துள்ளதையும் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே மூடி மறைக்கப்பட்டுள்ளதையும் தெரிந்துகொள்ள லாம். பிணைமுறி வழங்கலின்போது மத்திய வங்கிக்கு 2012 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 420 கோடி ரூபாவும், 2013 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 230 கோடி ரூபாவும், 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 960 கோடி ரூபாவும், நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த மூன்று வருடங்களில் மாத்திரம் 7 ஆயிரத்து 610 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.**

பிணைமுறி வழங்கலின்போது மத்திய வங்கிக்கு 2012 ஆம் ஆண்டு 2ஆயிரத்து 420 கோடி ரூபாவும், 2013ஆம்ஆண்டு3ஆயிரத்து230 கோடி ரூபாவும், 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 960 கோடி ரூபாவும், நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த மூன்று வருடங்களில் மாத்திரம் 7ஆயிரத்து 610 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ள 160 கோடி ரூபா நட்டத்துக்கும் மகிந்த ஆட்சியில் ஏற்பட்ட 7ஆயிரத்து 610 கோடி ரூபா நட்டத்துக்கும் இடையில் உள்ள பெரிய வேறுபாட்டை எம்மால் அவதானிக்க முடியும். மேலும், 2014 ஆம் ஆண்டு கிரேக்க நாட்டின் பிணைமுறிகளை மத்திய வங்கி கொள்வனவு செய்து 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் நட்டத்தை எதிர்கொண்டது.

**மகிந்தவை ஆட்சியில் அமர்த்துவதற்கு விரும்பும் சிங்கள ஊடகங்கள்**

மகிந்தவின் 10 வருட ஆட்சியில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகளை இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோப் குழுவின் அறிக்கையில் 19 நிறுவனங்களில் 33 ஆயிரம் கோடி ரூபா ஊழல் செய்யப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அந்த 19 நிறு வனங்களுள் ஒன்றுதான் மத்திய வங்கி. ஆனால், இந்த மிகப் பெரிய தொகை மோசடி செய்யப்பட்டதை மூடி மறைத்துவிட்டு மத்திய வங்கிக்கு ஏற்பட்டுள்ள 160 கோடி ரூபா இழப்பை மாத்திரம் மகிந்த அணியும் சிங்கள ஊடகங்களும் தூக்கிப் பிடிப்பது ஏன்?

மத்திய வங்கி மோசடி தவிர ஏனைய 18 நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் மகிந்த ஆட்சியில் இடம்பெற்றவை என்பதுதான் அதற்குக் காரணம். அந்த மோசடிகள் வெளிவராமல் தடுப்பதற்காகவே மகிந்த அணியும் சிங்கள ஊடகங்களும் இவ்வாறு கூட்டு ஆட்சி அரசின் நிர்வாகத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி மோசடி விவகாரத்தைத் தூக்கிப் பிடிக்கின்றன என்பது இதன்மூலம் மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

அதுபோக, 2007 ஆம் ஆண்டில் அப்போதைய கோப் குழுவின் தலைவர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ நாடாளுமன்றில் சமர்ப்பித்த கோப் குழு அறிக்கையில் 27 நிறுவனங்களில் 16 ஆயிரம் கோடி ரூபா மோசடி புரியப்பட்டுள் ளமை சுட்டிக் காட்டப்பட்டது. இப்போது மத்திய வங்கி மோசடி பரபரப்பாகப் பேசப்படுவதுபோல் விஜயதாஸவின் அந்த அறிக்கை பேசப்படவில்லை. மகிந்தவால் மூடி மறைக்கப்பட்டது. ஊழல்கள் எந்த ஆட்சியில் இடம்பெற்றாலும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த நாட்டு மக்களின் நிலைப்பாடாகும்.

மகிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற பெரிய ஊழல்களை கணக்கில் எடுக்காது சிறிய சிறிய விடயங்களுக்காக மாத்திரம் கைது செய்யப்படுவதையும் மகிந்தவின் ஆட்சியில்போல் இந்த ஆட்சியிலும் மத்திய வங்கி ஊழலை மூடிமறைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதையும் ஒருபோதும் ஏற்க முடியாது. இதற்கு மக்கள்தான் நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும்.

ரவி கருணாநாயக்கவின் பதவி விலகலுடன் மத்திய வங்கி ஊழல் மூடி மறைக்கப்பட்டுவிடுமா? அல்லது இதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்படுமா மத்திய வங்கி இழந்த பணத்தை மீளப்பெறுமா? என்பது குறித்து பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




## வீதிக்குக் குறுக்கே பள்ளங்களால் விழுந்தெழும்பும் பொதுமக்கள்

சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயத்துக்கு வடக்குப் புறமாக அமைந்துள்ள சட்டத்தரணி செல்லத்துரை வீதிக்குக் குறுக்காகத் தோண்டப்பட்டுள்ள பெரிய பள்ளம் அந்த வீதியால் பயணிப்போருக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றது.


வலிகாமம் தெற்குப் பிரதேசசபைக்குச் சொந்தமான இந்த வீதி காங்கேசன்துறை பிரதானவீதியிலிருந்து ஆரம்பிக்கின்றது. இந்த வீதியூடாகத் தினமும் ஏராளமானவர்கள் பயணிக்கின்றனர். பல வாகனங்களும் சென்று வருகின்றன. தனியார் நிறுவனத்தின் அலுவலகமொன்று இந்த வீதியிலேயே அமைந்துள்ளதால் அதற்குச் சொந்தமான பெரிய வாகனங்களும் பயணத்துக்கு இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றன.

கடந்த ஆண்டு மழை வெள்ளம் ஏற்பட்ட போது சிலர் இந்த வீதிக்குக் குறுக்காகப் பெரியதொரு பள்ளத்தை வெட்டினார்கள். இதனூடாக வெள்ள நீர் பாய்ந்து அருகிலுள்ள பாடசாலை வளவின் ஊடாக வெள்ள வாய்க்காலைச் சென்றடைந்தது. அதன் காரணமாக இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொண்டனர். பின்னர் அந்தப் பள்ளம் ஒருவாறு மூடப்பட்டது. ஆனால் வீதிக்குக் குறுக்கே வெட்டப்பட்ட அந்தப் பள்ளம் ஓரளவு தூர்ந்து போனாலும் கூட தற்போதும் மக்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக இரவு வேளைகளில் சிலர் இந்தப் பள்ளத்தில் விழுந்து எழும்புவதையும் காணமுடிகின்றது. இதைவிடப் பகல் வேளைகளில் குழந்தைகளைப் பாடசாலைக்குச் சைக்கிளில் ஏற்றிச் செல்பவர்கள் பள்ளத்தில் சைக்கிள் வீழ்ந்து எழுவதால் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

வலிகாமம் பிரதேச சபையினர் தயவு கூர்ந்து இந்தப் பள்ளத்தைச் சீர் செய்து வழங்குமாறு வீதியைப் பயன்படுத்துபவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

க.ரஞ்சனி, வரியப்புலம்

# உற்பத்தி விலைச் சுட்டெண்களின் மாதாந்த அசைவு மாதிரி





நடப்பாண்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உற்பத்தி விலைச் சுட்டெண் 128.0 ஆகக் காணப்படுகிறது. மூன்று முதன்மைப் பொருளாதார நடவடிக்கைக் குறிகாட்டிகளான 'விவசாயம்', 'உற்பத்தி', 'மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்' என்பனவற்றின் விலைச் சுட்டெண்கள் முறையே 170.0, 110.2 மற்றும் 86.7 ஆகப் பதிவாகியுள்ளன. அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான குறியீட்டின் வளர்ச்சி விகிதத்தை நோக்குகையில் நடப்பாண்டின் ஜூன் மாத காலப்பகுதியில் 19.6 சதவீதமாக அமைந்திருக்கும் அதேவேளை "விவசாயம்", "உற்பத்தி" மற்றும் "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் முறையே 39.1, 7.0, 2.7 விகித வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளன.

அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மே மாதத்தில் இருந்து ஜூன் மாத காலப்பகுதிக்கான உற்பத்தி விலைச் சுட்டெண்கள் 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை "விவசாயம்", "உற்பத்தி", "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் நேர்மறை வளர்ச்சி விகிதங்களைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 3.5 சதவீதம், 0.6 சதவீதம் மற்றும் 0.2 சதவிகிதமாக அமைந்துள்ளன. (ஓ)

# 'என்.எஸ்.பி. ஐசேவர்' சேவை அறிமுகம்

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைத்தார்



இலங்கை மக்களின் சேமிப்புப் பழக்கத்தை மேலும் வளர்க்கும் நோக்கில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இணைந்த சேவையாக 'என்.எஸ்.பி. ஐ சேவர்' சேவையை தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பித்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியும் சிறிலங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனமும் இணைந்து வடிவமைப்புச் செய்துள்ள மேற்படி 'என்.எஸ்.பி ஐ சேவர்' சேவையை அறிமுகப்படுத்தும் நிகழ்வுகள் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த 16 ஆம் திகதி கொழும்பு தேசிய சேமிப்பு வங்கியின் தலைமை அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சேவை குறித்துக் கருத்துரைத்துள்ள வங்கி,

"'என்.எஸ்.பி ஐ சேவர்' சேவையானது டிஜிட்டல் மயப்படுத்தலில் புதியதோர் அனுபவமாக அமைந்துள்ளது. நாடு முழுமையுமாகவுள்ள 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொபிடெல் முகவர் நிலையங்களின் ஊடாக இந்தச் சேவையை பெறமுடியும். இந்தச் சேவையூடு வாடிக்கையாளர்கள் எந்த நேரத்திலும் இலகுவாகப் பணத்தை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் வைப்புச்செய்ய முடியும்." - என்றுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான கபீர் ஹாசிம், ஹரீன் பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் தாராநாத் பஸ்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஸ்வின் டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ஓ)

# சேவை மற்றும் உற்பத்தி வரிகளை குறைக்க முடிவு

## நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



பொருள்கள் மற்றும் சேவைகளின் வரியைக் குறைக்க தீர்மானித்துள்ள தகவலை நிதி அமைச்சர் மங்கள சமரவீர வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இந்தத் தகவல்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"இணைய சேவை சார்ந்து அறவிடப்பட்ட 10 வீத தொலைத்தொடர்பு வரியை முற்றாக நீக்கவுள்ளோம். இது தொடர்பிலான நடைமுறை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. சிறிய ரக லொறி மற்றும் வாகனங்களுக்கு அறவிடப்பட்டு வந்த 10 இலட்சம் ரூபா தொகை மதிப்பீடுடைய உற்பத்தி வரியை 3 இலட்சம் ரூபாவால் குறைக்கவுள் ளோம். அதேபோன்று 150 சிசி இயந்திர வலுவுடைய மோட்டர் வாகனங்களுக்கான உற்பத்திவரி 90 வீதமாகக் குறைக்கப்படவுள்ளது" - என்றார். (ஓ)

# லொத்தர் சபைகள் மீண்டும் நிதி அமைச்சின் கீழ் இணைவு

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பன மீண்டும் நிதி அமைச்சின் கீழாக இணைவு பெறவுள்ளது என்ற தகவலை அரசு தெரியப்படுத்தியுள்ளது.

இது குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த இரு சபைகளும் நிதி அமைச்சின் கீழான இணைப்பிலிருந்து விடுவிப்புச் செய்யப்பட்டு அயலுறவுத் துறை அமைச்சின் கீழாக இணைப்புச் செய்யப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது. (ஓ)

# கணக்காய்வு ஆணைக்குழுவை இயங்க வைக்க முடியாத நிலை

## கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க கருத்து

"தேசிய கணக்காய்வுச் சட்டம் நிறைவேற்றப்படாமையால் கணக்காய்வு ஆணைக்குழுவை இயங்கச்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துகளை வெளிப்படுத்தும் போதே இந்தவிடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஒதுக்கீடுகள் நடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்குரித்தான வகையிலே தேசிய



கணக்காய்வுச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் இதுவரை காலமும் அதனை நாடாளுமன்றில் முன்வைக்க முடியாது போயுள்ளது. இந்தச் சட்டமூலத்துக்கு எதிரான கருத்துகளும் தற்போது தோன்றியுள்ளது" என்றார். (ஓ)

# மாணவர்களின் இணைப்பாடவிதான அபிவிருத்தி

## கல்வியோடு திறமை சார்ந்த ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுதல்

அன்ரனி பீற்றர்




மனித வாழ்வியலின் பரிணாம வளர்ச்சிப் படிநிலைகளில் ஒவ்வொரு குழந்தையும் சிறப்புறக் கட்டமைக்கப்படுகின்றனர்.
சிறுவன், மாணவன், இளைஞன் என்ற பருவநிலைகளைக் கடந்து பெரியவர்களாக மாறுகின்றனர். பெரியவர்களாக மாறுகின்ற வரையான காலப்பகுதி என்பது நீண்ட காலச் செயல்நிலை அனுபவங்களை கொண்டிருக்கும். இதனை எம்மிடையேயான பழமொழிக் கருத்தாற்றுகைகளில் இருந்து அறிந்துகொள்ள முடியும். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதும், நட்டுவப் பிள்ளைக்கு நொட்டியா காட்ட வேணும் என்பதும், புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பதும், கண் கண்டதை கைசெய்யும் என்பதும் இவ்விதமான கருத்தாற்றுகைப் படிமங்களே.

**பெற்றோர்கள் ஆசிரியர்களின் பங்கும் கடமைப் பாங்கும்**

குழந்தைகள் மண்விளையாடுவதைக் கண்டிருக்கிறோம் அல்லது போலச் செய்வதைப் பார்த்திருக்கிறோம் அல்லது வயதுக்கு முதிர்ந்த செயற்பாடுகளைச் செய்வதையும் நாம் தெரிந்துகொண்டுள்ளோம். ஆனாலும் அந்தச் செயற்பாடுகளைப் பார்த்து அனுமதிக்காது தடுத்திருக்கிறோம். உண்மையில் அந்தக் குழந்தை விளையாட்டில் ஈடுபடுத்துவதன் ஊடாகத் தன்னை வெளிப்படுத்துகிறது. அவையே குழந்தையின் திறன் வெளிப்பாடாகவும், திறன் அபிவிருத்தியாகவும் அமைந்துள்ளன. பெற்றோர் பிள்ளைகளின் வளர்ச்சியில் பங்காற்ற வேண்டும். அவர்களுக்கு விருப்பமானவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அறியாமையிலிருந்து விடுவித்து அவர்களின் திறனை மேம்படுத்திக் கொள்ள உறுதுணையாக இருக்க வேண்டும். உண்மையில் பாடசாலையில் மாணவர்கள் வெளிப்படுத்தும் திறனை ஆசிரியர்கள் உரிய முறையில் இனம் கண்டு கொள்ள வேண்டும்.
அதன்வழியே ஊக்குவிக்கின்றபோது அவர்கள் திறமையான வீரர்களாக, வீராங்கனைகளாக, விஞ்ஞானிகளாக, தொழில்நுட்பவியலாளர்களாகச் சமூக மேம்பாட்டாளர்களாக, சமூகப்பற்றாளர்களாக, பொருளாதார நிபுணர்களாக, வைத்தியர்களாக, ஆராய்சியாளர்களாக மாற்றம் கொள்வர். பல்துறை சார்ந்து அறிவின் பெருக்கத்தைப் பெற்றுக்கொள்வர்.
பிள்ளைகள் சிறுவயதிலே செய்துகொள்கின்ற அத்தனை செயல்வெளிப் பாவனைகளையும் பொறுமையோடு ஏற்றிருக்க வேண்டும். அவர்கள் என்ன விடயங்களை வெளிக்கொணர விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களின் சிந்தனைக் களங்களை மெருகூட்ட வேண்டும். அப்போது அந்தப் பிள்ளையின் எதிர்காலக் கனவுகள் சிறந்த பதிவாக்கப்படும். அவர்களின் மேலதிக திறமைகள் தன்னியல்போடு ஊக்கம்பெறும்.

**பாடசாலைச் சூழலின் அமைவு**

பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் பருவத்தின் ஆரம்பத்தில் பிள்ளைகள் வீட்டிலே தாங்கள் கொண்டிருந்த சூழலின் தொடர்ச்சியான செயற்பாட்டையே அங்கும் எதிர்பார்ப்பார்கள். அதற்கான முயற்சிகளை வகுப்பறைக் கற்றலின் போது, விளையாட்டின்போது, ஏனைய செயற்பாடுகளின் போதும் வெளிப்படுத்த முனைவார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலே மாணவர்களின் திறமையை அல்லது மேலதிக திறமையை இனங்கண்டு கொண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டும். ஊக்குவிக்கின்ற போது அவர்களின் கற்றல்ச்செயற்பாடுவினைத்திறனுள்ளதாகவும், விளைதிறன் உள்ளதாகவும் இருப்பதை அவதானிக்கலாம். எவ்வகைத் திறன் மாணவர்களிடம் வெளிப்படுகின்றதோ அந்தத் திறன் சார்ந்தே அந்த மாணவனின் எதிர்காலம் அமையும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.
சில மாணவர்கள் கல்வியில் அதிக நாட்டம் இன்றி இருப்பர். ஆனாலும் வினைத்திறனான செயற்பாடுகளை வெளிக்காட்டுவர். அதனை இனங்கண்டு அந்தச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்ற போது அந்தச் செயற்பாட்டையே எதிர்கால வாழ்வுக்கான அடித்தளமாக இட்டுக்கொள்வர். அதற்கான முன் அனுபவங்களை பாடசாலையிலே பெற்றுக்கொள்வர். சில மாணவர்கள் கல்விச் செயற்பாட்டிலும், வினைத்திறனான செயற்பாடுகளிலும் திறமையானவர்களாக இருப்பர். இவர்களே பிற்காலங்களில் சமூகத்தில் பிரசித்தமான தொழிற்றுறைகளில் தம்மை உயர்வாக்கிக் கொள்பவர்களாக விளங்குவர். எனவே வீடு, பாடசாலை, உயர்கல்விக் கூடங்கள் என்பன பிள்ளைகள், மாணவர்களின் நிலையறிந்து ஊக்குவிக்கின்றபோது உயர்வான சமூகமாற்றமும் முன்னேற்றமும் நிச்சயமாக ஏற்படும்.



**பயிற்சியும் ஊக்குவிப்பும்**

எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலங்களில் தொழிற்றுறைகள் சார்ந்த ஊக்குவிப்புக்கள் குறைவாக இருந்த போதும் தற்போது அதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. பாடசாலைக் கல்வியிலே நாட்டம் குறைவான மாணவர்கள் சிலர் க.பொ.த சாதாரணதரத்துடன் அல்லது அதற்கு முன்னர் இடைவிலகி விடுகின்றனர். அனேகமான மாணவர்கள் தாம் சிறுவயதிலே திறமையை வெளிப்படுத்திய துறைகளில் இணைந்து கொண்டு தமது வெளிக்களப் பயிற்சிகளைத் தொடர்கின்றனர்.
சிறு தொழில்நுட்பத்துறைகளிலே குறிப்பாக, இலத்திரனியல், மின்னியல் சாதனங்களைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் தொழிலை மிகநேர்த்தியாக செய்தல் என்ற விதமாக தமது வருவாயைப் பெற்று அல்லது மேலதிக வருவாய்க்கான தொழிற்றுறைகளையும் பெற்று தமது குடும்பங்களை வளப்படுத்துகின்றனர். எனவே ஒவ்வொருவரும் தமது கல்விசார் தொழில்களுடன் மேலதிக திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலதிக வருவாயைப் பெறுகின்றபோது மேலதிக திறமைக்கான தொழிற்றுறையே எம்மை இறுதிவரை வாழவைக்கின்ற தொழிலாக இருக்கும்.
ஆக, எதிர்காலச் சந்ததிகள் தம்மை வளமுள்ளவர்களாக ஆக்கிக் கொள்வதற்கு பெற்றோர் தமது குழந்தைகளை சிறுபராயத்தில் இருந்து நன்முறையில் வளம்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைப் பருவத்தின் சிந்தனை பூர்வமான பாவனைகளைச் சரியாக இனங்கண்டுகொள்ள வேண்டும். அவற்றை மெருகூட்ட வேண்டும். அறிவூட்டத்தின் வழியே பாவனைகளை எதிர்காலத்தின் ஆக்க ரீதியான பாதையிடலாக வடிவமைக்க வழியேற்படுத்திக்கொடுக்க வேண்டும். நடத்தை சார் பருவச் செயற்பாடுகளை, மாணவர் பருவ வெளிப்பாடுகளை, ஈடுபாடும் திறனை இனங்கண்டு உற்சாகப்படுத்த வேண்டும். தடையின்றிய வழிப்படுத்தல் பணியை செய்ய வேண்டும். இதனை பெற்றோரும், ஈஆசிரியர்களும் கடமை உணர்வோடு முன்னெடுக்கின்றபோது திறமையாளர்கள், சாதனையாளர்கள் உருவாகுவதுடன் தொழிற்றுறை விருத்தியும், சமூக பொருளாதார மேன்மையும் ஏற்படும். முன்னேற்றம் குறிக்கோளின் வழி சமூகமாற்றம் ஏற்படும். நற் சமுதாயம் மலர்வு பெறும். தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.

“பிள்ளைகள் சிறுவயதிலே செய்துகொள்கின்ற அத்தனை செயல்வெளிப் பாவனைகளையும் பொறுமையோடு ஏற்றிருக்க வேண்டும். அவர்கள் என்ன விடயங்களை வெளிக்கொணர விரும்புகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களின் சிந்தனைக் களங்களை மெருகூட்ட வேண்டும். அப்போது அந்தப் பிள்ளையின் எதிர்காலக் கனவுகள் சிறந்த பதிவாக்கப்படும் அவர்களின் மேலதிக திறமைகள் தன்னியல்போடு ஊக்கம்பெறும்.”

உங்களது பிறந்த திகதியை வைத்து வாழ்க்கைத் துணையை கண்டறிவது

# எப்படி?

சாதகம் பார்த்து திருமணம் செய்வது என்பது நாம் அனைவரும் அறிந்தது தான். ஒரு குழந்தை பிறக்கும் போதே பிறந்த நேரத்தை வைத்து அதன் சாதகத்தைக் கணிதுவிடுவர். ஒரு சிலர் பிறந்த நேரத்தைக் குறிக்கத் தவறுதல் அல்லது சாதகம் தொலைந்து போவதால் அவர்களது பிறந்த நாளின் பொதுப் பலனை வைத்துப் பெண் பார்பார்கள்.

இந்த பிறந்த நாள் வைத்துப் பொருத்தம் பார்த்து திருமணம் செய்யும் வழக்கம் பொதுவாக இருந்து வருகிறது. சாதகத்துக்கு என்று தனிப் பொருத்தம் மற்றும் பலன்கள் பார்ப்பது போன்று, அவ்வாறே பிறந்த திகதியை வைத்துப் பார்ப்பதற்கும் பொதுப் பலன்கள் மற்றும் பொருத்தங்கள் இருக்கின்றன.

எந்தத் திகதியில் பிறந்தவர் எந்தத் திகதியில் பிறந்த பெண்ணைத் திருமணம் செய்தால் அவரது வாழ்க்கை சந்தோசமாக இருக்கும் அல்லது இருக்காது என்ற பலன்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி இனிக் காண்போம்.

### 4,13,22,31ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்

4,13,22,31ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் 1, 8 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களைத் திருமணம் செய்து கொண்டால் திருமண வாழ்க்கை நல்ல படியாக அமையும். மற்றும் 5, 6 எண்களில் பிறந்த பெண்களும், இவர்களுக்கு நன்மையே செய்வார்கள். மேலும் 4ஆம் திகதியில் பிறந்த ஆண்கள், 6ஆம் திகதியில் பிறந்த பெண்ணைத் திருமணம் செய்துக் கொண்டால் அவர்களது பொருளாதார வசதிகள் முன்னேற்றமடையும். இவர்கள் தங்களுடைய திருமணத்தை 1, 6 எண்ணாக வரும் திகதிளில் வைத்துக் கொண்டால் திருமண வாழ்க்கை இன்பமயமாக அமையும்.

### 5,14,23 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்

5,14,23 ஆம் திகதிகளில் பிறந்தவர்கக்கு காதல் மீது அதிக மோகம் இருக்கும். தைரியமாக காதலில் ஈடுபடுவார்கள். அதுவும் 5, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களால் காதலால் மிகவும் ஈர்க்கப்படு வார்கள். இவர்கள் 1, 3, 6 பிறந்தவர்களையும் மணக்கலாம். 9, 18, 27, 1, 10, 19, 28 ஆகிய திகதிகளும், கூட்டு எண் 1, 9 வரும் திகதிகளும் திருமணத்திற்கு உகந்தவை. எனவே 2, 6 ஆகிய எண்களில் பிறந்த வர்களை திருமணம் செய்துக் கொண் டால் குழந்தைப் பாக்கியம் அதிகமாம்.

### 6,15,24ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்

6,15,24 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் 6, 9 எண்களில் பிறந்த பெண்களைத் திருமணம் செய்துக் கொள்வதால் நல்ல வாழ்க்கை அமையும். 1, 3, 4, 5 ஆகிய எண்களில் பிறந்தவர்களைத் தவிர்த்துவிடுவது நல்லதாம். மற்றும் திருமண நாளை 1, 10, 19, 28, 6, 15, 24, 18, 27 ஆகிய திகதிகள் அல்லது 1, 6, 9 போன்ற கூட்டு எண் வரும் நாள்களில் செய்துக் கொண்டால் நல்ல நன்மை பெறலாம்.

(தொடரும்)

## வரலாற்றில் இன்றைய தினம் 21.08.2017

1821 - எலிசா பிரான்சிஸ் தலைமையிலான கப்பல் மாலுமிகளால் ஜாவிஸ் தீவு கண்டுபிடிக்கப் பட்டது.

1946 - லொஸ் அலமொஸ் தேசிய ஆய்வு கூடத்தில் பரி சோதனை ஒன்றில் ஈடுபட்டிருந்த பௌதிகவிய லாளர் ஹாரி டவுலியன் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

1957 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் சு-7 செமயர்கா எனும் பெயரிலான ஏவுகணையை சோவியத் யூனியன் வெற்றி கரமாக ஏவியது.

2013 - சிரியாவின் கோட்பா பகுதியில் இரசாயன ஆயுதத் தாக்குதலால் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்களில் தகவல்.

1995 - அரசியத் தீர்வுக்கு பலரதும் எதிர்ப்பையடுத்து நாட்டை விட்டு வெளியேற அமைச்சர் பீரிஸ் திட்டம்.

1995 - தீர்வுத் திட்ட யோசனை குறித்து அரசியல் கட்சிகளுடன் ரணில் பேச்சு.

2016 - குடாநாட்டில் குற்றங்களைத் தடுக்க பறக்கும் பொலிஸ் படையணி உருவாக்க வேண்டும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்து.



1988 - நேபாள - இந்திய எல்லையில் ஏற்பட்ட 6.9 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால் ஆயிரத்து 450 பேர் வரை சாவடைந்த அதே வேளையில் ஆயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்.

2016 - தென்னிலங்கை மீனவர் அத்து மீறல் பிரச்சினைக்கு அரச தலைவரே தீர்வு வழங்குவார். யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் மகிந்த அமரவீர.

2016 - இரணைமடுக் குளத்தின் சீரமைப்பால் மீனவர்கள் 300 பேர் நிர்க்கதி.

2016 - பரணகம ஆணைக் குழுவிடம் இராணுவத்துக்கு எதிராக ஐந்தாயிரம் முறைப்பாடுகள்.

## நாளை

**22.08.2017**
செவ்வாய்க்கிழமை
**ஆவணி - 06**

திதி: பிரதமை மு.இ. 11.45 வரை
நட்சத்திரம்: மகம் பி.ப.04.42
சுபநேரம்: 10.35—12.05 வரை
ராகுகாலம்: 03.05—04.35 வரை

## பத்தி எழுத்து

### சாதாரண மக்களின் துயரத்தை அரசு போக்கவேண்டும்

மோட்டார் சைக்கிள்கள் உட்பட சிறிய வாகனங்களின் இறக்குமதி வரி வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மக்களுக்குக் கடன் வழங்கும் திட்டங்கள் இலகுவாக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் வெட்டு எதுவுமே இல்லை. இவ்வாறு பல சலுகைகள் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் தேர்தல்களை எதிர்பார்த்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எதிரணியினர் தெரிவிக்கின்றனர். இதில் உண்மையும் இல்லாமலில்லை.

உள்ளூராட்சி மற்றும் மகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளதை யொட்டியே அரசு இந்தச் சலுகைகளை அறிவித்துள்ளதாகக் கருத முடிகின்றது.

ஆனால் சாதாரண மனிதர்கள் இவற்றினால் பயன் பெறுவார்களென எதிர்பார்க்க முடியாது. வாகனங்களும், வங்கிக் கடன்களும் சாதாரண மக்களின் தேவைகளல்ல. அவர்கள் அன்றாடம் உண்ணும் உணவுகளின் விலைகளில் குறைப்பு ஏற்பட வேண்டும் என்றே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஏனென்றால் உணவுப் பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அரிசியின் விலை தினமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அரசு அரிசியின் விலைக் கட்டுப்படுத்துகின்றோம். அரிசியை இறக்குமதி செய்கிறோம் என்றெல்லாம் அறிவிப்புக்களை விடுக்கின்றதேயொழிய செயலில் எதையும் காணோம். மேலும் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மரக்கறி வகைகள், கடலுணவுகள், இறைச்சி வகைகள் ஆகியனவும் அதிக விலையில் விற்கப்படுவதால் சாதாரண மக்களின் நிலை பரிதாபமாக மாறி விட்டது. அன்றாடம் உழைத்துப் பிழைப்பவர்கள் அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிவோர், ஓய்வூதியம் பெறுவோர் எனப்பல தரப்பினரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தவிக்கின்றனர்.

மக்கள் இவ்வாறு தவித்துக் கொண்டிருக்கும் போது அரசில் முக்கிய பொறுப்புக்களை வகிப்பவர்கள் ஊழலில் ஈடுபட்டுப் பெருமளவு நிதியை ஏப்பம் விடுகின்றனர் எனத் தினமும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன. முன்னைய ஆட்சிக் காலத்தில் தான் ஊழல் மற்றும் மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றதாகக் கூறினார்கள். ஆனால் அந்த வியாதி இந்த அரசிலும் பரவியுள்ளது.

மக்களின் துயரங்களைக் களைவது தான் ஒரு நாட்டு அரசின் தலையாய கடமையாகும். மக்களால் உருவாக்கப்பட்ட அரசு மக்களின் துயரங்களைப் புரிந்து கொண்டு அவற்றை நீக்க வேண்டும். ஆடம்பரப் பொருள்களுக்கு வரியை விதிப்பதால் சிறிய எண்ணிக்கையானவர்களே பாதிக்கப்படுவார்கள். ஆனால் சாதாரண உணவுப்பொருள்களின் விலைகளைக் குறைக்கும் போது ஏராளமானவர்கள் பயன்பெறுவார்கள். அரசு இதைப் புரிந்து கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில ஒரு பல்புக்குக்கூட பாதுகாப்பு இல்லாமல் போச்சே...



நாசாவுக்கே சவால் விடுற அம்புட்டுப் பயலும் நம்மூர்லதான் இருக்கானுக



அடேய் கிராதகா.. பஸ் ஸ்டார்ட் ஆகிட போகுதுடா...




பேஸ்புக்ல அறிவுரை சொன்னா லைக்ஸ் கொமெண்ட் பறக்குது...



வீட்ல சொன்னா பாத்திரங்கள் பறக்குதே...

இருக்கிறப்ப என்னதான்... காம்ப்ளான், போர்ன்விட்டானு குடிச்சாலும்



செத்ததுக்கப்புறம் எல்லாருக்கும் பால்தான்....

**புன்னகை மன்னன்** @Punnagaimann

துவக்கத்தின் போது முடிவைப் பற்றி யோசிக்காதே...
முடிவுக்குப் பின் மீண்டும் ஆரம்பம் செய்யப்படும் மற்றுமொரு துவக்கத்தைப் பற்றி யோசி...!

1 8 26







**மேடம்:** நல்லவரைத் தவறாகக் கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவைப்படும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்தித்தாலும் வருமானம் உயரும்.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணியாளர்கள் விண் ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**மிதுனம்:** மனக்குழப்பத்தால் தொந்தரவு ஏற்படலாம். நண்பர்களின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**கடகம்:** விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும்.

**சிங்கம்:** திட்டமிடுதலுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். வீட்டுத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும்.

**துலாம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** தொடர்பில்லாத பணிகள் குறுக்கிட்டு சிரமம் தரலாம். தொழில், வியாபார விடயமாக திடீர் பயணம் செல்ல நேரிடும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**தனுசு:** முக்கியமான பணிகள் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபார நடைமுறையில் இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. உதவி செய்வீர்கள்.

**மகரம்:** தனித்திறமையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சமரசத் தீர்வு உண்டாகும்.

**கும்பம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவர்.

**மீனம்:** நண்பரால் சங்கடத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக திடீர் பயணம் மேற்கொள்வர்.


# ‘மெர்சல்’ இசை வெளியீடு கோலாகல அரங்கேற்றம்

முன்னணி நடிகர் விஜய் நடிப்பில் வெளியாகவுள்ள மெர்சல் படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நேற்று மாலை கோலாகலமாக நடைபெற்றது.

சென்னை நேரு விளையாட்டரங்கில் மாலை 5 மணியளவில் இந்த வெளியீட்டு விழா நடைபெற்றது. இசை வெளியீட்டு விழா தொலைக் காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

மெர்சல் படத்தின் கதாநாயகன் விஜய், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், கதாநாயகிகளான காஜல் அகர்வால், சமந்தா உள்ளிட்ட படக்குழுவினர் நிகழ்வில் பங்கேற்றனர். பல்லாயிரக் கணக்கான மக்கள் இசை வெளியீட்டு விழாவுக்காகத் திரண்டிருந்தனர். (ம)



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | | |
| | 3 | | | 8 | | | 1 | |
| 7 | | 4 | | | | 3 | | 9 |
| | | 3 | | | | | | 6 |
| | 5 | | | 2 | | | 8 | |
| 9 | | | | | | 7 | | |
| 4 | | 6 | | | | 5 | | 7 |
| | 1 | | | 3 | | | 2 | |
| | | | 5 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 5 | 8 | 7 | 4 | 1 | 3 | 2 |
| 3 | 7 | 1 | 2 | 5 | 6 | 4 | 9 | 8 |
| 8 | 2 | 4 | 3 | 1 | 9 | 6 | 7 | 5 |
| 9 | 1 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 6 |
| 4 | 6 | 3 | 9 | 8 | 2 | 5 | 1 | 7 |
| 2 | 5 | 8 | 7 | 6 | 1 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 9 | 1 | 2 | 8 | 7 | 6 | 4 |
| 1 | 8 | 6 | 5 | 4 | 7 | 9 | 2 | 3 |
| 7 | 4 | 2 | 6 | 9 | 3 | 8 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மழையில் பட்டம்விட்ட மாமேதை



பள்ளிப் படிப்பில்லாமலே சுயமாகக் கல்வி கற்று கணிதம், இலக்கணம், தர்க்க சாஸ்த்திரம் ஆகியவற்றில் தேர்ந்த ஞானம் பெற்று எழுத்தாற்றலும் கைவரப் பெற்றவர் பெஞ்சமின் பிராங்ளின். இவர் தனது அண்ணன் நடத்திய பத்திரிகையில் எழுதத் தொடங்கினார். இவர் அண்ணன் இதனை விரும்பாமையால் ஒரு பெண்ணின் புனை பெயரில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் இவரது அண்ணனுக்கு இது தெரிய வரவே, அவர் சகோதரனைக் கோபித்ததோடு, கொடுமைகள் செய்யவும் தொடங்கினார். இதனால் இவர் தன் நாட்டை விட்டு 18வயதில் பிலடெல்பியாவுக்கு சென்று அறிவியல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டார். அப்போது இவருக்கு வயது 38. மின்சாரம் தொடர்பான ஆய்வுகளிலேயே இவர் அதிக ஆர்வம் காட்டினார். வானத்தில் தோன்றும் மின்னல்களில் அதிக ஆர்வம் காட்டிய இவர், சில குச்சிகளையும் பட்டுத் துணியையும் கொண்டு ஒரு பெரிய காற்றாடி செய்து, அதன் மேல் முனையில் ஒரு கூரிய கம்பியை இணைத்துக் கட்டினார். நூலின் மறுமுனையில் பட்டுத் துணியையும் இணைத்தார். பட்டு நூல் இணையும் இடத்தில் உலோகத்தினாலான ஒரு சாவியையும் சேர்த்துக் கட்டினார்.


மின்னல் இடியுடன் மழை பெய்த ஒரு நாளில், தாமே தெருவில் இறங்கி அந்தக் காற்றாடியைப் பறக்க விட்டார். அவ்வளவு பெரிய மனிதர் பட்டம் விட்டதைப் பார்த்த பொது மக்கள் கேலி பேசினர். "அடாத மழையிலும் விடாது காற்றாடி விடுகிறதே இந்தச் சின்னப் பிள்ளை" என்று அவரை நையாண்டி செய்தனர். அவர்கள் கேலிப் பேச்சைப் பொருட்படுத்தாமல் காற்றாடியை அவர் உயரப் பறக்க விட, மேகத்தில் மின்னலும் பளிச்சிட்டது. அப்போது காற்றாடியின் சாவியில் மின்பொறிகள் தோன்றி அவர் விரல்களைத் தாக்கின. அப்போது மின் அதிர்வுகள் ஏற்பட்டதையும் அவரால் உணர முடிந்தது.

மின்னல் என்பது மேகங்களில் ஏற்படும் விளைவு என்றும் அது பூமிக்கு வரும்போது தீங்கு விளைவிக்கும் என்பதையும் அந்தப் பரிசோதனை மூலம் கண்டு பிடித்தார் பெஞ்சமின் பிராங்கிளின். இதையொட்டியே தான் பின்னர் பெரிய கட்டடங்களின் உச்சியில் இடி தாங்கிகள் அமைக்கப்பட்டன.



## பாம்பு

1. பாம்பின் பற்கள் இரையைக் கடித்து தின்ன உதவுவதில்லை.
2. பாம்பின் கண்களுக்கு மேல் இமை கிடையாது.
3. பாம்பைப் போல பல்லியும் சட்டை உரிக்கும்
4. பாம்பின் உமிழ் நீரே விஷமாக மாறுகிறது.
5. பாம்புகளுக்கு கேட்கும் சக்தி கிடையாது.
6. பாம்புக்கு வாசனை அறியும் சக்தி அதன் நாக்கில் உள்ளது.
7. கண்களைத் திறந்து கொண்டே தூங்கக் கூடியது பாம்பு.






## திட்டமிட்ட வாழ்வு

முற்காலத்தில் ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரை மன்னர்கள், காலம் காலமாக ஆண்டு வந்தனர். அங்கு ஒரு வினோதமான சட்டம் இயற்றப்பட்டிருந்தது. அதன் படி அங்கு ஒரு மன்னன் தொடர்ந்து ஐந்து வருடங்களே ஆட்சி செய்ய முடியும். ஐந்து வருடங்கள் முடிந்ததும் அவர் காட்டுக்கு அனுப்பப்படுவார். அங்கே அவர் கொடிய காட்டு விலங்குகளுக்கு இரையாக வேண்டி ஏற்படும். ஆனால் இது வரையில் இந்தச் சட்டம் காரணமாக எவரும் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகும் வரையும் ஆட்சி செய்யவில்லை. ஏனெனில் ஐந்து வருடம் முடிய காட்டுக்குச் செல்ல வேண்டுமே என்ற அச்சத்தில் பயந்து பயந்து ஆட்சி செய்து கொண்டு உடல் மெலிந்து நோய் வாய்ப்பட்டு முன்னதாகவே 2 அல்லது 3 வருடங்களில் இறந்து விடுவார்கள்.

ஆனால் ஒரு அரசர் மட்டும் மிகவும் சந்தோஷமாக 5 வருடங்கள் ஆட்சி செய்தார். 5 வருடம் பூர்த்தியானது. இப்போது அவர் காட்டுக்குப் போக வேண்டிய நாளும் வந்தது. அரசரை வழியனுப்ப பலரும் வந்திருந்தார்கள். அப்போது அந்த அரசர் எவ்வித கலக்கமுமின்றி "என்னை இப்படியே அரசருக்குரிய அடையாளங்களுடன் காட்டில் விட்டு விடுங்கள்" என்று சொன்னார். கூடி நின்ற பல மந்திரிமார் தமக்குள்ளே "ராசா தான் காட்டுக்குப் போவதை மறந்து விட்டு எங்கோ ஒரு இராட்சியம் போவது போலப் பேசுகிறாரே! "அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடச் சென்ற இவருக்கு காட்டின் நிலைமை தெரியாதா என்ன? சரி; போகும் போதாகிலும் மகிழ்ச்சியாகச் செல்லட்டும்" என்று ஆளுக்காள் குசுகுசுத்துப் பேசிக் கொண்டார்கள். அரசர் பல்லக்கில் புறப்பட்டு பாதித் தூரம் சென்ற நிலையில் பல்லக்கு தூக்கும் ஏவலாள் ஒருவன் அரசரிடம் "அரசே, நீங்கள் போவது காட்டுக்கு, அங்கே வாழப்போவதோ கொடிய மிருகங்கள் மத்தியில். ஆனால் மிகவும் மகிழ்ச்சியாகச் செல்கிறீர்களே! எமக்கெல்லாம் ஆச்சரியமாக உள்ளது" என்று வினவினான்.

அரசரோ பதிலாக "அதுவா? நான் ஆட்சி ஏற்ற முதல் வருடம் வேட்டைக்குச் செல்லும் போது, மிருகங்களை வேட்டையாடியும் என்படைகளை சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளிலும் காட்டுக்கு அனுப்பியும் கொடிய மிருகங்களையெல்லாம் கொன்று விட்டேன். இரண்டாம் வருடம் அந்தக் காட்டில் சிறியதாக ஒரு அரண்மனையும் கட்டிவித்தேன். சூழ உள்ள சில ஏக்கர் நிலங்களில் பயிர்களையும் விளைவித்து விட்டேன். நான் என் நாட்டு மக்களை நல்லாட்சி செய்தமையால் சில பல பொது மக்களும் என்னோடு அங்கே குடியேறி வாழத் தயாராக உள்ளனர். இவ்வளவையும் மீதி வருடங்களில் செய்து முடித்து விட்டேன். ஆக இப்போது காட்டில் ஒரு சிறிய ராம்ராஜ்சியமே உருவாகிவிட்டது. அங்கே செல்வதை யிட்டு நான் ஏன் கவலை கொள்ள வேண்டும்? என்றார் மன்னன். பல்லக்குத் தூக்கிகன். அரசரின் புத்திசாலித்தனத்தை மனதுக்குள்ளே பாராட்டியபடி நடந்தனர்.

**நன்கு திட்டமிடுவோம்; விடா முயற்சியுடன் செயற்படுவோம்; வெற்றி பெறுவோம்.**

## எமது நாட்டில் நூலகங்கள் பற்றிய சில வரலாற்றுத் தகவல்கள்

*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

- விஜயபாகு என்ற அரசன் (1232-1236) தம்ப தெனியாவில் ஆண்ட காலத்தில் பல நூல்களையும் கையெழுத்துப் படிவங்களையும் பிரதி பண்ணுவித்தான். பல தமிழ் சுவடிகளை மொழிபெயர்த்தும், பெரும் நூலகம் ஒன்றையும் பராமரித்தான்.
- இதே போன்று தமிழ் ஈழத்தில் 13 ஆம் நூற்றாண்டில் சிங்கை ஆரியச் சக்கர வர்த்திகளால் சரஸ்வதி மகால் என்ற நூலகம் கட்டப்பட்டது. இந்த நூலகத்துக்கென பல்வேறு அறிஞர்கள் அழைக்கப்பட்டு அவர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள பணித்துள்ளனர். இவர்களுள் பௌத்த துறவிகளும் தமிழ்நாட்டுப் புலவர்களும் இருந்தனர்.
- நல்லூரைத் தலைநகரமாகக் கொண்டு பல ஆரியச் சக்கரவத்திகள் ஆட்சி செய்துள்ளனர். இவர்களுள் பரராஜசேகரம் தம்பிசெக ராஜசேகரம், மருமகன் அரசகேசரி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.
- இவர்கள் சோதிடம், வைத்தியம், கணிதம் தர்க்கம் துறைகளில் பல நூல்களை எழுதியும், மொழி பெயர்த்தும் உள்ளனர். தமிழ்ப் புலவர் சங்கம்" ஒன்றை அமைத்து தமிழுக்கு தொண்டாற்றினர் எனவும் அறிய முடிகிறது.
- நல்லூரின் கிழக்கில் நாயன்மார்கட்டு என்ற நகரின் மத்தியில் அமைந்திருந்த தாமரைக் குளத்தடியில் மாடிக் கட்டடத்தைக் கொண்ட நூல்நிலையம் ஒன்று இருந்துள்ளது என்றும், பன்னாட்டு அறிஞர்கள் அந்த நூலகத்தைப் பயன்படுத்தினார்கள் என்றும் அறிய முடிகிறது.



- சரஸ்வதி மகால் என்ற நூலகம் பல அரிய நூல்களைக் கொண்டிருந்தது என்பதற்கு தமிழகத்தைச் சார்ந்த புலவர்களின் எழுத்துக்கள் சான்று பகர்கின்றன.

## கூட்டமைப்பு...

தொடர்பில் இன்றைய பேச்சில் ஆராயப்படும் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில் புதிய அரசமைப்பு மற்றும் 20ஆவது திருத்தம் தொடர்பில் மாத்திரமே பேசப்படும் என்றும், காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை உள்ளிட்ட ஏனைய விடயங்கள் பிறிதொரு சந்தர்ப்பத்திலேயே ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுவதற்கு கடந்த வியாழக்கிழமை திட்டமிட்டிருந்தார். இறுதி நேரத்தில் அந்தச் சந்திப்பு நிறுத்தப்பட்டது. இன்றைய தினம் அந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியினர், அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இன்றைய கூட்டத்தில் பங்கேற்பார்கள். இந்த மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட இடைக்கால வரைவு இன்னமும் சமர்ப்பிக்கப்படாமல் இழுத்தடிப்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது கடுமையான நிலைப்பாடுகளை இடித்துரைப்பார் என்று தெரியவருகின்றது. (உ-5)

## கடும்...

தெரிவு என ரெலோவின் உயர்பீடம் இணக்கத்துக்கு வந்தது.

வடக்குமாகாண அமைச்சரவையில்ரெலோ சார்பில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு ரெலோவின் உயர்மட்டக்குழுக்கூட்டம் நேற்றுக்கூடியது. டெனீஸ்வரன் தொடர்பான விவகாரம் முடிவுக்கு வந்ததும், வெற்றிடமாகும் அமைச்சர்பதவிக்கு யாரைநியமிப்பது என்ற சர்ச்சை ரெலோவினுள் வெடித்தது.

கட்சியின் சார்பில் க.விந்தனின் பெயரை முதலமைச்சருக்கும் பரிந்துரைத்துள்ள நிலையில், அவரும் அதனை ஆளுநருக்கு அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அந்தத் தகவலை உறுதிப்படுத்திய விந்தன், ஆளுநர் முன்னிலையில் நாளைமறுதினம் புதன்கிழமைதாம்பதவிஏற்கஉள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவித்தார். எனவே இந்த விடயம் தொடர்பில் ஆராயத் தேவையில்லை என்ற கருத்து சிலரால் முன்வைக்கப்பட்டது. அதற்குகட்சிக்குள்எதிர்ப்புவெளியிடப்பட்டது. ரெலோவின் சார்பில் யாரை அமைச்சராக நியமிப்பது என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்று ஒரு தொகுதி உறுப்பினர்கள் விடாப்பிடியாக நின்றிருந்தனர்.

டெனீஸ்வரன் மன்னாரைச் சேர்ந்தவர் என்பதால், அந்த மாவட்டத்துக்கே அமைச்சுப் பதவிவழங்கப்படவேண்டும். அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட ஜி.குணசீலனை எமது கட்சி சார்பில் அமைச்சரவைக்குப்பரிந்துரைக்கலாம்என்றகருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன்சுகாதார அமைச்சர்பதவிவிலகியுள்ளமையால், குணசீலன் மருத்துவர்என்பதால்அவரைசுகாதார அமைச்சுக்குநியமிப்பதுபொருத்தமாகஇருக்கும். இதனடிப்படையில் குணசீலனின் பெயரையேகட்சிபரிந்துரைக்கவேண்டும்என்று அழுத்தமாககருத்துக்கள்முன்வைக்கப்பட்டன. இந்த இழுபறியால் கட்சியின் கூட்டம் பின்னிரவு வரை நீடித்தது. இருவரின் பெயரையும் வாக்கெடுப்புக்குவிடப்படவேண்டும்என்றும் கோரிக்கைவிடப்பட்டது. எனினும் பொதுச் செயலாளர் என்.சிறிகாந்தா மற்றும் பிரசன்னா இந்திரகுமார், ஹென்றிமகேந்திரன், கனகரட்ணம் விந்தன் ஆகியோர் வாக்கெடுப்புநடத்த எதிப்புத் தெரிவித்தனர்.

ரெலோவுடன்இணைந்துஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு, அதனால் பல ஆபத்துக்களை எதிர்கொண்டவர்கள் இருக்க நேற்று கட்சிக்குள் கொண்டுவரப்பட்டவருக்கு அமைச்சுப் பதவியை வழங்கி கட்சிக்கு ஏற்பட்ட சிக்கல் போதும். நீண்டகாலமாகரெலோவுடன்பயணிக்கும்விந்தனுக்குத்தான் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்றுஅவர்கள்உறுதியாகநின்றனர். அவர்களின்இந்தக் கருத்தையடுத்து ஜி.குணசீலன் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

கடும் இழுபறிக்குப் பின்னர் விந்தனே தமது கட்சியின் தெரிவு என ரெலோவின் உயர்பீடம் இணக்கத்துக்கு வந்தது. (வ-5,101)


### வேலையாள்கள் தேவை

இராசம்மா திருமண மண்டபத்திற்கு வேலையாள்கள் தேவை. நேரிலும் தொலைபேசியிலும் தொடர்புகொள்ள.

-0212219420, 0773344363

121 B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


### மயிலை - வீரமாணிக்கதேவன்துறை ஸ்ரீகண்ணகை அம்பாள் ஆலய நிர்வாக சபைக்கூட்டமும் புதிய அங்கத்தவர்களை உள் ஈர்த்தலும்

**அம்பிகை அடியார்களே!**

ஆலயத்தின் நிர்வாகசபைக்கூட்டம் எதிர்வரும் 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அம்பிகையின் ஆலய மண்டபத்தில் நடைபெறத்திருவருள் கைகூடியுள்ளது.

ஆகவே இக்கலந்துரையாடலில் நிர்வாக சபை அங்கத்தவர்கள் அம்பிகையின் ஆலய உபய காரர்கள் ஆலய மேம்பாட்டை விரிவுபடுத்தி முன்னெடுக்க விரும்பும் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய ஆதீனகர்த்தர்களும்**
**நிர்வாகசபையினரும்.**

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி நளாயினி ஆனந்தசெந்தூரன்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி**
**பரமேஸ்வரி குணராசா**
அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்,**
**யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை**

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி வாசுகி சுதாகரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி பரமேஸ்வரி குணராசா**
அவர்கள் 19.08.2017 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நல்லுறவு மன்றம், யா/செங்குந்த இந்துக் கல்லூரி**

### மரண அறிவித்தல்

## முருகேசு இராசதுரை



வங்களாவடி வீதி, மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கரும்புள்ளியான், நட்டாங்கண்டல், வங்களா வடி, மட்டுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசதுரை நேற்று [20.08.2017] ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும் கார்த்திகேசு - தங்கமுத்து தம்பதியரின் மூத்தமருமகனும் பரமேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும் குகதாசன் [கரும்புள்ளியான்], அருள்தாசன் [சுவிஸ்], குமுதினி [கரும்புள்ளியான்], விஜயந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மராணி, நந்தினி [சுவிஸ்], அசோகன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சுகைதா, சசிரேகா, தீபா, சுகிந்தன், பகீலதன் [சுவிஸ்], சுபாஸ், விதுஸன், வித்யா, சுபோதினி காலஞ்சென்ற சசிவதனா, கோபிகா [சுவிஸ்], சசிகரன், விஜயராஜ் [பிரான்ஸ்] ஆகியோரின் பாசமிகு பேரனும் பருதியின் பூட்டனும் துசிதரனின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [21.08.2017] திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மட்டுவில் கிழக்கு, வங்களாவடி, சாவகச்சேரி.**

**தகவல்: குகதாசன் (மகன்)**

### நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 13 . 05 . 1955



மறைவு 24 . 07 . 2017

கடந்த 24.07.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நல்லையா உதயகுமார் (குமார்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை மறுதினம் (23.08.2017) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

**கலட்டி லேன்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**குடும்பத்தினர்.**
**077 418 6912**

### மரண அறிவித்தல்கள்

## திருமதி பூரணம் சுப்பிரமணியம்



தோற்றம் 31.12.1934 மறைவு 20.08.2017

புளியந்தோட்டம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சுப்பிரமணியம் நேற்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கந்தசாமி, நல்லம்மா, ரத்தினம், சரஸ்வதி, அன்னலட்சுமி, ராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்களேஸ்வரி, பத்மலோஜினி, அருந்தவகுமார் (சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்), மாலினி (பிரான்ஸ்), ராஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசிங்கம், முருகையா, ராசமலர், மகாலிங்கம் (பிரான்ஸ்), சிறீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேம்குமார் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (மாநகரசபை , யாழ்ப்பாணம்), தினேஸ்குமார் (லண்டன்), ஜினேஸ்குமார், சிறீகரன் (சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்), றஜீகரன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிளிநொச்சி வளாகம்), கீதமன், பிரசாத் (பிரான்ஸ்), பிரவீனா (பிரான்ஸ்),கிருஷா (பிரான்ஸ்), கிருத்திஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டவனியா (பிரான்ஸ்), ஷக்ஷனா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## பொன்னம்பலம் இராசரத்தினம்



யாழ். குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும்கொண்டபொன்னம்பலம்இராசரத்தினம் கடந்த (18.08.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தில்லைவனம் தம்பதியரின் அன்பு மகனும் செல்லத்துரை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் பாமா (லண்டன்), பாமதி (கீதா - சுவிஸ்), சுதர்சன், பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஜித்தா, இராதாகிருஷ்ணன் (லண்டன்), சுஜித்தா, அனுலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ரவிரஞ்சன் (லண்டன்), குணநாதன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் திருமதி மங்கையற்கரசி (லண்டன்), காலஞ்சென்ற இராசசேகரம், தனலட்சுமி (இராசு), இராஜகுலசேகரம், காலஞ்சென்ற இராசநாயகம், புஸ்பராணி (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநாவுக்கரசு, தவமணி, சரோஜினிதேவி, மாலினி, யோகராஜா, சாம்பசிவம் (ஆஸ்திரேலியா), சிவபாலன் (ஆஸ்திரேலியா), சுதாகர் (ஆஸ்திரேலியா), சத்தியமூர்த்தி (கனடா), சுகுமார் (ஆஸ்திரேலியா), சுந்தரலிங்கம், சிவானந்தம், காலஞ்சென்றவர்களான சிவநாதன், செல்வமலர் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காகமருதனார்மடம்,பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லவ்வேன், உடுவில்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், 077 692 6228**

# மரண அறிவித்தல்



## சின்னையா இராசேந்திரம் பெனடிக்ற்

(மங்களா தளபாட நிறுவன ஊழியர்)

நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 678/2, கண்டி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் பெனடிக்ற் (19.08.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மேரிஅக்கினேஷின் (புஷ்பம்) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னையா – தங்கமணி தம்பதியரின் பாசமிகு மகனும் சுவேந்திரன் றெக்சி (இத்தாலி), ரூபன்வின்சலோ (இத்தாலி ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மேரிகிறேஸ் (இத்தாலி), சத்தியவாணி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் சாம் (இத்தாலி), சைவின் (இத்தாலி) ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, கந்தையா, சோமசுந்தரம், பொன்னம்பலம், பூவிலிங்கம், தர்மலிங்கம் மற்றும் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நேசம்மா (எலிசபெத்) மற்றும் இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை திருப்பலி அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நாளை (22.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
01
05
1938



மறைவு
17
08
2017

## ஈசாக் மரியதாஸ் (சந்தணசாமி)

(ஓய்வுபெற்ற சுங்க இலாகா அதிகாரி)

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் N.H.S flat A2/6 சாஞ்சிஆராச்சி மாவத்தை கொழும்பு 12ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஈசாக் மரியதாஸ் 17.08.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஈசாக் - உஸ்தீனம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனும், காலஞ்சென்ற லூர்துசாமி, சந்தியாப்பிள்ளை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யேசு அன்னராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்சோஸ்ரம் - லூயீசம்மா தம்பதியரின் அன்புமருமகனும், திருமதி சந்தியாப்பிள்ளை ஜசிந்தாவின் அன்பு மைத்துனரும் மெறின்சி (கனடா), ஜெறின்சி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பெரியப்பாவும் நவரட்ணம் றோசா (கனடா), லீனஸ், காலஞ்சென்ற அருட்சகோதரி தெக்ளா (தி.கு), ஸ்ரனிஸ்லொஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இரங்கற்திருப்பலி இன்று (21.08.2017) திங்கட்கிழமை முற்பகல் **9.30** மணிக்கு ஊர்காவற்றுறை புனிதயாகப்பர் ஆலயத்தில் நடைபெற்று புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**0771771419, 0772669321**

### அமெரிக்க...

ணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்றுச் சிறப்புற நடைபெற்றது.
இலட்சக்கணக்கான பக்தர்கள் மத்தியில் அலங்காரக் கந்தன் தேரில் ஆரோகணித்து அருட்காட்சி கொடுத்தார்.
பக்தர்கள் காவடி, பாற்குடம், கற்பூரச்சட்டி, பாற்காவடி ஏந்தித் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.
இம்முறை தேர்த் திருவிழாவில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-101,37)

### சுற்றுலாவி...

நாள்களில் நடத்திய தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களில் 19 பேர் சாஸ்திரம் கூறும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஏனைய 6 பேர் புடைவை வியாபார நோக்கில் தங்கியிருந்துள்ளனர். இரண்டு பேர் வியாபார நிலையங்களில் தொழில் புரிந்து வந்துள்ளனர் என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டது. (உ-4)

# மரண அறிவித்தல்



தோற்றம் : 27.09.1961
மறைவு : 19.08.2017

## முனியாண்டி பொன்னையா

மொனராகலையைப் பிறப்பிடமாகவும் வேலணை - 05 ஆம் வட்டாரத்தினை வதிவிடமாகவும்கொண்ட முனியாண்டி பொன்னையா 19.08.2017 அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முனியாண்டி - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும், நடராஜ - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாளன், சர்மிளா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை வடக்கு,
வேலணை - 05

தகவல்:
குடும்பத்தினர்.

**077 845 6716**

# மரண அறிவித்தல்

## விஜயரத்தினம் விந்துஜன்

(இரண்டாம் வருட விஞ்ஞானபீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்)

புளியங்குளம் வவுனியாவைப் பிறப்பிடமாகவும், மதகுவைத்தகுளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் விந்துஜன் நேற்று (20.08.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் கேசவன், சுதர்சினி, (ஆசிரியை – யா /புளியங்குளம் ஆரம்பப் பாடசாலை) காலஞ்சென்ற சுகன்யா விஜயதர்சினி (பிரதேச செயலகம் – வவுனியா) சுரேந்தர் (பாதுகாப்பு முகாமையாளர் – இ.போ.ச. வடபிராந்தியம்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவாஜினி (வடமாகாண விவசாயத்திணைக்களம்), ஏகநாதன், அகிலன் ஆகியோரின் மைத்துனரும் திகேஷன், தர்சன் ஆகியோரின் சிறிய தந்தையும் தபீஷன், அஸ்வினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2017) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதகுவைத்தகுளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சண்முகரத்தினக்குருக்கள் கனகசபாபதி ஐயர்

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி அம்மன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரத்தினக்குருக்கள் கனகசபாபதிஐயர் நேற்று (20.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலை தலங்காவலான் திருவடியெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகரத்தினக்குருக்கள் – பராசக்திஅம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும் அன்னபூரணிஅம்மாவின அன்புக்கணவரும் ஜெயராணி, விக்னராஜா (விக்னா ஐயா) ஆகியோரின் அன்புத்தந்தையும் புவனேந்திர சர்மா (ரவி ஐயா), ஜெயரூபி ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## கட்சி...

டால் மாகாண சபை உறுப்பினர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப் போகவும் நான் தயார். ஆனால், அந்த இடத்துக்கு எங்கள் கட்சியைச் சேர்ந்த க.சந்தி ரகுலசிங்கத்தை நியமிப்பீர்கள் என்ற உத்தரவாதத்தைத் தரவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புதிய அமைச்சரவை நியமனத்தின்போது முதலமைச்சர் தரப்பினரால் விவசாய அமைச்சு பதவியை ஏற்று கொள்வீர்களா என்று கேட்டனர். அதனை மறுத்தேன். இந்த மாகாண சபையில் முறைகேடுகள் சம்பந்தமாக முதன் முதலில் பிரச்சினையைக் கொண்டுவந்தவன் நான். அது விசாரிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டு முதலமைச்சரால் நடவடிக்கை எடுக்கப்பட்ட பிற்பாடு அதே பதவியில் அமர்வது என்பது பதவி ஆசையால்தான் நான் அப்படி நடந்துகொண்டேன் என்கிற வீண் பழியைக் கொண்டு வந்துவிடும். அதனால் மறுத்தேன்.

ஆனால், அமைச்சரவை முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை முதலமைச்சருக்கு ஏற்பட்டதன் பின்னர் அதிலும் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பதவி விலகிய பின்னர், வவுனியாவில் இருக்கின்ற பொது அமைப்புக்கள், ஆதரவாளர்கள், இயக்க உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா மாவட்ட அமைச்சுப் பதவியை இழந்து விடக்கூடாது என என்னைத் தொடர்ந்தும் வற்புறுத்தி வந்தனர். அதனால் தற்போது அமைச்சர் பதவியை ஏற்கத் தயார் என்று அறிவித்திருக்கிறேன்.

எங்கள் கட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைமையிடம் தெரிவித்த பின்னரே அந்த உறுதிமொழியையும் முதலமைச்சருக்கு வழங்கியிருந்தேன்.

வவுனியா மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் நில அபகரிப்பு போன்ற பல்வேறு நெருக்கடிகள் இருக்கின்றபடியால் வவுனியா மாவட்டத்துக்கு ஓர் அமைச்சு வேண்டும் என்ற நோக்கத்திலே நான் இதனைக் கூறி இருந்தேன்.

என்னைப் பொறுத்தவரையில் மாகாண சபை சரியாக இயங்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாக இயங்கவேண்டும். மக்களுக்கான நிரந்தரத் தீர்வு மற்றும் அபிவிருத்தி தவிர வேறு எதுவும் என் மனதில் இல்லை என்றுள்ளது. (உ-5-101)

## கல் வீடு...

விடுத்துள்ளது. 50 ஆயிரம் கல் வீடுகள் அமைக்குப் பணி விரைவாக நடைபெற வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது. தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஊடாக வடக்கு கிழக்கில் 50 ஆயிரம் கல் வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்த 2009ஆம் ஆண்டு, வடக்கு கிழக்கு மக்களின் வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யுமாறு அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் கோரினோம். அவர் கைவிரித்து விட்டார். அதனால் இந்தியாவுக்குச் சென்ற கூட்டமைப்பு, அந்த நாட்டு அரசிடம் இதே கோரிக்கையை முன்வைத்தது. அதனை ஏற்றுக் கொண்டு இந்திய அரசு வடக்கு கிழக்கில் 44 ஆயிரம் கல் வீடுகளை கட்டித் தந்துள்ளது.

இதன் பின்னரும் வடக்கு கிழக்கில் வீட்டுத் தேவை இருந்தது. மீள்குடியேற்ற அமைச்சு 65 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைத்துத் தருவதாகத் தெரிவித்தது. இதில் ஒரு பொருத்து வீட்டுக்கான செலவில் 3 கல் வீடுகள் கட்ட முடியும் என்பதைச் சுட்டிக்காட்டினோம். பொருத்து வீட்டுக்கான செலவு குறைக்கப்பட்டது. ஆனால் அந்தப் பெறுமதியில்கூட இரண்டு வீடுகள் கட்ட முடியும் என்பதைத் தெரிவித்து பொருத்து வீட்டை எதிர்த்தோம்.

ஊழல் நிறைந்த பொருத்து வீட்டை மக்கள் ஏற்காவிட்டால் வீடே கிடைக்காது என்ற தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறானதொரு நிலையில்தான், வடக்கு கிழக்கில் 50 ஆயிரம் கல் வீடு அமைக்கப்படவுள்ளதான அறிவிப்பு வெளிவந்துள்ளது.

பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்த மக்கள் அந்த விண்ணப்பங்களை மீளப் பெற்று கல் வீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் -என்றார். (உ-5)

## தியாகங்கள்...

துத்துறை அமைச்சர் பா.டெனீஸ் வரனுக்கு இந்தக் கூட்டத்துக்குஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த ப.சத்தியலிங்கத்துக்கு கூட்டத்துக்கான அழைப்பு அனுப்புவதா இல்லையா என்பது தொடர்பில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

வடக்கு மாகாண அமைச்சர் சபைக் கூட்டம் கடந்த மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. ஒரு மாதத்தின் பின்னர் நாளை மீளவும் கூடவுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோருக்கு நாளைய கூட்டத்துக்கான அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த ப.சத்தியலிங்கம், இந்த மாதம் 6ஆம் திகதி தனது பதவி விலகல் கடிதத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்திருந்தார். முதலமைச்சரும் பதவி விலகலை ஏற்றுக் கொண்டார்.

ஆனால் சட்ட ரீதியாக சுகாதார அமைச்சுக்கு இன்னொருவரை நியமிக்கவுமில்லை. பதில் கடமை வழங்கவும் இல்லை. முதலமைச்சர் தானாவது அந்த அமைச்சைப் பொறுப்பேற்கவுமில்லை.

இவ்வாறானதொரு நிலையில், நாளைய கூட்டத்துக்கு ப.சத்தியலிங்கத்தை அழைப்பதா அல்லது, முதலமைச்சர் இன்றைய தினம் சுகாதார அமைச்சைப் பொறுப்பேற்பதா, புதியவர் ஒருவரை நியமிப்பதா என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (உ-5-101)

## உயர்தர...

தின் மூத்த பொலிஸ் அதிகாரி தலைமையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுவருவதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார, பொலிஸ் மா அதிபரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே இந்த விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரசாயனவியல் பாடப் பரீட்சை நேற்று முன்தினம் நடைபெற்றது. பரீட்சை வினாத்தாளில் கேட்கப்பட்டிருந்த 3 வினாக்கள், கம்பகா மாவட்டத்தில் தனியார் வகுப்பு நடத்தும் ஆசிரியரால் வெளியிடப்பட்ட முன்னோடி வினாத்தாளில் இடம்பெற்றிருந்தன. இது தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்துக்கு உடனடியாகவே தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார, பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுசென்றிருந்தார். பொலிஸ்மா அதிபர் கம்பகா மாவட்ட பொலிஸ் அதிகாரியிடம் அதனைப் பாரப்படுத்தியிருந்தார்.

முன்னோடி வினாத்தாளை வெளியிட்ட ஆசிரியர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். உண்மையில் எதிர்பார்க்கை வினாக்களாக இவற்றை வெளியிட்டிருந்தாரா? அல்லது வினாத்தாள் முன்னரே கசிய விடப்பட்டிருந்ததா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி ஆசிரியர் தனது முன்னோடி வினாத்தாளில் இருந்த வினாக்கள் இரசாயனவியல் வினாப் பத்திரத்தில் வெளியானமை தொடர்பில் துண்டுப் பிரசுரமும் வெளியிட்டுள்ளார். தான் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அடுத்த ஆண்டு இரசாயனவியல் வகுப்புக்களை நடத்தப் போவதாக அதில் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## டெனீஸ்...

அந்தக் கட்சியின் உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் நேற்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சரவையை மாற்றியமைக்க வேண்டும் என்ற வடக்கு மாகாண முதலமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு பா.டெனீஸ்வரனிடம் ரெலோ கோரியிருந்தது. பதவி விலகுவதற்கு ஒரு நாள் அவகாசமும் அந்தக் கட்சியால் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. தான் எந்தக் காரணத்துக்காகவும் பதவியிலிருந்து விலகுவதற்குத் தயார் இல்லை என்று பா.டெனீஸ்வரன் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ரெலோவின் உயர்மட்டக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அமைச்சர் பா.டெனீஸ்வரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக தற்காலிகமாக 6 மாதங்கள் அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்திருந்தார். அவர் பங்குபற்றாமலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்சியிருந்து சட்டவிரோதமாக என்னை நீக்கினால் அதற்கு எதிராக நீதிமன்றை நாடுவேன் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஏற்கனவே தெரிவித்திருந்தார். (வ-5-101)

## யாழ்...

ளிக்காது நேற்று உயிரிழந்தார். இதயத்தில் ஏற்பட்ட கிருமித் தொற்றே இறப்புக்குக் காரணம் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விஞ்ஞான பீடத்தில் பயிலும் வவுனியாவை சேர்ந்த விஜயேந்திரன் நிந்துஜன் (வயது -23) என்பவரே உயிரிழந்தார்.

இவர் கோண்டாவில் கிழக்கில் வீடு ஒன்றில் தங்கியிருந்து பயில்கிறார். சில நாள்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோதும் அது பயனளிக்கவில்லை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற நேற்றுச் சென்றுள்ளார்.

அங்கு அவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்கு உடல்பாதிப்பு கடுமையாக இருந்தமை தெரியவந்தது. உடனடியாகவே அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுத் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் அது பயனளிக்கவில்லை. சில மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்தார்.

அவரது இதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டிருந்ததாக உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் விசாரணையில் கூறப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-8-ரி1)

## அரசியல்...

ஊடாக அரசியல் கைதிகள் பழிவாங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை முதல் அவர்கள் உணவு உண்ண மறுத்து வருகின்றனர் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துசார உபுல்தெனிய தெரிவித்தார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் வழக்குகள் 2013ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் நடைபெறுகின்றன. அந்த வழக்குகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன என்று கூறப்படுகின்றது. எனினும் தற்போது அந்த வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் வேறு நீதிமன்றங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

வேறு நீதிமன்றங்களுக்கு இந்த வழக்குகளை மாற்றி வழக்கை முடிவுறுத்தாது தொடர்ச்சியாக இழுத்தடிப்பதே நோக்கம் என்றும், தண்டனைத் தீர்ப்பு இல்லாத போதும் தண்டனை வழங்கும் வகையில் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்படுகின்றது என்றும் கைதிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகிறது.

தமது வழக்குகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படக்கூடாது என்பதே கைதிகளின் கோரிக்கை என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர். (உ-ற-101)

## மு.காவுடன்...

தெரிவித்தார்.

ஹஸனலிக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கி, முஸ்லிம் கூட்டமைப்பு உருவாவதைத் தடுப்பதற்கான காய் நகர்த்தலில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஈடுபட்டுள்ளார் என்று வெளியான செய்தி தொடர்பில், ஹஸனலியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த இணைப்பு விவகாரம் தொடர்பில் எவரும் என்னுடன் எத்தகைய பேச்சும் நடத்தவில்லை. இன்று கட்சி உள்ள நிலையில் நான் மீண்டும் அதனுடன் இணைந்துகொள்வேன் என்பதற்குத் துளியும் இடமில்லையென்பதை உறுதிபடத் தெரிவிக்கின்றேன்.

முஸ்லிம் காங்கிரஸில் அம்பாறை மாவட்டத்துக்கான அரசியல் அதிகாரம் மலினப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அம்பாறை மாவட்டம் பெற்றிருந்த முழு அதிகார செயலாளர் நாயகம் பதவி முழுமையாகக் கட்சி யாப்பு மாற்றம் மூலம் ஒழிக்கப்பட்டுள்ளது.

தலைவரே கட்சிச் செயலாளரைத் தீர்மானிக்கும் அராஜகம் உட்பட தலைவரின் தான்தோன்றித்தனமான தலையீட்டால், அதிகாரம் பொருந்திய செயலாளர் நாயகம் பதவி நாசமாக்கப்பட்டுள்ளது. எனக்குப்பதவி, பட்டம் தேவையில்லை, ஆனால் மேற்படி தன்னிச்சையாக யாப்பு திருத்தம் மூலம் அம்பாறை மாவட்ட மக்களின் அரசியல் அதிகாரத்தை மழுங்கடித்த தலைவரின் தான்தோன்றித்தன செயற்பாட்டை எதிர்த்தே கட்சியை விட்டு வெளியேறினேன்.

இந்த நிலைப்பாட்டில் எந்த சலுகையாலும் என்னைத் திருப்திப்படுத்த முடியாது. எமது மக்களினதும், எனதும் தன்மானம், மதிப்பு என்பவற்றை இழந்து முஸ்லிம் காங்கிரசுடனோ தலைமையுடனோ மீண்டும் இணைந்து போக நான் ஒருபோதும் தயாரில்லை.

எத்தகைய காய்நகர்த்தல்களுக்கும் மசிந்து கிழக்கில் முஸ்லிம் கூட்டமைப்பை உருவாக்கும் விடயத்திலிருந்து பின் வாங்கமாட்டேன். முஸ்லிம் கூட்டமைப்பு உருவாக்க விடயத்தில் நான் மும்முரமாகவுள்ளேன். எமது இந்த முயற்சி நிச்சயம் வெற்றியளிக்கும் -என்றார். (உ-5-30)

## நீதி அமைச்சர்...

பெறவுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவர் குழுவின் விசாரணை அறிக்கையும் இதன்போது சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த அறிக்கை அமைச்சர் விஜயதாசவுக்குப் பாதகமாகவே வரும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதற்கு முன்பதாகவே அவர் தனது பதவியிலிருந்து விலகுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவேளை அப்படி அவர் இன்று பதவி விலகாவிட்டால் நாளை நாடாளுமன்றத்தில் சிறப்பு அறிவிப்பு ஒன்றை விடுத்துவிட்டு அவர் பதவி விலகுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, விஜயதாச ராஜபக்ச இன்று பதவி விலகுவார் என்று பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேராவும் தெரிவித்திருந்தார். ஆனால், அதனை அமைச்சர் விஜயதாச மறுத்தார்.

அமைச்சுப் பதவியிலிருந்து தான் ஏன் விலக வேண்டும் என்று நேற்றுக் கேள்வி எழுப்பினார். அரச தலைவர் மைத்திரிபால இது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்றும், தான் பதவி விலகுவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நீதி அமைச்சுப் பதவியை விஜயதாச துறந்தாலும் புத்தசாசன அமைச்சு அவரிடமே தொடர்ந்தும் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. பிக்குகளின் ஆதரவு விஜயதாசவுக்கு இருப்பதன் காரணத்தால் அரசு இந்த ஏற்பாட்டுக்கு வரக்கூடும் என்று அவர்கள் எதிர்வுகூறினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் நடைபெற்றது. நீதியமைச்சர் விஜேதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரமசிங்க, கபீர் ஹாசீம் ஆகியோரை உள்ளடக்கி மூவரடங்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவால் விசாரணை செய்யப்பட்ட அறிக்கை நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

விஜயதாச பதவி விலகினால் அவரது இடத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் முக்கிய பங்காற்றிவருபவருமான ஜயம்பதி விக்கிரமரட்ன நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. ஆனால், வேறு சில அமைச்சர்களுக்கு பொறுப்புக்கள் மாற்றப்பட்டு நீதி அமைச்சு அவர்களிடம் கொடுக்கப்படலாம் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. (உ-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 21
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கரைச்சி கால்பந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளைஞர்வட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருவையாறு விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விளைபூமி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி மோத தவளள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கனக புரம் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




## சென். மேரிஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஓக. 21
பருத்தித்துறைபாரதிவிளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணத்தைச் சுவீகரித்தது கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம்.
பாரதி விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.
ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல்பாதி. இரண்டாம்பாதியின் 40ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் முன்கள வீரர் நிறோயன் கிடைத்த வாய்ப்பைக் கோலாக மாற்ற அந்தக் கோலே ஆட்டத்தின் இறுதிக் கோலுமாக அமைந்தது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது கட்டைக்காடு சென். மேரிஸ் அணி. ஆட்டநாயகனாக நிறோயன், தொடராட்ட நாயகனாக சக்திவேல் அணியின் லவ்லிதரன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23-108)

## வென்றது ஐயனார்

யாழ்ப்பாணம், ஓக. 21
வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் ரி-20 தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.
வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சீர்திருத்த விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சீர்திருத்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.
அதிகபட்சமாக மதிவதனன் 37 ஓட்டங்களையும். கீர்த்திகன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஐயனார் கயூரன் 3 இலக்குகளையும், விஜிதரன் 2 இலக்குகளையும் வீழ்த்தின.
144 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஐயனார் அணி 17 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது.
அனோசன் 51 ஓட்டங்களைப் பெற்றார்.
ஆட்டநாயகனாக கயூரன் தெரிவானார். (ம-23)

## கலைமகள் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. துடுப்பாட்டத் தொடரில் வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கலைமகள் அணி அபார வெற்றிபெற்றது.
வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வானவில் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கலைமகள் அணி 8 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குக் களமிறங்கிய வானவில் அணி 143 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 30 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
ஆட்ட நாயனாக கலைமகள் விளையாட்டுக் கழக அணியின் ஹட்சன் தெரிவானார்.

## துள்ளுமீன்-தோமஸ் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஓக. 21
கொட்டடி துள்ளுமீன் விளையாட்டு கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் கடற்கரை கபடித் தொடரில் இன்று இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் துள்ளுமீன் விளையாட்டு கழக அணியை எதிர்த்து சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. கொட்டடி கடற்கரையில் இன்று இரவு 7.30 மணிக்கு இந்த இறுதியாட்டம் இடம் பெறவுள்ளது.
குறித்த மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் துள்ளுமீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் துள்ளுமீன் விளையாட்டுக் கழக அணி 51:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் எவர்கீறின் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். தோமஸ்விளையாட்டுக்கழகஅணி மோதியது. 57:36 என்ற புள்ளிகளின்அடிப்படையில்சென்.தோமஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)





வவுனியா மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் வீரர்களுக்கு இடையே, இலங்கை கிரிக்கெட் சபை அண்மையில் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தியது. சுமார் 100 வீரர்கள் அதில் பங்கெடுத்தனர். (ம-23)

## புத்தூர் கலைமதி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 21
இடைக்காடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் கலைமதி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது.
முதலாவது செற்றில் புத்தூர் கலைமதி அணி 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாவது செற்றில் ஆவரங்கால் மத்திய அணி 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.
அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய புத்தூர் கலைமதி அணி 25:20, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக புத்தூர் கலைமதி அணியின் கபிலன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-422-108-23)

## பங்களாதேஷை மிக இலகுவாக எண்ணவில்லை


### சிமித் கருத்து

"பங்களாதேஷ் அணியை இலகுவான அணியென்று எடைபோடவில்லை. சொந்த மண்ணில் அந்த அணி மிகவும் பலமானது" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் இஸ் ரீவ் சிமித்.

ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷி ல் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

"பங்களாதேஷுக்கு எதிரான தொடர் மிகச் சிறப்பானதாக இருக்கும் என்று எண்ணுகிறேன். சொந்த மண்ணில் சிறந்த ஆட்டத்தை பங்களாதேஷ் வெளிப்படுத்த வல்லது. இதனால் இந்தத் தொடர் முழுவதுமாக எங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று சொல்லமாட்டேன். எங்களுடைய திறமை மீது நாங்கள் உறுதியாக இருக்கிறோம். திறமையை சரியான வழியில் வெளிப்படுத்தி இந்தத் தொடரைச் சிறப்பானதாக்குவோம் என்ற நம்பிக்கை உள்ளது. ஆசியக் கண்டத்தில் சிறப்பாக விளையாட நாங்கள் விரும்புகிறோம். தற்போது எங்களுடைய மோசமான சாதனையை மாற்றுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.

இந்தியத் தொடரின்போது சில விஷயங்களில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டோம் என்று நினைக்கிறேன். அதைத் தொடர்ச்சியாக நீண்ட காலம் கொண்டு செல்வது அவசியம். எங்களுடைய திறமையை வெளிப்படுத்த மற்றொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தியத் தொடரில் என்ன கற்றுக்கொண்டோமோ, அதை இந்தத் தொடரில் செயல்படுத்தி முன்னிலை வகிப்போம் என்று நம்புகிறேன்" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)





# மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்திடம் சரண்

### இரண்டரை நாள்களில் முடிந்த முதல் டெஸ்ட்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் மிகமிக இலகுவாக வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி. இரண்டரை நாள்களில் இந்த ஆட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

பெர்மிங்காமில் கடந்த 17ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி 8 இலக்குகளை இழந்து 514 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. அதிகபட்சமாக அலிஸ் டார்குக் 243 ஓட்டங்களையும், ரூட் 136 ஓட்டங்களையும், மலன் 65 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சேஸ் 4 இலக்குகளையும், றோச் 2 இலக்குகளையும், கம்மின்ஸ், கோல்டர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வெறும் 168 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. பிளக்வூட் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களையும், கோப் 25 ஓட்டங்களையும், பவல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 3 இலக்குகளையும், புரோட், ரோலன்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும், மொயின் அலி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

களத்தடுப்பில் ஈடுபடத் தகுதியற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது மேற்கிந்தியத் தீவுகள். இரண்டாவது இன்னிங்ஸிலும் அந்த அணி தடுமாற்றத்தைக் காட்டி 137 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து சுருண்டு மடிந்தது. இதனால் இன்னிங்ஸாலும் 209 ஓட்டங்களாலும் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் புரோட் 3 இலக்குகளையும், அன்டர்சன், ரோலன்ட், மொயின் அலி மூவரும் தலா 2 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



இந்த ஆட்டம் திட்டமிட்டபடி ஐந்து நாள்கள் நடைபெற்றிருந்தால் இன்றுவரை நீடித்திருக்கும். ஆனால் வெறும் இரண்டரை நாள்களில் இங்கிலாந்து வெற்றிபெற்றுள்ளது. மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒட்டுமொத்தமாக 19 இலக்குகளை இழந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பொத்தமை வீழ்த்தினார் புரோட்

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் புரோட், அதிக டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றிய இங்கிலாந்து வீரர் என்ற வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். இரண்டாவது இடத்தில் இருந்த பொத்தமை பின்னுக்குள் தள்ளியே அந்த இடத்தை அவர் பிடித்தார்.

நேற்றுமுன்தினம் முடிவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் புரோட் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். டெஸ்ட் அரங்கில் அவர் ஒட்டுமொத்தமாக 384 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். முன்னாள் வீரர் பொத்தம் 383 இலக்குகளைக் கைப்பற்றியமையே இங்கிலாந்து சார்பாக சிறந்த அடைவாக இருந்தது. இதை தற்போது புரோட் முறியடித்துள்ளார். அதிக இலக்குகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் பந்துவீச்சாளர்கள் வரிசையில் அன்டர்சன் 492 இலக்குகளுடன் முதலாவது இடத்தில் உள்ளார். (ம)



## உடற்கல்வி ஆசிரியரின் பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், ஓக. 21

'பாடசாலை விளையாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் வலய விளையாட்டு இணைப்பு ஆலோசகர்களுக்கு பயிற்சி அளித்தல்' எனும் தொனிப்பொருளில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வதிவிட பயிற்சி முகாம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை மறுதினம் 23ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் பங்குபற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 22ஆம் திகதி தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வட மாகாண உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் மற்றும் உளச் சமநிலையை ஏற்படுத்துவதற்கும் சகல பாடசாலை மாணவர்களையும் ஏதாவது ஒரு விளையாட்டில் ஈடுபடுத்துவதற்கும் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தில் மெய்வல்லுநர் விளையாட்டு, கரப்பந்தாட்டம், றகர், ஜிம்னாஸ்டிக் வலைப்பந்தாட்டம் காற்பந்தாட்டம் உடற்பயிற்சி தகைமை போன்ற 7 விளையாட்டுக்கள் தொடர்பாகவே பயிற்சிமுகாம் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக உடற்கல்விஆசிரியர்களுக்குஅனுப்பி வைக்கப்பட்டிருந்த ளளளகடிதத்தில் இந்தப் பயிற்சிமுகாம் 22ஆம் திகதி முதல் நடைபெறும் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள் ளது. ஆனால் அது 23ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று சத்தியபாலன் மேலும் குறிப்பிட்டார். (ம-422)

## யூனியன் கழக அரையிறுதிகள்

மன்னார், ஓக. 21

விடத்தல்தீவு யுனியன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் விடத்தல்தீவு பிரதேசசபை பொது விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

காலை 10.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் விடத்தல்தீவு யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரிப்பு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

காலை 11.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சின்ன பண்டிவிரிச்சான் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காத்தாளம்பிட்டி சென். பீற்றர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (ம-23)

# இலங்கைக்கு பலமான அடி

## எதிர்ப்பின்றி வென்றது இந்தியா




டெஸ்ட்தொடரைத்தொடர்ந்து நேற்று நடைபெற்ற இந்திய இலங்கை அணி களுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 9 இலக் குகளால் அபார வெற்றிபெற்றது இந்தியா. இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 127 பந்துகள் மீதமிருக்கையில் இந்த வெற்றியைத் தனதாக்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர் மானித்தது. இலங்கை அணியின் ஆரம்பவீரர்களாகடிக்வெல்ல மற்றும் குணதிலக. சிறந்த இணைப்பாட்டத்தை இருவரும் வழங்கினர். சீரான சராசரியில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது. அணி 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் 35 ஓட்டங்களுடன் சாகலின் சுழலில் சிக்கினார் குணதிலக. குணதிலகவின் இடத்தைக் கச்சிதமாக நிரப்பினார் குசல் மெண்டிஸ். மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் டிக்வெல்ல. 64 ஓட்டங்களுடன் டிக்வெல்லவும், 36 ஓட்டங்களுடன் குசல் மெண்டிஸும் ஆட்டமிழந்தனர். குசல் மெண்டிஸ் ஆட்டமிழந்த போது இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன்பின்னர் இலங்கைக்கு தொடர்ந்து இறங்குமுகம்தான். மத்தியூஸ் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் வந்தவர்கள் வெறும் ஒற்றையிலக்கங்களுடன் ஆட்டமிழக்க 216 ஓட்டங்களில் இலங்கையின் கதை முடிந்தது.

பந்துவீச்சில் அக்சர் பட்டேல் 3 இலக்குகளையும், பும்ரா, சாகல், கேதர் யாதவ் மூவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் தவான். நான்கே ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார் ரோகித். தவான், கோக்லி இருவரும் இணைந்து நங்கூரம் இட்டதுபோல் நிலைத்தனர். இருவரும் அடித்தாடவும் செய்தனர். பந்துப்பரிமாற்றத்துக்கு 7 ஓட்டங்கள் என்ற சராசரிக்கும் அதிகமாக வெற்றியிலக்கை நோக்கி விரைவாகச் சென்றது இந்தியா. 36 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் தவான். கோக்லியின் அரைச்சதம் சரியாக 50 பந்துகளில் பதிவானது. மலிங்க, சண்டகன் கூட்டணியால் ஒரு இலக்கையேனும் வீழ்த்த முடியவில்லை. சதம் கடந்தார் தவான். 127 பந்துகள் மீத மிருக்கையில் எதிர்ப்பில்லாத வெற்றியைப் பெற்றது இந்தியா.

(ம)



## இலங்கைரசிகர்கள் ஆர்ப்பாட்டம்

இந்தியாவுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்ததையடுத்து இலங்கை கிரிக்கெட் இரசிகர்களால் நேற்றிரவு தம்புள்ளை கிரிக்கெட் அரங்கம் முன்றிலில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதனால் இலங்கை அணி வீரர்கள் அரங்கத்திலிருந்து விடுதிக்குச் செல்வதற்கு சுமார் 30 நிமிடங்கள் தாமதமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அணியின் தொடர்ச்சியான தோல்விகளைக் கண்டித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சு நடத்திய பொலிஸார், அவர்களை விளையாட்டரங்கின் முன்றிலிலிருந்து அப்புறப்படுத்தினர். (வ)

### மரண அறிவித்தல்

#### கந்தையா நாகராசா



சடையாளி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகராசா 18.08.2017 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் நடராசா (சுவிஸ்), தர்மரட்ணம் (சுவிஸ்), குணரட்ணம் (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும் செல்வராணியின் கணவரும் கௌசல்யா (லண்டன்), விதுசன், ரனியா (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரனின் (லண்டன்) மாமனும் மனோன்மணி, வனிதாமணி, காலஞ்சென்றவர்களான இந்திராணி, முருகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பந்தியடி லேன்,
4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.
077 612 8790,
077 269 8954

கோடிபதி ஷனிடா
சீட்டிழுப்பு வாரம்: 178
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 20.08.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 98,900,308/-
N 05 07 45 55
03 16 49 67

ராசி அதிர்ஷ்டம்
திகதி 2017.08.20 | வெற்றி வாரம் 2174 | வர்ணம் ஊதா
மகரம்
வெற்றி இலக்கங்கள் 19 43 44 56
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 471, 120/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 03 09 23 37
2017.08.22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

EASYWAY யின்
புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி
EASY WAY யின் ஆங்கில பாடப்புத்தகங்களைக்கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்தவர்கள் சரளமாக ஆங்கிலத்திலும் பேசுவதை ஏற்கனவே எமது நேரடி வகுப்புகளில் நாம் நிரூபித்துள்ளோம்.
வகுப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள்,பல்கலை கழக மாணவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்
(23.08.2017 இற்குமுன் இணைவேருக்கு
பாடநெறிக்கட்டணம் : ரூபா 2000 மட்டுமே.பின்னர் 6500.00
90 பாடங்களையும், 90 வீடியோ பாடங்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி ஆகக் கூடியது 90 - 120 நாட்களுக்குள் ஒப்படைத்தல்வேண்டும.
இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.
கட்டணத்தை வங்கி மற்றும் தபாலகங்கள் மூலமும் செலுத்தமுடியும்.
EASYWAY 403, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். 021 567 4133 077 621 4567

மணமகள் தேவை
யாழ் கிறிஸ்தவ (R.C) கௌரவ குடும்பம் 1986. பட்டதாரி அரச உத்தியோகத்தருக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
077 349 6085

புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L Group Classes
A/L - 2018 / 2019
ஆரம்பம் - 26.08.2017(சனிக்கிழமை)
அரசியல் - திரு.P.சந்துரு (Med)
தமிழ் - திரு. N.பரன் M.phil (Tamil)
இந்துநாகரிகம் - திரு.P.சந்திரன் (MA)
புவியியல் - திரு. PSV.டினேஸ் BA(Hons)
தனிப்பாடங்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.
Further Details:-
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

Galaxy Star
வெற்றி வாரம் 187 | திகதி 20.08.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 14 16 29 39
08 15 34 38
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 423, 632/-
2017.08.23 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும். வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.0 8.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.